South Harrow Food & Wine
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow,
Middlesex Ha2 8 du
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள்
CD Audio's அத்துடன் புதிய தமிழ்
திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்)
We Accept All Credit cards & Cheques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 16 — 22 ஜூலை 1998 முழக்கம்: 183

Sakthy Video
Video Filming for Wedding's
B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont> 0181 -8856822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

## புளியங்குளம்–மன்னன்குளம்–மாங்குளம்–ஒலுமடு சமர்கள்

# எமது 15 படைப்பிரிவுகள் பங்கேற்றன

### விடுதலைப் புலிகள் முதல் தடவையாக பகிரங்க அறிவிப்பு

(14.07.98)

வன்னியில் கடந்த 425 நாட்களாக இடம்பெறும் 'ஜெயசிக்குறுய்' சமர்களில் தமது 15 படைப்பிரிவுகள் பங்கேற்றன என விடுதலைப் புலிகள் முதற் தடவையாக அறிவித்துள்ளனர். புளியங்குளம், மன்னன்குளம், மாங்குளம், ஒலுமடுப் பகுதிகளிலும் கனகராயன்குளம் கரிப்பட்டமுறிப்பு பகுதிகளிலும் இடம் பெற்ற பெரும் சமர்கள் பற்றி விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட விரிவான அறிக்கையொன்றில் தமது 15 படைப் பிரிவுகளின் வீரம் செறிந்த போர் ஆற்றல் பற்றி விடுதலைப் புலிகள் விபரித்துள்ளனர். புளியங்குளம் சமர் இடம்பெற்றபோது புளியங்குள நகருக்கு ஒரு கிலோமீற்றர் முன்னே புலிகளின் பெண்களின் படையணிகளின் ஒன்றான 'மாலதி படைப்பிரிவு' வியூகம் அமைத்து சமர்புரிந்தது. புளியங்குளம் நகர் பகுதியில் புலிகளின் மூன்று முன்னணி அணிகளான 'சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு, சிறுத்தைப்படையணி, இம்ரான் படையணி' என்பன நிறுத்தப்பட்டிருந்தன. சிறீலங்காவின் இரு பிரதான சக்தி மிக்க போர் அணிகளான 53-ம் 55-ம் படையணிகள் புளியங்குளம் நகரைக் கைப்பற்ற பல மாதங்களாகப் போராடியுள்ளன. சிறீலங்கா மேலதிக துருப்புகளைக்

(☞ 2ம் பக்கம்)

## திருமலை இராணுவ பொலிஸ் கூட்டுமுகாம் வீழ்ந்தது

### மோட்டார் ஆயுதங்கள் புலிகள் வசம்

திருமலை பூவரசம்திடல் பகுதியில் அமைந்திருந்த இராணுவ கூட்டுமுகாம் விடுதலைப் புலிகளின் சிறப்பு அதிரடிப் படையினரால் தாக்கி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. புலிகளினால் கைப்பற்றப்பட்ட இம் முகாமில் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து 60 (மி.மீ) மோ

(☞ 2ம் பக்கம்)

# யாழ். புதைகுழிகள்

### 'யுக்திய' தரும் அதிர்ச்சித் தரவுகள்

யாழ்ப்பாணக்குடாநாட்டில் சிறீலங்கா படையினரின் 'சூரியக் கதிர்' நடவடிக்கையின் பின்னர் காணாமல்போன 700 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடங்களை கொழும்பிலிருந்து வெளியாகும் 'யுக்திய' என்னும் சிங்கள இதழ் வெளிப்படுத்தியுள்ளது.

கிருசாந்தி குமாரசாமியின் பாலியல் வல்லுறவு படுகொலையில் நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்ட சிப்பாய்கள் புதை குழிகள் தொடர்பான விபரங்களை நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே இந்த அதிர்ச்சித் தரவுகள் வெளியாகியுள்ளன.

செம்மணி வீதிக்கு அருகாமையில் உள்ள புதைகுழிகளின் அமைவிடத்தினை வரைபடம் ஒன்றின் மூலமாக சுட்டிக்காட்டியுள்ள யுக்திய செம்மணி காவல் அரண்களுக்கும் நாவற்குழி பாலத்திற்கும் இடைப்பட்ட வயல் வெளிகளிலேயே இப் புதைகுழிகள் அமைந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் பெரும் மோதல்

### சிறீலங்கா படைகள் பின்வாங்கின

(12.07.98)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை கைப்பற்றும் நோக்குடன் கிளிநொச்சி பகுதியில் இன்று மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மேற்குப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி எறிகணைகளை வீச்சுக்களையும், குண்டு வீச்சுக்களையும் மேற்கொண்டவாறு சிறீலங்காப் படைகள் நகரத் தொடங்கின.

இராணுவத்தின் நகர்வினை முறியடிக்க விடுதலைப் புலிக

(☞ 2ம் பக்கம்)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## இராணுவ கட்டமைப்பில் பாரிய மாற்றம்

### வவுனியா இராணுவ தலைமையகம் கலைப்பு?

சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. தற்போதுள்ள முப்படைத் தளபதிகளை கட்டுப்பொறுப்பு தளபதி ஒருவரின் பொறுப்புக்குள் கீழ்கொண்டு வரவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ் வருட இறுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத் திட்டத்தில் வவுனியா இராணுவத் தலை

(☞ 2ம் பக்கம்)



பிரான்சின் 2வது புரட்சி
3 : 0

(விபரம் 16-ம் பக்கம்)

## பிரான்சில் மாவீரர் நாள் மெய்வல்லுனர் போட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும் மாவீரர் நாள் மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பமாக உள்ளன.

எதிர்வரும் 19.07.98 ஞாயிறு அன்று காலை ஒன்பது மணிக்கு STADE SULES- LADAIMEGUE (M° Porte de Pantin) மைதானத்தில் தெரிவுப் போட்டிகளும், 02.08.98 அன்று இறுதிப் போட்டிகளும் நடைபெற உள்ளன.

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road,
Wembley,
Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

RCS PARIS
B 399 673 110 (95B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
P. Sivaguru

Impression:
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail:eelamurasu@aol.com

ஈழமுரசு விநியோக தொடர்புகளுக்கு:

பாரிஸ்:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
பொ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 29
அருந்தவராஜா
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag People Soup
Henrich Str-83; 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 01 271 7374

லண்டன்:
ஜெயந்தன் - Tel: 0956900145
குமரன் - Tel: 0956277710

இத்தாலி:
மக்கள் கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425827

நெதர்லாந்து:
தமிழ்மாடம்
Tel: 076 5425804

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமலை...

மோட்டார் ஒன்றும் ஏனைய பல இராணுவத் தளவாடங்களும் தம் வசப்படுத்தப்பட்டுள்ளன. செய்தித் தணிக்கை காரணமாக உயிரிழப்புகளை அரசு உடனடியாக வெளியிட மறுத்துவிட்டது. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட செய்திகளும், இராணுவ தரப்பு உயிரிழப்பு பற்றி இன்னமும் அறிவிக்கவில்லை. ஆனாலும் படைத் தரப்பிற்கு அதிகப்படியான உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில வாரங்களாக சிறப்புப் பயிற்சி பெற்ற புலிகளின் கொமாண்டோ அணியினரே இத் தாக்குதலில் பங்கெடுத்துக் கொண்டதாகவும் திருமலைச் செய்திகள் தெரிவிப்பதுடன், வேவுப் புலிகள் மூலம் மிகத் துல்லியமான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் இவ் இராணுவ பொலிஸ் கூட்டு முகாமின் மீதான தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளன.

கடந்த 10ம் திகதி முதல் மூதூர் பகுதியை நோக்கி இரகசிய நகர்வினை மேற்கொண்ட புலிகள் அணி அங்கு தமது நிலைகளில் தங்கியிருந்தனர். 12ம் திகதி இரவு 10.45 மணியளவில் இம் முகாமின் மீதும் உதவிக்கு வரமுனைந்த ஏனைய முகாம்களின் மீதும் மின்னல்வேக அதிரடிகளைத் தொடுத்தனர். புலிகளின் தாக்குதலால் நிலைகுலைந்த படைத் தரப்பு இழப்புக்களுடன் முகாமினைக் கைவிட்டுவிட்டு பின்வாங்கிக்கொண்டது.

முகாமினைக் கைப்பற்றிய புலிகளின் அணிகள் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்த ஆயுத தளவாடங்களைக் கைப்பற்றிய பின்னர் முகாம் கட்டடங்களைத் தகர்த்துவிட்டு முகாம் திரும்பியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ...

பைலகத்தினை முற்றாகக் கலைத்து அதற்கு புதிய அதிகாரிகளை நியமிப்பது அல்லது மேலும் அதனைப் பலப்படுத்துவது என்ற திட்டங்களும் அடங்கியுள்ளன.

புதிதாக நியமிக்கப்படவுள்ள கூட்டுப்பொறுப்பு தளபதிக்கு பயங்கரவாத செயல்களை அடக்குவதற்கான பூரண கட்டளை அதிகாரமும் திட்டமிடும் அதிகாரமும் வழங்கப்படவுள்ளது. இவரின் கட்டளைப்படியே முப்படைத் தளபதிகளும் பணியாற்றமுடியும். இராணுவத்திற்கு உதவியாக புள்ள பொலிசாரும் இவரது உத்தரவுக்கு அமைவாகவே பணிபுரியும்படி புதிய இராணுவக் கட்டமைப்பு அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அமெரிக்க நாட்டில் இருப்பதற்கு ஒத்ததான இராணுவத் தலைமையினையே சிறிலங்கா அமைக்கத் திட்டமிட்டு வருவதாகவும் இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளிநொச்சியில்...

ளின் தாக்குதல் அணிகள் களத்தில் இறங்கின. முன்னேற முயன்ற இராணுவத்தை இடைமறித்த விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர். பலமான காப்பரண்களில் நின்று விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை தொடுத்தனர்.

புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு உள்ளான இராணுவ அணிகள் தமது முன்னேற்ற முயற்சியை கைவிட்டு விட்டு பலத்த இழப்புக்களுடன் தமது பழைய நிலைகளுக்கு திரும்பின.

இத் தாக்குதலின் போது படையினரின் கவச வாகனம் ஒன்று அழிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் பயணம் செய்த படையினர் அனைவரும் கொல்லப்பட்ட தாகவும் தெரியவருகிறது.

இழப்புகளுக்கு உள்ளான படையினர் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புளியங்குளம்...

குவித்தபோது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் 'ஜெயந்தன் படையணியையும் கடல் படைப்பிரிவையும்' புளியங்குளத்தின் கிழக்குப் புறமாக நகர்த்தினர். புதூர் சந்தி மீதான புலிகளின் துணிகரமான மீட்பு தாக்குதலை ஜெயந்தன் படையணி, கடற்புலிகளின் படையணி ஒன்றின் உதவியுடன் நடாத்தியதாக புலிகள் அறிவித்துள்ளனர். இங்கு புலிகளினால் தோற்கடிக்கப்பட்டது சிறிலங்காவின் விசேட படைப்பிரிவான எயார் மொபைல் படையணியாகும்.

மன்னன்குளம் சமரில் 'மாலதி படைப்பிரிவும், புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த விசேட கொமோண்டோக்களும் ஈடுபட்டனர். அவர்களுக்கு உதவியாக திருமலைப் படைப்பிரிவு ஒன்று நகர்த்தப்பட்டது. சமர் உக்கிரம் அடைந்த போது ஜெயந்தன் படைப்பிரிவு புலிகளினால் இங்கு அனுப்பப்பட்டது. அமெரிக்க இராணுவத்தினால் பயிற்சி பெற்ற சிறிலங்கா விசேட இராணுவக் கொமாண்டோக்கள் இங்கு தோற்கடிக்கப்பட்டனர்.


மாங்குளம் நகரைச் சுற்றுதைப் படையணிகள் கிழக்குப் புறமாக நிலையெடுத்துப் பாதுகாக்கின்றன எனவும் மையப் பகுதியை 'போர் வல் (4:4) எனும் படையணி பாதுகாப்பதாகவும் அறிவித்துள்ள புலிகள், நெடுங்கேணியில் எதிரி திட்டமிட்ட பாரிய டாங்கி சமரை 'சோதியா படைப்பிரிவும், சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவும், இறுத்தைப் படையணியும்' ஒன்றிணைந்து முறியடித்தன என குறிப்பிட்டுள்ளனர்.

மூதூர் சமரிலும் கேணல் கிட்டு பீரங்கி படைப்பிரிவும் விக்டர் கவச எதிர்ப்பு அணியும்' பங்கேற்றுள்ளன.

ஜெயசிக்குறுய் போர் நடவடிக்கை ஒருவருடம் பூர்த்தியானதையொட்டி புலிகள் விடுத்த விசேட வெளியீடு ஒன்றில் வெளியாகியுள்ள இவ் விபரங்கள் தமது படையணிகளை போரின் தேவை கருதியும் தந்திரோபாயங்களுக்கு ஏற்பவும் தலைவர் வழிநடத்தினார் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

# பத்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு: 29.03.1973



உதிர்வு: — 17.07.1989

## செல்வன் கந்தசாமி உதயகுமார்
### (குப்பிளான்)

**அன்பான மகனே! அன்பான தம்பியே! அன்பான அண்ணாவே! நீ எம்மைவிட்டு பிரிந்து வருடங்கள் பல கழிந்தாலும் எம்மால் மறக்க முடியவில்லை.**

நீ எம்முடன் வாழ்ந்த நாட்களில்
எந்த நாட்களை மறப்பது
கருவில் இருந்து பிறந்த
அந்த நாளையா?
உன்னை பிரிந்த
அந்த நாளையா?

எதையும் மறக்க முடியவில்லை
தத்தி நடை நடந்து
மழலை மொழிபேசி
மகிழ்ந்த - அந்த
நாளையா?

நண்பருடன்....
பள்ளிப்பருவத்தில்
துள்ளி விளையாடி....
அக்கா அண்ணன்
தம்பியுடன்
கூடிவாழ்ந்த - அந்த
நாளையா?
எதையும் மறக்க முடியவில்லை.

எது இருந்தும்
என்ன?
விடியாத பொழுது

நிலவு கட்டெரித்தது
காற்று பேச மறந்தது
இரவும் பகலும்
சந்திக்காத நேரம்
அமைதிப் படையின்
ஆக்கிரமிப்பில்...
அடிமைகளாக நம்
தேசம்
களம் புகுந்தாய்...
வீர வேங்கையாய்...
களம் பல கண்டு
வீரத்தாயின் தலை மகனாய்
இன்று!

உனது கல்லறை
உடைக்கப்பட்டிருக்கலாம்
ஈழ வரலாற்றின் பக்கங்களில்
உனது பெயர்
உச்சரிக்கப்படுகின்றது...

நீ எம்முடன்
இருந்த நாட்களின்
நினைவுகளை
மறக்க முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்
அன்பு அம்மா, அப்பா, அக்காமார், அண்ணன்மார், தம்பி,
அண்ணி, மைத்துனன், உற்றார், உறவினர் நண்பர்கள்.

தகவல்: கந்தசாமி தத்துவான்
லுட்சேர்ன் (சுவிஸ்)

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37

## தமிழீழச் செய்தித் தொகுப்பு

# மட்டுநகரில் பாரிய சுற்றிவளைப்புத் தாக்குதல் பதின்நான்கு கொமாண்டோக்கள் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படை அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய பாரிய சுற்றிவளைப்புத் தாக்குதல் ஒன்றில் 14 கொமாண்டோக்கள் பலியாகியதுடன், மேலும் பலர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

சிறிலங்காப் படையினரை மிகவும் அதிர்ச்சியடையச் செய்த இத் தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகள் கிழக்கில் தமது நிலையின் பலத்தினை எடுத்துக் காட்டியுள்ளனர்.

கடந்த 7ம் திகதியன்று பதுளைச் சந்தியிலிருந்து 19வது மைல் கல்லினைக் நோக்கி இவ் அதிரடிப் படையணி சென்ற பொழுதே விடுதலைப் புலிகள் பாரிய நிலைகொடுப்புடன் காத்திருந்து தமது திடீர் அதிரடியினை படையினர் மீது நடாத்தியிருந்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலால் நிலை குலைந்த படையினர் எதிர்த் தாக்குதலை நடாத்தியபடி பின்வாங்கத் தொடங்கினர். விடுதலைப் புலிகளும் சளைக்காது துரத்தித் துரத்தித் தாக்கினர். ஈற்றில் படையினர் வசமிருந்த ஆயுதங்களையும் தளபாடங்களையும் கைப்பற்றிய புலிகள் வீரச்சாவடைந்த சக போராளிகளுடன் தளம் திரும்பினர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஜி 3 ரக எல்எம்ஜியும் அடங்கியுள்ளது. புலிகள் தரப்பில் 11 போராளிகள் வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் படுகாயப்படுத்தப்பட்ட படையினரில் பலர் வைத்தியசாலைகளில் மரணமடைந்து வருவதால் இராணுவத்தினரின் இழப்பு மேலும் அதிகமாகியுள்ளது.

## புலிகளின் இராணுவ வைத்தியப்பிரிவு வாந்திபேதி தடுப்பு நடவடிக்கையில்

தமிழீழப் பிரதேசங்களில் தற்பொழுது பரவிவரும் வாந்திபேதி நோயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முழு மூச்சான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் இராணுவ வைத்தியப் பிரிவும் ஈடுபட்டு வருகிறது. தமிழீழ சுகாதார சேவை, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு ஆகியவற்றின் ஒத்துழைப்போடு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் நாட்டான் கண்டல், மல்லாவி, இரணை இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதுடன் சுற்றாடல் கிராமங்களில் வாந்திபேதி பற்றிய விழிப்பு கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழீழத்திலிருந்து கிடைத்த செய்திகளின் படி வாந்திபேதி நோய் தற்பொழுது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டதாக தெரியவருகின்றது.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

- ★ யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாளாந்தம் சராசரி 3 தற்கொலை முயற்சியாளர்கள் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் அதிகமானோர் 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களாவார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
- ★ கிழக்குமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் நியமனங்கள் வழங்காதமைக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சே பொறுப்பேற்க வேண்டுமென இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
- ★ சிறிலங்காவின் மக்கள் வங்கியின் வாழைச்சேனைக் கிளையில் அடைவுவைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் கடந்த வாரம் ஏலவிற்பனை செய்யப்பட்டுள்ளது.
- ★ மிருசுவில் பங்குத்தந்தையாக கடந்த ஆறு வருடங்கள் பணிபுரிந்து வெளிநாடு செல்லும் வண.பிதாவிற்கு அப்பகுதி மக்கள் பிரிவு உபசார வைபவங்களை நடாத்தியுள்ளனர். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது இவர் மக்கள் பணியில் முழு மூச்சாக செயற்பட்டவராவார்.
- ★ மட்டு நகரில் உள்ள சிறிய மிருகக் காட்சிசாலை பொன்றிலிருந்த குரங்கு ஒன்று இரு சிறுமியரை கடித்துக் காயப்படுத்தியுள்ளது.
- ★ வவுனியா நீதி அவையாளர் இளைஞர் வாகனமொன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த ஏஎஸ்பியோ மணியம் என்ற அதிகாரி பலியாகியுள்ளார்.
- ★ தென்மராட்சி பகுதியில் குளவிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. தற்போது வீசும் சோளகக் காற்றினால் குளவிக் கூடுகள் கலைந்து விழுவதே இதற்கு காரணமாகும். குளவிகளால் கடுமையாக கொட்டப்பட்ட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
- ★ யாழ். அரியாலை பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.
- ★ அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதி நெல்வயல்களில் 'இலைச்சுருட்டி' நோய் வெகுவேகமாக பரவி வருவதால் 30 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன.
- ★ முதூர் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதால், இங்கு சட்டவிரோத சம்பவங்கள் தலைதூக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.
- ★ யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் இந் அரசறிவியலும் சமூகவியலும் எனும் புதிய துறை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத்துறையின் தலைவராக கலாநிதி சண்முகலிங்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ★ யாழ் வைத்தியசாலையில் பெண் குழந்தையைப் பிரசவித்த தாயொருவர் வைத்தியசாலையிலிருந்து தலைமறைவாகியுள்ளார்.
- ★ திருமலை 10-ம் குறிச்சிப்பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இருவர் மீண்டும் கரைதிரும்பாததினால் அவர்களது உறவினர்கள் மிகவும் கவலை கொண்டுள்ளனர்.

## நவாலி படுகொலைகளின் 3வது நினைவுநாள்

1995ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதியை தமிழர்கள் தமது வாழ்வில் மறந்திருக்க முடியாது. சிறிலங்கா இராணுவத்தின் சூரியக்கதிர் அரக்கர்களுக்குப் பயந்து நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்த மக்கள் மீது சிறிலங்கா விமானப் படையின் புக்காரா விமானம் குண்டுகளை அள்ளி வீசியது. தேவாலயமே பிணக்காடாக மாறியது. 150 பேர் துடிதுடித்து மாண்டனர். மேலும் 200 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலர் தமது அவயவங்களை இழந்தனர்.

அந்தக் கொடூரத்தின் 3வது வருட நினைவுநாள் யாழ். குடாவில் நினைவு கூரப்பட்டது.



## கரும்புலி தினத்தில் யாழ். குடாவில் சல்லடைத் தேடுதல்

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினத்தன்றும் அதற்கு முதல் நாளும் யாழ்குடா நாட்டில் என்றுமில்லாத அளவு சுற்றிவளைப்புத் தேடுதல்கள், சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இராணுவ முகாம்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள கரும்புலிகள் சிலர் குடாநாட்டுக்குள் பிரவேசித்திருப்பதாக இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்ததையடுத்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக வடமராட்சிப் பகுதியிலேயே படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இருந்தன.

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாக கடுமையான தேடுதல்கள் நடைபெற்றன. இப் பகுதி மக்கள் யாவரும் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் வளாகத்திற்கு கொண்டு செல்லப் பட்டு மிகக் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். யாழ் நகரப்பகுதியின் பல வேறு இடங்களிலும் வீதிச் சோதனைகளும் திடீர் சுற்றிவளைப்புகளும் நடாத்தப்பட்டன.

## ஆனையிறவு தளத்தின் அதிகாரியாக சரத்முனசிங்கா

சிறிலங்கா இராணுவ பேச்சாளராக இருந்த பிரிகேடியர் சரத் முனசிங்கா மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து ஆனையிறவு இராணுவ தளத்தின் கட்டளை அதிகாரியாக கடந்தவாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளராக இருந்த சரத் முனசிங்கா செய்தித்துறை ஊடகங்களின் கடுமையான விமர்சனத்திற்கு ஆளானவர். இராணுவ இழப்புக்களை மறைத்தும் புலிகளின் இழப்புக்கள் தொடர்பான விபரங்களை மிக அதிகமாகவும் பிரச்சாரப் படுத்தியும் வந்தவராவார்.

1965ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தில் இணைந்த சரத் முனசிங்காவிற்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேஜர் ஜெனரல் தர பதவி உயர்வு அரசினால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவு தள கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் தென்னக்கோன் நியமனம் பெற்றுள்ளார். இவர் இராணுவ புலனாய்வுப் பிரிவின் இயக்குனராக இருந்தவராவார்.

## தமிழ்த் தின முடிவுகள் வெளியாகின

பூநகரி தமிழ்க்கலை மன்றத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் கடந்த வாரம் வெளியாகியுள்ளன. வினாவிடை, மற்றும் கரகப் போட்டிகளில் ஞானகலை காந்தி நிலையம் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டுள்ளது. பட்டிமன்றப் போட்டியில் பங்குபற்றிய — தமிழோதிவு படிப்பகக் கூட்டுறவுச்சங்க சமாசத்தினர்கள் முதலாமிடத்தையும், வில்லுப்பாட்டு, நாடகப் போட்டிகளில் பண்டிதர் கலை மன்றம் முதலாமிடத்தையும் தட்டிக் கொண்டுள்ளது.

# குடாநாட்டில் நிர்க்கதியான நிலையில் 19,190 பெண்கள்

(யாழ்ப்பாணம் ஜூலை 10)

யாழ்ப்பாணக்குடாநாட்டில் இடம் பெற்ற யுத்தம் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக 19,190 பெண்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதாக அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ்குடா நாட்டிலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நெடுந்தீவைத் தவிர்ந்த ஏனைய 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்தப் புள்ளி விபரங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பால் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 1700 பெண்களும் கோப்பாய் பிரிவில் 2653 பெண்களும், சங்கானையில் 1302 பெண்களும், சண்டிலிப்பாய் 1302 பெண்களும், கரவெட்டியில் 1902 பெண்களும், பருத்தித்துறையில் 1902 பெண்களும், உடுவிலில் 1896 பெண்களும், மருதங்கேணியில் 227 பெண்களும், வேலணையில் 391 பெண்களும், பளையில் 226 பெண்களும், சாவகச்சேரியில் 2797 பெண்களும், நல்லூரில் 2816 பெண்களும், சங்கானையில் 1302 பெண்களும், சண்டிலிப்பாயில் 1423 பெண்களும், காங்கேசன்துறையில் 558 பெண்களும், தெல்லிப்பளையில் 905 பெண்களும் தங்கள் குடும்பத் தலைவரை அல்லது குடும்பத்தின் பிரதான உழைப்பாளரை இழந்து நிர்க்கதியான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 6 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 14 பேராகவும், 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 856 பேராகவும் 31 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 6741 பேராகவும், 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11599 பேருமாக உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களில் தங்கி வாழும் நிலையில் சமூக அமைப்பில் வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டதால் தற்போது சொந்தக்காலில் நின்று வாழ்க்கையை நடத்துவது முடியாத நிலையில் இருக்கின்றார்கள் என்று அந்த புள்ளி விபரக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறுமையின் கொடுமையால் மூன்று பெண் பிள்ளைகளை கொன்ற தந்தை தானும் தற்கொலைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

வறுமை காரணமாக தனது மூன்று பெண் பிள்ளைகளை கிணற்றில் தள்ளிக்கொன்றுவிட்டு தானும் அதே கிணற்றில் தற்கொலை செய்ய முயன்றபோது தந்தையொருவர் அயலவர்களால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் அளவெட்டியில் வசித்துவந்த எஸ். விஜயகுமார் என்பவரே தனது பிள்ளைகளை கிணற்றில் தள்ளிகொலை செய்தவராகும். இவரது பிள்ளைகளான பாமினி (19), லிங்காதேவி (17), தயாளினி (12) ஆகியோரே கிணற்றில் தள்ளப்பட்டதால் கொலையுண்டவர்களாகும்.

குடாநாட்டு இராணுவ ஆக்கிரமிப்புக்கு பின்பு சிறிலங்கா படையினரின் கட்டுப்பாடுகள் காரணமாக தொழில் செய்ய முடியாத சூழ்நிலையில் விஜயகுமார் - வைது வந்த தனது பிள்ளைகளை பராமரிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அதிலும் இவரது மூத்த மகள் பாமினி (19) வாய்பேச முடியாதவராகையால் அவருக்கு திருமணம் செய்து வைக்க முடியவில்லையே என்ற கவலையும் அவருக்கு இருந்து வந்ததாகவும் இதனால் மிகவும் மனமுடைந்துபோய அவர் தனது மூன்று பிள்ளைகளையும் கொன்று தானும் தற்கொலை செய்ய முயன்றார் என்றும் கூறப்படுகின்றது.

## மட்டு நகரில் வெறிநாய் கடியால் இறப்பவர் அதிகம்

மட்டக்களப்பு நகரில் விசர் நாய்க் கடிநோய் காரணமாக மரணமடைபவர் தொகை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் வைத்தியர்களின்மையாலும் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி பற்றாக்குறையாலும் இவ்வாறான உயிர் இழப்புகள் அதிகம் நிகழ்கின்றன. கடந்தவாரம் முனைத்தீவு அம்பாறை ஆகிய பகுதியில் இருவர் விசர்நாய் கடி காரணமாக இறந்துள்ளனர்.

இம் மரணங்கள் குறித்து கருத்து வெளியிட்ட மருத்துவ அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் 35,000 இற்கும் மேற்பட்ட கட்டாக் காலி நாய்கள் அலைந்து திரிவதாகவும், இவற்றினாலேயே விசர்நாய்க்கடி மரண வீதம் இங்கு அதிகரித்துள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## கல்குடாவில் கொல்லப்பட்டவர் புலிகள் என தெரிவிப்பு

வாழைச்சேனைக் கல்குடாப் பகுதியில் கடந்த வியாழனன்று காலை இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரை விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என படையினர் தெரிவித்தபோதும் கொல்லப்பட்ட இளைஞர் சாதாரண பொதுமகன் என மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.

முன்னதாக சுட்டுக்கொல்லப்பட்டவரது சடலத்தை இராணுவம் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகளிடம் கையளித்தது. ஆயினும் இச் சடலத்தை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்ததுடன், கொல்லப்பட்டவர் தமது உறுப்பினர் அல்ல எனவும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்திருந்தனர்.

இதன்பிறகு செஞ்சிலுவைச் சங்கம் சுட்டுக்கொல்லப்பட்டவரது விபரங்களைச் சேகரித்தபோது பலியானவர் பேத்தாழையைச் சேர்ந்த நல்லரத்தினம் யோகநாதன் என தெரியவந்தது. அதன் பிறகு இவரது மனைவியிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

## தலதாமாளிகை குண்டுவெடிப்புத் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள்மேல் நடவடிக்கை

கண்டி தலதா மாளிகை மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து கண்டி பொலிஸ் பிரிவின் பல பொலிஸ் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்வதுடன், அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவும் சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக விசாரணை நடாத்திய ஆணைக் குழு செய்துள்ள சிபார்சின்படி குற்றவாளிகளாகக் காணப்பட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் மீதே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் மீது இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## 3 கோபுரங்கள் தகர்ந்தன

மதவாச்சிப் பகுதியிலிருந்து மன்னார் நகருக்கு மின்சாரம் வழங்கும் உயரழுத்த மின் கோபுரங்கள் மூன்று கடந்த 6ம் திகதி அதிகாலை குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மன்னார் நகரம், பேசாலை ஆகிய பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

கடந்த மாதம்தான் மதவாச்சியிலிருந்து மன்னாருக்கான மின் விநியோகம் வழங்கப்பட்டமை குறிப்பிடப்பட்டது.

## புல்மோட்டை தாக்குதலில் 5 படையினரைக் காணவில்லை

திருமலை புல்மோட்டை பகுதியில் விடுதலைப் புலிகள் கடந்த 9ம் திகதி நடாத்திய தாக்குதல் ஒன்றில் ஐந்து சிறிலங்கா படையினரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு 11 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது. ரோந்து பணியின்போது புறப்பட்ட படையினரே புலிகளின் பொறிக்குள் சிக்கிக்கொண்டனர். அவ்விடத்திலே ஒரு சிப்பாய் இறந்தும், மேலும் இருவர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

சிதறி ஓடிய படையினரில் ஐவரைக் காணவில்லை என அரசு அறிவித்துள்ளது. இவர்கள் கொல்லப்பட்டார்களா, அல்லது புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டார்களா என்பது இதுவரை உறுதிசெய்ய முடியவில்லை.

## ஜே.வி.பி காலத்தில் காணாமல் போனோர் பற்றிய விசாரணை

ஜே.வி.பி நடவடிக்கைகள் சிறிலங்காவின் தென் பகுதியில் தீவிரமாக நடந்தபோது நாட்டின் பல பகுதிகளிலும் காணாமல் போன சிங்கள இளைஞர்கள் பற்றிய விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இவ் விசாரணைகளை நடாத்துவதற்கென நியமிக்கப்பட்ட ஆணைக்குழு நாட்டில் சகல பகுதிகளிலிருந்தும் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரணைக்கு எடுத்துள்ளது.

இவ் ஆணைக்குழுவிற்கு இதுவரை பதினொராயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்த இவ் ஆணைக் குழுவின் செயலாளர், காணாமல் போனோர் அதிகமாக உள்ள இடங்களிலே விசாரணைக் குழுவின் அமர்வுகள் இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பதுளையில் தமிழர் கைது

மலையக பதுளை நகரத்தில் பாதுகாப்புப் படையினர் கடந்த வியாழனன்று நடாத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் ஹாலி — எல பகுதியைச் சேர்ந்த இராஜேந்திரன் என தெரிய வந்துள்ளது.

ஹூப்பற்றால் மாநகரில் தரத்திற்கும் —மலிவுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

நியூகோப் அன் A.T.A. Travel

மக்கள் மனங்கவர் ஜவுளியகம் - மளிகையகம்

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள் மங்கல வைபவத்திற்குத் தேவையான அனைத்துக்கும் வீடியோ, ஓடியோ பிரதிகளிற்கும் நாடுங்கள்

இலங்கை, இந்திய ஆசிய, ஆபிரிக்க அனைத்து நாடுகளிற்கும் குறைந்த செலவில் விமான பிரயாண சீட்டுக்கள் பெற நாடுங்கள்

New Co -op

Asiatische Lebensmittel, Gathe 1 a

42107 Wuppertal -Elberfeld

Tel: 0202 -455106

# ராஜினி பாலியல் கொலை வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது

1996 செப்டெம்பர் 30-ம் திகதியன்று கோண்டாவில் சிறிலங்கா இராணுவ காவலரணில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ராஜினி வேலாயுதம்பிள்ளையின் வழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த ராஜினி கடைக்கு செல்வதற்காகத் தயாராகிக்கொண்டிருந்தார். இதன் அலுவலாக கோண்டாவிலிலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு சென்று திரும்பிய வேளையே கோண்டாவில் காவல் அரணில் நின்ற சிங்களப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நான்கு படையினரால் அவர் மீது இக்கொடுமை நிகழ்த்தப்பட்டது. பின்னர் அவரது சடலம் அப்பகுதியில் உள்ள வீடொன்றின் மலசல கூடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

இவர் மீதான வழக்கை விசாரித்து வந்த கொழும்பு பிரதம நீதிபதி முனிதாஸ நாணயக்கார இவ் வழக்கை கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு பாரம்கொடுத்துள்ளார்.

# அரிசியுடன் வரும் பார வண்டிக்குள் வெடிகுண்டு

வவுனியாவில் இருந்து அரிசி மூடைகளுடன் கொழும்பு செல்லும் பார வண்டிகளில் வெடிகுண்டுகள் கொண்டுவரப்படுவதாக சிறிலங்கா பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து அரிசியுடன் கொழும்பு வந்த பார வண்டிகள் அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அரிசி மூடைகள் முழுவதும் இறக்கப்பட்டு மூடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை இடப்பட்டதுடன், பாரவண்டிகளிலும் குண்டு கண்டுபிடிக்கும் கருவிகள் மூலம் சோதனை இடப்பட்டன. ஆனால் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் படி எந்தவொரு குண்டினையும் கண்டுபிடிக்கவில்லை. இதனால் சாரதிகளையும் உதவியாளர்களையும் தடுத்துவைத்து மேலும் விசாரணைகளை செய்துவருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜெயசிக்குறுய் சுக்குநூறாகிவிட்டது

## - அஸ்வர்

அரசின் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை சுக்குநூறாகப் போய்விட்டது. இந் நடவடிக்கைமூலம் சமுதாயம், கலாசாரம் என்பவற்றையும் அரசு சுக்குநூறாக்கிவிட்டது.

இவ்வாறு சிறிலங்கா பாராளுமன்ற ஐதேக உறுப்பினர் எம்.அஸ்வர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் பாதுகாப்பு என்ன என்பது யாருக்கும் தெரியாது. அண்மையில்கூட நானும் எனது சக உறுப்பினரும் மட்டக்களப்பிற்கு சென்றபோது இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதிலில் உயிர் தப்பினோம். எமது பாதுகாப்பு குறித்தே அக்கறை கொள்ளாத அரசு மக்களின் பாதுகாப்பிற்கு எப்படி உத்தரவாதம் வழங்கப் போகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# அந்நிய செலவாணி கையிருப்பில் குறைகின்றது

சிறிலங்காவின் அந்நிய செலவாணி கையிருப்பு கடந்த ஆண்டை விட குறைந்துள்ளதாக சிறிலங்கா மத்தியவங்கி தெரிவித்துள்ளது. 1997ம் ஆண்டைவிட இவ் வருடம் 143 பில்லியன் டொலர்கள் வீழ்ச்சியடைந்துள்ளது. இது இவ்வருட ஆரம்பத்தில் இருந்து மே மாத இறுதிவரை ஏற்பட்டுள்ள வீழ்ச்சி எனவும் தெரிவிக்கப்படுகிறது. இத் திடீர் வீழ்ச்சியால் கையிருப்பிலுள்ள நிதியைக்கொண்டு வெளிநாடுகளில் இருந்து 5 மாதங்களுக்குத் தேவையான பொருட்களையே இறக்குமதி செய்யமுடியும் எனவும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

# மைத்திரிபால மரணம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் மதவாச்சி தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பாராளுமன்ற சபாநாயகருமான மைத்திரிபால சேனநாயக்கா தனது 82வது வயதில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 11.07.98 அன்று காலமானார்.

# இரு பொலிசார் பலி

வாழைச்சேனை பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் கடந்த 11.07.98 அன்று காலை மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் அமைந்திருந்த இக் காவலரணை நோக்கி 'ஓட்டோ றிக்சா' ஒன்றில் வந்த விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதலை மேற்கொண்ட புலிகள் விரைவாகவே அங்கிருந்து சென்றுவிட்டனர் எனக் கூறப் படுகிறது.

# டக்ளஸ் சிங்கப்பூரில்

வெலிக்கடைச் சிறைக் கைதிகளால் தாக்குதலுக்கு உள்ளான ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றுள்ளார்.

[illegible]

# புதுக்குடியிருப்பில் விசர் நாய் கடிக்கு இருவர் பலி

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் விசர்நாய்க் கடிக்கு இலக்கான இரு சிறார்கள் பரிதாபகரமாக பலியாகியுள்ளார்கள். பலியானவர்களில் முறையே 7, 8 வயதினையுடையவர்களாவார்கள்.


விசர்நாய்க்கடிக்கான தடுப்பு ஊசிமருந்தினை சிறிலங்கா அரசு முல்லை மாவட்டத்துக்கு அனுப்பிவைக்க தொடர்ந்தும் மறுப்புத் தெரிவிப்பதனாலேயே இப்பரிதாபகரமான மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

# பாராளுமன்றப் பகுதியில் 22 தமிழர்கள் கைது

சிறீலங்காவின் ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற வளாகத்திற்கு அருகாமையில் உள்ள இடங்களில் தேடுதல் வேட்டையினை நடாத்திய பொலிசார் 22 தமிழ் இளைஞர், யுவதிகளை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

தமிழர்கள் பெருமபாலும் வசிக்கும் இடங்களை அதிகாலை வேளையில் சுற்றிவளைத்த பொலிசார், ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த இவ் இளைஞர், யுவதிகளை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் யாவரும் தற்போது தலங்கம பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.




நன்றி: தினக்குரல்


# கரம் கொடுங்கள்

## தூக்குக் கயிற்றின் முடிச்சினை அவிழ்த்திட கரம் கொடுங்கள்!!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, இன்று மேன்முறையீடு செய்திருக்கும், 26 தமிழர்களின் சார்பான வழக்கு நிதிக்கென மதிப்பிடப்பட்டுள்ள 50 இலட்சம் இந்திய ரூபாய்களைத் திரட்டிட நீங்களும் உதவுங்கள்.

உங்கள் மனச்சாட்சியின் ஒவ்வொரு வாசலூடாகவும் அவர்களை விடுதலை செய்ய உதவுங்கள்.

மேலதிக விபரங்களுக்கும், உங்கள் பங்களிப்பிற்கும்....

**நோர்வே:**

முகவரி: Thamilar Nidhi
Postboks 2941, 5030 Landa's, Norway
தொலைபேசி: 47 + 90669859
வங்கிக் கணக்கு - தமிழர் நிதி
5202 05 448045 (Den Norske Bank)

**இலண்டன்**

Postboks -518,
Harrow, Ha2. 8xx, Uk
44 + 0411947433
44 + 0181 +8646782
Short + codeno
2096 00
வங்கிக்கணக்கு: 703 66 757

**சுவிற்சர்லாந்து**

Postboks 187,
1950 Sion,
Switzerland
41+027+3466984
41+027+3232062

ஒன்றாய் எம் தோழருக்கு உயிர்கொடுப்போம்
*Web: http://www.26lives.org/*
*e-mail: save@26lives.org*


# கொழும்பில் மாணவர்கள் மீது தாக்குதல்

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள தமிழ் கல்வி நிறுவனம் நுழைந்த ஆயுதக் குழு ஒன்று அங்கிருந்த மாணவர்கள் மீது தாக்குதலை நடாத்தியுள்ளது.

கூரிய ஆயுதங்களுடன் மாலை வேளையில் கல்வி நிறுவனத்துக்குள் புகுந்த இக் குழுவின் தாக்குதலில் இரு மாணவர்கள் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


கடந்த சில மாதங்களாக கொழும்புப் பகுதியிலுள்ள தமிழ்க் கல்விநிலையங்கள் மீது இவ் விதமான தாக்குதல்கள் இடம் பெற்ற போதிலும் இது குறித்து பொலிசார் அக்கறை செலுத்துவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் கடந்த 08.07.98 அன்று இடம் பெற்றுள்ளது.

# வன்னிப் போர்க்களத்திற்கு உதவாத யாழ்.குடா இராணுவ உபாயங்கள்

## போரியலைப் புதிதாகப் புகட்டும் தமிழீழ போர்க்களம் III

போர்முனை ஆய்வு



பண்ணையார்

சிறீலங்காவின் இனப்பிரச்சினையை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைப்போம் என்று சமாதானப் பிரியர் வேடமிட்டு பதவியைக் கைப்பற்றிய மக்கள் முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் ஒருபுறம் பேச்சுவார்த்தையை நடாத்திக் கொண்டிருக்க மறுபுறம் அவர்களது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வடக்குக் கிழக்கு இராணுவ முகாம்களுக்கு விஜயங்களை மேற்கொண்டு அவற்றைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார். அத்துடன் சிறீலங்காவின் இராணுவத் தலைவர்கள், முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுக்கும் சீனாவிற்கும் சில மேற்கத்தேய நாடுகளுக்கும் ஆயுதக் கொள்வனவு விஜயங்களை மேற்கொண்டனர்.

*எதுவாயிருந்தாலும் அங்கு யுத்தத்தை ஆரம்பித்து சரியான இடத்திற்கு நகரும் வரை தங்களது கனரக ஆயுத பலத்தில் பெரும் நம்பிக்கையை வைத்திருந்தனர். ஆனால் பின்னர் அரங்கேறிய நாடகங்கள் இராணுவத்தின் அந்த பெரும் நம்பிக்கையை சுக்குநூறாக்கத் தொடங்கின.*

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை தொடர்ந்து சிறீலங்கா உதாசீனம் செய்துவந்த நிலையில் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன. இப்படியான ஒரு சூழ்நிலையைத்தான் கொழும்புடன் தொடர்புகளை வைத்திருந்த ஆயுத விற்பனையாளர்களும் தரகர்களும் எதிர்பார்த்திருந்தனர். ஆயுதம் வாங்கவென பல குழுக்கள் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்த அதே வேளை, ஏராளமான ஆயுத வர்த்தகர்களும் தரகர்களும் கொழும்பில் முகாமிட்டுத் தொடங்கினார்கள். அங்குள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இவர்களால் நிரம்பின. கொழும்பின் பல முக்கிய அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் இவர்களது இரவு விருந்துகளில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் அதிகளவு உயிர், உடமை சேதத்தினை ஏற்படுத்தி முன்னைய அரசுபோலன்றி தாம் மிகு விரைவில் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வர வேண்டும் என்பதில் புதிய மக்கள் முன்னணி அரசு முழுமையான நம்பிக்கையைக் கொண்டிருந்தது. இதற்காக முப்படையினருக்கும் தேவையான தளவாடங்களை விரும்பியவாறு கொள்வனவு செய்துகொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டது. முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளான ரஷ்யா, உக்ரேன், கசகஸ்தான் போன்ற நாடுகளிடமிருந்து அதிவேக தாக்குதல் உலங்கு வானூர்திகளும் போக்குவரத்து விமானங்களும் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இஸ்ரேல், சீனா போன்ற நாடுகளுடனும் ஆயுதக்கொள்வனவு பேரம் பேசப்பட்டது. ஆனால் இந்த ஆயுதக்கொள்வனவுகளில் சிறீலங்கா அரசு நேரடியாக பங்குகொள்ளாமல் பெருமளவில் கொழும்பில் தங்கியிருந்த ஆயுத வர்த்தகர்களும் தரகர்களுமே ஈடுபட்டனர்.

முன்னைய அரசு விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு அதன் விமானப்படையும் ஒரு பிரதான காரணமாகச் சொல்லப்பட்டது. அன்று அதன் விமானப் படையின் தாக்குதல் விமானங்களாக சீனாவின் F-5, F-7 மற்றும் ஆஜென்ரீனாவின் IA-58 எனப்படும் புக்காரா போன்றவைகளும் பெல் உலங்கு வானூர்திகளும் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டன. பேச்சு வார்த்தைகள் முடிவடைந்த நிலையில் 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஈழப்போர் 3 ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து யாழ்.குடாவில் சிறீலங்கா அரசு மேற்கொண்ட முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையில் சண்டிலிப்பாயில் ஜுலை 14-ம் திகதி ஏவுகணை எதிர்ப்பு சக்திகொண்ட புக்காரா விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அன்று சேவையில் ஈடுபட்டிருந்த விமானங்களில் F-7 ரக விமானங்களும் ஏவுகணை எதிர்ப்புச் சக்திகொண்டவைகளாக இருந்தபோதிலும் சிறீலங்கா அரசு இவ் விமானங்களை களத்திலிருந்து ஒதுக்கிவிட்டு புதிய ஏவுகணை எதிர்ப்புச் சக்திகொண்ட விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டது. மேற்கு நாட்டு தளபாடங்களைவிட தரமானவையும், மலிவானதும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் போர்க் கலங்கள் என தரகர்களால் உறுதி கூறப்பட்ட நிலையில் உக்ரேன் நாட்டிலிருந்து 3 அன்ரனோவ் ரக சரக்கு விமானங்கள் ஒவ்வொன்றும் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுத்து வாங்கப்பட்டன. இவைகளின் விலை 2.5 மில்லியன் டொலர்கள் எனச் சொல்லப்பட்ட போதும், தரகர்கள் மூலம் 2 மில்லியன்கள் அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை சீனாவிலிருந்து Y-12 ரக விமானங்கள் ஒவ்வொன்றும் 3.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விலையில் வாங்கப்பட்டன. சிறீலங்கா அரசு சீனாவுடன் செய்து கொண்ட ஓர் பாரிய பல்கோடி டொலர் ஆயுதக் கொள்வனவின்



ஒரு பகுதியாகவே இவ் விமானக் கொள்வனவும் அமைந்திருந்தது. இவற்றைத் தொடர்ந்து உக்ரேன் தயாரிப்பான MI 24 தாக்குதல் உலங்கு வானூர்திகள் மூன்றினை முழுமையாக விலைகொடுத்தும் மேலும் மூன்றினை குத்தகை அடிப்படையிலும் சிறீலங்கா கொள்வனவு செய்தது. அத்துடன் MI-17 ரக போக்குவரத்து, தாக்குதல் உலங்கு வானூர்திகள் மூன்றும் கொள்வனவு செய்யப்பட்டன. இக் கொள்வனவுகளை சிங்கப்பூரை மையமாகக்கொண்டு இயங்கிய ஆயுத திரட்டலையொன்றே மேற்கொண்டது. இவைகள் தவிர இஸ்ரேலிடமிருந்து C-2, TC-2 ரகங்களைச் சேர்ந்த கிபிர் விமானங்கள் 6ம் வரவழைக்கப்பட்டன. உளவு வேலைகளில் ஈடுபடும் Drone எனப்படும் தன்னியக்க விமானங்கள் 3ம் தலா 550,000 விலையில் வாங்கப்பட்டன. விமானப் படை இவ்வாறாக நவீன மயப்படுத்தப்பட இராணுவத்திற்கும் பெருமளவிலான நவீன யுத்த தாங்கிகளும் நீண்டதூர பீரங்கிகளும் போக்குவரத்து வாகனங்களும் வாங்கிக் குவிக்கப்பட்டன. சிறீலங்காவின் கடற்படைக்கு சீனத்தயாரிப்பு கோட்டர்ஜெட், இஸ்ரேலின் டோரா போன்ற அதிவேக ரோந்துப் படகுகளும், போர்க் கப்பல்களும் வந்து சேர்ந்தன.

3ம் ஈழப்போரின் விடுதலைப் புலிகளின் பலத்தை யாழ். குடாவிலிருந்து அகற்றுவதே பிரதான நோக்கமாக சிறீலங்கா அரசு கொண்டு செயல்பட்டது. இதன் முதற்கட்டமாக முன்னோக்கிப் பாய்தல் ஆரம்பிக்கப்பட்டு, பின் இடி முழக்கம் மின்னல் சூரியக்கதிர் என பல இராணுவ நடவடிக்கைகளை அது நடாத்தியது. யாழ். குடாவில் சிறீலங்கா அரசின் சூரியக் கதிர் நடவடிக்கையின்போதும் மேலும் இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. MI-17 ரக உலங்கு வானூர்தி ஒன்றும் இரண்டு அவ்ரோ விமானங்களும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியின் தாக்குதல்களால் கடலில் வீழ்ந்தன என்பதை சிறீலங்கா அரசு நன்றாகவே அறிந்திருந்தும் தொழில்நுட்ப கோளாறே அவற்றிற்குக் காரணம் என மழுப்பியது. ஆனாலும் பின்னர் விடுதலைப் புலிகளின் ஏவுகணைகள்தான் காரணம் என்பதை சர்வதேச உலகிற்கு அது ஒத்துக் கொண்டது. விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதை வெளியுலகிற்குக் காட்டி தன்னை மேலும் பலப் படுத்திக் கொள்ள அது முயன்றது.

அன்று யாழ். குடாவில் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது சிறீலங்கா அரசிற்கு தான் வாங்கிக் குவித்த நவீன போர்க் கருவிகள் பேருதவி புரிந்தன. குண்டுவீச்சு விமானங்களும் நவீன தாங்கிகளும் யாழ்.குடாவின் நகர்ப்புற இராணுவ நடவடிக்கையின் போது தாராளமாகப் பாவிக்கப்பட்டன. விமானக் குண்டு வீச்சுக்களின் உதவியுடனும் பீரங்கித் தாக்குதல்களின் உதவியுடனும் யாழ். குடாவை சிறீலங்கா கைப்பற்றிக் கொண்டது. அங்கு அது கண்ட வெற்றி மாயையை வன்னிப் பெருநிலப் பரப்பிலும் தொடர முற்பட்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் வேரூன்றி இருந்த விடுதலைப் புலிகளை தோற்கடித்தால் சிறீலங்காவின் இனப்பிரச்சினை முடிந்துபோன்றது என இராணுவத் தலைமை கூறியது. இதற்கான பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு திட்டம் தீட்டப்பட்டது. அனுபவம் வாய்ந்த படையணிகளும் பெரும் படைக் கலங்களும் வவுனியாவில் குவிக்கப்பட்டன. முதலில் மன்னார் நோக்கிய படைநகர்வை மேற்கொண்டு ஒரு பகுதியை கைப்பற்றிக் கொண்டது. அதேபோல் ஆனையிறவுப் பகுதியிலிருந்தும் நகர்ந்து கிளிநொச்சியைக் கைப்பற்றிக் கொண்டது. பின்னர் நடுப்பகுதியில் சிக்கிக்கொண்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு பேரழிவை ஏற்படுத்தும் இராணுவ நடவடிக்கை ஒன்றை வவுனியாவிலிருந்து ஆரம்பித்தது.

உலகின் தற்காலப் படை நடவடிக்கைகளில் அனுபவம் கொண்ட ஒருசில நாடுகளின் வரிசையில் சிறீலங்காவும் ஒன்று. கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக அவர்கள் யுத்த அனுபவத்தை பெற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனாலும் வன்னிப் பெருநிலப் பரப்பின் கள நிலைமைகளையும், அதன் இயற்கை அமைப்பினையும் அங்கு மேற்கொள்ளவேண்டிய யுத்த முறைமையும் சிறீலங்காவின் இராணுவத் தலைவர்கள் கவனிக்க மறந்தனரா அல்லது தங்களது சுய இலாபங்களுக்காக பிழையான யுத்தக் கணிப்புக்களை மேற்கொண்டனரா? எதுவாயிருந்தாலும் அங்கு யுத்தத்தை ஆரம்பித்து சரியான இடத்திற்கு நகரும் வரை தங்களது கனரக ஆயுத பலத்தில் பெரும் நம்பிக்கையை வைத்திருந்தனர். ஆனால் பின்னர் அரங்கேறிய நாடகங்கள் இராணுவத்தின் அந்த பெரும் நம்பிக்கையை சுக்குநூறாக்கத் தொடங்கின.

*இன்னும் வரும்*

கீபோட் வகுப்புகள்
குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
(International Method)
கீபோட் கற்பிக்கப்படும்
சனி: ஞாயிறு: 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை
திங்கள்: செவ்வாய்: 14.00 மணி தொடக்கம் 19.00 மணி வரை
ஆசிரியர் S.S தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet
Tel: 01 40 37 56 69

Tamileelam Archive

## ஜெயின் கமிஷனின்


# ஆயிரம் பக்க இறுதி அறிக்கையில் பொதிந்திருக்கும் அதிர்ச்சித் தகவல்கள்!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையானதின் சதி தொடர்பாக ஆராய நீதிபதி மிலாப் சந்த் ஜெயின் தலைமையில் தனிநபர் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. முதலில் இவர் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்தார். இந்த இடைக்கால அறிக்கையால் இந்திய அரசியலில் பெரும் பூகம்பம் வெடித்தது. அப்போதைய ஆட்சியான ஐக்கிய முன்னணி ஆட்சி கவிழ இந்த அறிக்கை காரணமாகியது.

பொதுத் தேர்தலுக்கும் வழி வகுத்தது. இந்த அறிக்கை அப்போதைய உள்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. உள்துறை அமைச்சரிடம் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட ஆறு மாதத்தில் அதை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென விதிமுறை இருப்பதால் நடப்பு கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிகிறது. இதனிடையே ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் பொதிந்துள்ள தகவல்கள் மெல்ல மெல்ல வெளிவர ஆரம்பித்து விட்டன.

அந்த ஆயிரம் பக்க இறுதி அறிக்கையில் பிரபல சாமியார் சந்திராசாமி பற்றிய தகவல்கள் உள்ளன. ராஜீவை கொன்றவர்களுக்கு சந்திராசாமி பணம் செலுத்திய ஆதாரங்களை ஜெயின் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தெற்கு டெல்லியில் உள்ள சந்திராசாமியின் ஆசிரமத்தை வருமானவரி மற்றும் அமுலாக்க பிரிவினர் சோதனை போட்டபோது சில டயரிகள் ஆவணங்கள் சிக்கின. ராஜீவ் கொலைக்காக சந்திராசாமி பணம் செலுத்தியதை இந்த ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில் பாரதிய ஜனதா அரசாங்கம் ஜெயின் அறிக்கை குறித்து நடவடிக்கை அறிக்கை தயாரிப்பதில் முனைந்துள்ளது. நடவடிக்கை அறிக்கை தயாரானதும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யும்.

இந்த இறுதி அறிக்கை பாராளுமன்றத்தில் பெரும் புயலைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றுள்ளோருக்காக வாதாடும் வழக்குரைஞர் எஸ். துரைச்சாமி பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் 'சந்திர சுவாமியின் பெயர் ஜெயின் கமிஷனில் அடிபட்டாலும் சி.பி.ஐ. அறிக்கையில் அவரது பெயர் கூட குறிப்பிடப்படவில்லை. சந்திரா சுவாமியின் பங்கு குறித்த புலனாய்வை மத்திய புலனாய்வுத் துறை புறக்கணித்துள்ளது. முன்னாள் பிரதமர் நரசிம்மராவுடன் அவருக்கிருந்த தொடர்பு காரணமாக அவர் பெயர் விடுபட்டிருக்கலாம் என அவர் கூறியுள்ளார்.



# தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளின் முறைகேடான நடவடிக்கைகள்!

காவல்துறை அதிகாரிகளின் முறைகேடான பாலியல் உறவுகள்தான் தமிழ்நாட்டு பத்திரிகைகளில் தற்போது சூடுபறக்கும் செய்திகளாகும். புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமியும், அவரது கணவரான டி.எஸ்.பி. சுந்தர்ராஜனும் தமக்கு கீழுள்ள பெண் காவலர்களை தமது முறைகேடான பாலியல் உறவுகளுக்கு தம் அதிகாரங்களின் மூலம் பயன்படுத்திக்கொண்ட செய்திகள் விசாரணைகள் மூலம் வெளிவந்துள்ளன.

இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி தனக்கு கீழுள்ள பெண் காவலர்களுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டாரென்றும், தனது மனைவியுடன் பாலியல் உறவுள்ள பெண் காவலர்களை டி.எஸ்.பி. சுந்தர்ராஜன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினாரென்றும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது தமிழ் நாடெங்கும் அதிர்ச்சி அலைகளை தோற்றுவித்துள்ளது.

விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் குற்றம் சாட்டப்பட்டோர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விசாரணைகளில் மேலும் பல உயர் அதிகாரிகளும் இத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள செய்திகளும் வெளிவந்துள்ளனவாம்.

# எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம் இந்திய தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு!

இந்திய வாக்காளருக்கு நிழல் படத்துடன் கூடியதான அடையாள அட்டை வழங்கும் பணி தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றது. இப்பணிகளை கவனிக்கும் பயணமாக இந்திய தேர்தல் ஆணையாளர் எம்.எஸ். கில் மைசூர் வந்திருந்த சமயத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசினார் அப்போது அவர் கூறியதாவது:

மத்தியில் நிச்சயமற்ற சூழ்நிலை நிலவுகின்றது. இதனால் எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம். எனவே அதற்கான தயார் நிலையில் தேர்தல் ஆணையகம் தயாராக இருக்கின்றது. கடந்த ஏப்ரல் மாதமே தேர்தல் வருமென எதிர்பார்த்தோம். ஆனால் எந்த வித அரசியல் அசம்பாவிதமும் இல்லாமல் போய்விட்டது. மே மாதமும் அவ்வாறு எதிர்பார்த்தோம் என்றார் அவர்.


இதேவேளையில் பாஜ — அதிமுக இடையே சுமுக உறவு இன்னமும் ஏற்படவில்லை என்றே தெரிகிறது. பிரதமர் வாஜ்பாயை அழைத்து திண்டுக்கல்லில் நடாத்துவதாக அறிவிக்கப்பட்ட அதிமுக வெற்றி விழா மாநாடு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive





எங்கும் கிடைக்கிறது






Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@[illegible].com




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# மக்களவைத் துணைத் தலைவர் பதவி விட்டுக்கொடுப்பு

## அ.தி.மு.க.வுடன் உறவை சீராக்கும் திட்டம்!

மக்களவை துணைத் தலைவர் பதவியை அ.தி.மு.க.வுக்கு விட்டுக் கொடுக்க பாரதிய ஜனதாக்கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது. கூட்டணி அமைத்திருந்த இருவரிடையேயும் மோசமடைந்துள்ள உறவை மேம்படுத்தும் வகையில் பாரதிய ஜனதா இவ்வாறு திட்டமிடுவதாக தெரிகின்றது.



அரசியல் திரிப்புக்கள் காரணமாக மக்களவைத் தலைவர் தேர்தலில் தெலுங்கு தேசத்தின் பாலயோகியை ஆதரிக்க பாரதிய ஜனதா முடிவு செய்தது. அதைத் தொடர்ந்து துணைத் தலைவர் பதவியை தனக்கு விட்டுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் அது கருதியது.

மக்களவையில் தலைமை வந்த அணிக்கும் எனினும் இவ்வாட எதிர்க்கட்சிகள் சார்பில் தனது வேட்பாளரை நிறுத்த காங்கிரஸ் விரும்புகின்றது. தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு விட்டுக் கொடுக்கப்பட்டதால் துணைத் தலைவர் பதவியை தனக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா வாதிடுகின்றது. ஆனால் பாரதிய ஜனதா அரசுக்கு ஆதரவாக வாக்களித்த தெலுங்கு தேசத்தை எதிர்க்கட்சியாக கருத முடியாது என்று காங்கிரஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

அ.தி.மு.கவுடனான உறவு மோசமடைந்த நிலையில் தான் நிறுத்தும் வேட்பாளரை அக்கட்சி ஆதரிக்குமா என்ற சந்தேகம் பாரதிய ஜனதாவுக்கு உள்ளது. தனது வேட்பாளரை எதிர்த்து வாக்களிக்கவோ அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லை என்றோ அ.தி.மு.க. அணி முடிவு செய்தால் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் வெற்றி பெற்றுவிடுவார்.



அவ்வாறு நடந்தால் அரசுக்கு ஏற்பட்ட தோல்வியாக சித்தரிக்கப்பட்டு வாஜ்பாய் விலக வேண்டுமென கோரிக்கை எழும் என பா.ஜ.க. கருதுகின்றது. எனவே பதவியை அதிமுகவிற்கு விட்டுக்கொடுப்பதன் மூலம் தனது அரசைக் காப்பாற்றவும் ஜெயலலிதாவை சமாதானப்படுத்தவும் உதவும் என பா.ஜ.க. கருதுகின்றது.

# இந்தியாவில் தபால் விநியோகம் சீர்குலைவு

## அஞ்சல்துறை வேலை நிறுத்தத்தின் எதிரொலி!

ஜூலை 9ம் திகதி முதல் நாடு முழுவதிலும் அஞ்சல்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். 'கடிதங்கள் ... முடங்கும் சேதமடையும் என்றோ காணாமல் போகும் என்றோ மக்கள் பீதியடையத் தேவையில்லை. இருக்கும் ஆட்களைக் கொண்டு பணிகளை செய்து வருகின்றோம். இதற்கு வெளியாட்களைப் பயன்படுத்தவில்லை' என அஞ்சல் துறை தலைவர் அறிவித்துள்ளார். இவ்வேலை நிறுத்தம் காரணமாக மிக மோசமாக பாதிப்படைந்துள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு பத்து சதவீத ஊழியர்களே பணிக்கு வந்திருந்ததாக தபால் சேவைகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இவ் வேலை நிறுத்தத்தால் தனியார் கூரியர் நிறுவனங்களுக்கு வர்த்தகம் இரட்டிப்பாகின்றது. உள்ளூர் கடிதங்களுக்கு 5 ரூபாயும் வெளியூர்க் கடிதங்களுக்கு ரூ.4 முதல் ரூ.30 வரை கட்டணம் வசூலிக்கின்றனர்.

# புதுவை முழு மாநிலமாகிறது!

## இந்திய மத்திய அரசு முடிவு!

இதுவரை காலமும் யூனியன் பிரதேசம் என வழங்கப்பட்டு வந்த புதுவை பிரதேசங்கள் மாநில அந்தஸ்துக்கு உயர்த்தப்பட உள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள புதுவை 'பாண்டிச்சேரி' என அழைக்கப்படுகின்றது.

பிரான்சின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாக இருந்த இப்பகுதி இந்திய சுதந்திரத்திற்குப் பின்னால் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு யூனியன் பிரதேசமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. இதனை மாநில அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டும் என்பது புதுவை மக்களின் கோரிக்கையாக இருந்துவந்துள்ளது.

தற்போது பாரதிய ஜனதா ஆட்சி புதிய மாநிலங்களை உருவாக்குவது குறித்து முயற்சிகளை மேற்கொண்டு புதுவைக்கும் முழு மாநில அந்தஸ்து வழங்க முன்வந்துள்ளது.

இது குறித்து புதுவை முதல்வர் ஜானகிராமன் 'மாநில அந்தஸ்து பெறுவதால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதுவை அரசு மேலும் சிறப்பாக மக்களுக்கு சேவை செய்ய ஏதுவாகும். உங்கள் கூட்டணிக் கட்சி ஆளும் இத்தருணத்தில், புதுவைக்கு மாநில அந்தஸ்து பெறுவதை பெருமையாக கருதுகிறேன்.' எனத் தெரிவித்துள்ளார். தற்போது புதுவை மாநிலத்தில் தி.மு.க, த.மா.கா, கம்யூனிஸ்ட்டுகளின் கூட்டணி ஆட்சி நடைபெறுகின்றது.


# ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி - 1998

**கலைஞர்களே!**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருந்தால் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)


# வாய்மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

தமிழக அரசுக்கு மிகப் பெரும் வருமானத்தை வாரி வழங்கும் ஒன்றால் தமிழ் சினிமா! 1989ம் ஆண்டுக்கு சுமார் 80 கோடி சினிமா மூலம் அரசுக்கு வருமானம் கிடைத்தது. 1990 களுக்கு மேல் 120 கோடியாக உயர்ந்தது வாரி வழங்கிய கர்ணன் தமிழ் சினிமா, திருட்டு வீடியோ கசட்டை ஒழிக்கச் சொல்லி வேண்டிக்கேட்கிறது. நியாயமான கோரிக்கை மனமிரங்க வேண்டும் அரசு.

*— நக்கீரன் 07.07.98 இதழில்*

இந்திராகாந்தி அவசரகாலச் சட்டம் பிறப்பித்து பல அரசியல் தலைவர்களை கைது செய்தபோது தலைமறைவானவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ். அவருக்கு அப்போது தஞ்சம் கொடுத்தது தமிழகம். தலைமறைவுக்கு உதவி செய்தவர் முரசொலிமாறன். அதில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சில நாள் தங்கிய அறை-எழும்பூர் பிரசிடென்சி கிளப் அறை. அன்று தன் வாழ்க்கைக்கே பாதுகாப்பு இல்லாமல் ஓடிய தொழிலாளர் தலைவர், இன்று மத்திய பாதுகாப்புத் துறையின் அமைச்சர்!

*— உலகத் தமிழர் பேரவைத்தலைவர் இரா.ஜனார்த்தனம் கூறியதாக ஜூனியர் விகடன் 08.07.98 இதழில்.*

இருமனைவிகள் கலகம் ஒரு குறைபல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் உலக சாதனை செய்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளனர். பி.முத்துக்குமார்: இச்சிறுவன் தனது ஐந்து வயதில் (இரு கைகளும் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நிலையில்) ஒரு மணிநேரம் தொடர்ந்து இடைவிடாது நடனம் ஆடி உலக சாதனை செய்துள்ளான். படிப்பிலும் சிறந்த மாணவன். வி.சரவணன்: இச்சிறுவன் தனது ஐந்து வயதில் (இரு கால்களும் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு செயலிழந்த நிலையில்) தனது இரு கைகளால் தலைகீழாக 500 மீற்றர் தூரம் இடைவிடாது நடந்து உலக சாதனை புரிந்துள்ளான். இவனும் படிப்பில் சிறந்தவன்.

*— ஜூலை 98 பெண்மணி மாதர் இதழில்.*

இந்திய உயர்கல்வி பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால் இப்படி சொல்லி அழுவேன்: இங்கே சந்தர்ப்பம் கிடைத்தால் எந்த மாணவனும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்க பறந்து விடுவான். அப்படி பறக்க நினைப்பவர்களில் முதலிடத்தில் இருப்பது அதிகாரிகளின் பிள்ளைகள் தான். ஓய்வு நேரங்களில் நானே செய்த ஒரு குட்டி சர்வேயில் கிடைத்த சேதி.., எனக்குத் தெரிந்த எந்த ஒரு அதிகாரியின் வீட்டிலும் யாராவது ஒரு பிள்ளை ஏதோ ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் படித்திருக்கிறார்.

*— கட்டுரையாளர் தவ்லீன் சிங் இந்தியா டுடே 08.07.98 இதழில்*


ஒரு முறை பொன்னமராவதியில் கலைஞர் கருணாநிதி கலந்து கொண்ட ஒரு கூட்டம். மக்கள் வெள்ளமெனப் பெருகி எந்து வீதி எங்கும் நின்று கொண்டிருந்தனர். அமருங்கள் அமருங்கள் எனப் பலர் கூறியும் கூட்டத்தினர் அமரவில்லை. இந்நிலையில் கலைஞர் பேச எழுந்தார். 'உங்கள் ஊருக்கு பொன்னமராவதி எனப் பெயர் வரக்காரணம் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்தேன். காரணத்தையும் கண்டுபிடித்து விட்டேன். நீங்கள் அனைவரும் பொன் போன்ற உள்ளம் உடையவர்கள். ஆனால் அமரமாட்டீர்கள். ஆகவேதான் ஊரின் பெயர் பொன்னமராவதி என அமைந்துவிட்டது'. என கலைஞர் கூறியவுடன் அனைவரும் சடசடவென கீழே அமர்ந்து விட்டனர்.

*— 15.07.98 தேவி இதழில்.*

உலகின் பணக்கார சாமியான ஏழுமலையானுக்கு தங்கம், வைரம், பணம், என்று பணத்துக்கு மேல் பணம் குவிந்து கொண்டிருக்கின்றது. கடந்த ஒரு ஆண்டு மட்டும் 200 கோடி ரூபாய் வருமானம் ஏழுமலையானுக்கு கிடைத்துள்ளது. இந்த ஆண்டு 250 கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான திருப்பதி கோவிலில், தினசரி அலைமோதும் பக்தர்கள் கூட்டத்தைக் காண முடிகிறது. சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி அந்தக் கோவிலுக்கு சராசரியாக தினமும் அறுபது ஆயிரம் பேர் வந்து சாமி தரிசனம் செய்துவிட்டு போகிறார்கள்.

*— 12.07.98 ராணி இதழில்.*



நன்றி ஜூனியர் விகடன்




## யூகோஸ்லாவியா

# இராணுவத் தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை

## — ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்

யூகோசிலவிய பிராந்தியமான கொசோவோவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் விதத்தில் இராணுவத் தலையீடு ஒன்றை மேற்கொள்ள ஐநாவின் பாதுகாப்புச்சபை முடிவுகளை மேற்கொண்டால் தாம் அதனை எதிர்ப்போம் என்றும் கொசொவோப் பிரச்சினையில் இராணுவத் தலையீடு என்பதற்கு இடமேயில்லை என்றும் ரஷ்யாவிற்கு விஜயம் செய்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் கிளவுஸ் கின்கல் இற்கு ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் யிகோனி பிறிமகோவ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி, அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, பிரான்ஸ் போன்றவற்றுடன் யூகோசிலாவிய தொடர்பு நாடுகளில் ரஷ்யாவும் அடங்குகிறது. தற்போதைய கொசோவோ மீதான சேர்பிய பொலிசாரின் நடவடிக்கைகளை ரஷ்யா எதிர்த்து வந்தாலும் சேர்பியாவிலிருந்து கொசோவோ பிரிந்து செல்வதை அது ஏற்றுக் கொள்ளவில்லை. அது ஓர் உள்நாட்டு விவகாரம் எனக் கூறும் அது அங்கு வெளியாரின் தலையீடு அவசியம் இல்லை என கூறி வருகிறது. இந்நிலையில் ரஷ்யாவிற்கு ஜேர்மனி வெளிவிவகார அமைச்சர் கிளவுஸ் கின்கல் குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றார்.

அங்கு யூகோசிலாவிய விவகாரம் பற்றி பரந்தளவில் பேசப்பட்டது. இதன்போது கொசோவோவிற்கு ஐநாவின் படையணி ஒன்றை அனுப்புவது பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் யிகோனி பிறிமகோவ், கொசோவோவிற்கு பரந்த அடிப்படையிலான உரிமைகளுடன் கூடிய சுயாட்சியே சிறந்ததுவும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுவுமாகும். ஆனால் யூகோசிலாவியாவில் இருந்து பிரிந்துசெல்ல அனுமதிக்க முடியாது. நாம் அரசியல் ரீதியான தீர்விற்கே ஆதரவு தெரிவிப்போம், ஒத்துழைப்போம். கொசோவோவை இரண்டாவது பொஸ்னியாவாக மாற அனுமதிக்கமுடியாது என்றும் கூறினார்.


ஜேர்மனி வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் மற்றும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மெடலின் ஒல்பிரைட் போன்றோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இப் பிரச்சினைக்கான அமைதித் தீர்வொன்றினை இரு தரப்பாரும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இருந்தும் இறுதியான தீர்வாகவே இராணுவத் தலையீடு அமையவேண்டும். ஆனால் ரஷ்யாவும் சீனாவும் இதைத் தொடர்ந்து எதிர்க்குமானால் அது சாத்தியப்படாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



## நைஜீரியா

# மசூத் அபியோலாவின் மரணம் இயற்கையானதென தெரிவிப்பு

நைஜீரியாவின் முன்னணி எதிர்க்கட்சித் தலைவரும் 1993ம் ஆண்டில் அங்கு நடந்த தேர்தலில் வெற்றிபெற்றவரும் பின்னர் 1994ம் ஆண்டில் ஜனாதிபதி என தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டவரும் பெரும் செல்வந்தருமான மசூத் அபியோலா கடந்த செவ்வாயன்று இரவு மாரடைப்பால் மரணமானார். 1994ம் ஆண்டுமுதல் அண்மையில் மரணமடைந்த இராணுவ ஆட்சியாளரான சானி அபாச்சாவினால் சிறைக்குள் தள்ளப்பட்ட இவர், புதிய ஜனாதிபதியான அபுபக்கரினால் வெகு விரைவில் விடுதலை செய்யப்பட இருந்தார். 2 வாரங்களிற்கு முன் அங்கு விஜயம் செய்த ஐநா செயலாளர் நாயகம் கோபிஅனான், திரு. மசூத் அபியோலாவை சந்தித்திருந்தார். அதன்பின்னரே அவரது விடுதலை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.



கடந்தவாரம் அமெரிக்க உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று நைஜீரியாவில் மசூத் அபியோலாவைச் சந்தித்தது. இச் சந்திப்பின் பின்னரே அவரது மரணம் சம்பவித்துள்ளது. இவரது மரணத்தைத் தொடர்ந்து மரணத்தில் சந்தேகமிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அதன் தலைநகரங்களில் அரச எதிர்ப்புக் கலவரங்கள் வெடித்தன. இதில் 20 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் ஏராளமானோர் காயமுமடைந்தனர்.

பாரிய பொருட்சேதம் ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நைஜீரியாவின் அரச சபை கலைக்கப்பட்டு நேரடி ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ்நாடு கொண்டுவரப்பட்டது.

மசூத் அபியோலாவின் மரணத்திற்கு அரசாங்கமே காரணம் என்றும் அவர் மறைமுகமாகக் கொல்லப்பட்டிருக்கிறார் என்றும் அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். சர்வதேச மருத்துவக்குழு அங்கு விஜயம் செய்து மசூத் அபியோலாவின் உடலை பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இதன் அடிப்படையில் வைத்தியக்குழு கடந்த சனியன்று மேற்கொண்ட பரிசோதனையை அடுத்து இவரது மரணம் இயற்கையானது என தெரிவித்தது. இதையடுத்து அன்றைய தினமே அவரது இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

## மத்திய கிழக்கு

# அமெரிக்காவின் பொறுமை எல்லை மீறுகிறது

## — அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் —

மத்திய கிழக்கில் மிக நீண்டகாலப் பிரச்சினையாக இழுபட்டுவரும் பாலஸ்தீனப் பிரச்சினையில் அமெரிக்கா தொடர்ந்தும் தலையிட்டு வருகிறது. இப் பிரச்சினையில் இஸ்ரேலும் பாலஸ்தீனியர்களும் நேரடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டாலேயொழிய இப் பிராந்தியத்தில் அமைதி ஏற்படாது. இவ் இரு தரப்பினருக்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதில் அமெரிக்காவின் பொறுமை எல்லை மீறிப்போகிறது. இவ்வாறு அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மெடலின் ஒல்பிரைட் கடந்த வெள்ளியன்று தெரிவித்தார். எகிப்திய வெளியுறவு அமைச்சர் அமீர் மூசாவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு முன்பாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் பாலஸ்தீன அமைதிப் பேச்சுவார்த்தை கடந்த 16 மாதங்களாக தேக்க நிலையில் இருந்து வருகிறது. ஆனால் இரு தரப்பினரிடையேயான வேறுபாடுகள் மிகவும் குறுகிக்கொண்டுதான் வருகின்றன.

ஆனால் எப்போது மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்பது கூற முடியாது. ஏற்கனவே இஸ்ரேலிய அதிபர் நெத்தன்யாகுவுடன் கடந்த சில நாட்களில் மட்டும் ஏழு தடவைகள் தொலைபேசியில் மெடலின் ஒல்பிரைட் தொடர்புகொண்டுள்ளார். அதேபோல் பாலஸ்தீன அதிபர் அரபாத்துடனும் பல தடவைகள் இவர் தொடர்பு கொண்டுள்ளார். அமெரிக்கா, இஸ்ரேல் மேற்குக் கரை நிலப் பகுதியில் மேலும் 13 வீதத்தை பாலஸ்தீனியர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு ஈடாக அப் பகுதியில் இருந்து இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை பாலஸ்தீனியர்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.



ஆனால் 10 வீதத்திற்கு மேல் நிலப்பரப்பை விட்டுக்கொடுப்பதானது இஸ்ரேலுக்கு பாதுகாப்பற்ற நிலைமையைத் தோற்றுவிக்கும் என இஸ்ரேல் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது அவர் தனது நிலையில் இருந்து சற்று கீழிறங்கியுள்ளதாகத் தெரிகிறது. இதன்படி யாசிர் அரபாத்தும் தங்களது கோரிக்கைகளில் சில மாறுதல்களை மேற்கொள்ள வேண்டும் என மெடலின் ஒல்பிரைட் கோரினார்.

இதற்கிடையே தனக்கு சரியான ஓர் பதிலை இஸ்ரேல் கூற வேண்டுமெனவும், அதற்காக இரண்டுவார கால எல்லையையும் அமெரிக்கா விதித்துள்ளது. இது இப்படியிருக்க அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் எவ்வளவு விரைவாக பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதில் மிகவும் அக்கறையாக இருக்கிறார். 2000ம் ஆண்டில் தற்போதைய அவரது உதவி ஜனாதிபதி அல் கோரினை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்கு நிச்சயமாக அது உதவக்கூடும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

## இந்தியா

# இந்தியா-பாகிஸ்தான் விரைவில் பேச்சுவார்த்தை

## — ஐ.நா பொதுச்செயலாளர்

இந்தியாவும், பாகிஸ்தானும் தமது நாடுகளிற்கிடையேயான பாதுகாப்பு மற்றும் வேறு விடயங்களை குறித்தும் காஷ்மீர் பிரச்சினை குறித்தும் வெகு விரைவில் பேச்சுக்களில் ஈடுபடும் என ஐ.நா. பொதுச் செயலாளர் கோபிஅனான் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் இப் பேச்சுக்கள் இடம் பெறலாம் என்றும் இப் பிராந்தியத்திற்கு விஜயம் செய்ய உள்ளதாலும் இப் பேச்சுக்களில் கலந்துகொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

திரு.கோபிஅனான் அவர்கள் ஐநாவின் பாதுகாப்புச் சபைக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இந்திய, பாகிஸ்தானிய தலைவர்களையும் ஒன்றுபடுத்தி தமக்கிடையேயான பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்வதற்கும் அணு ஆயுத நலன்களில் இரு தரப்பினரும் பேசிக்கொள்ள வேண்டும் என்பதிலும் தான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாயும் தெரிவித்தார். வெகு விரைவில் கொழும்பில் நடைபெற இருக்கும் தென்னாசிய பிராந்திய மாநாட்டில் இரு தலைவர்களும் கலந்துகொள்கின்றனர். இங்கு இவர்களிற்கிடையேயான ஓர் சந்திப்பு ஏற்படுத்தப்படும் என கூறியுள்ளார்.



இதேவேளை அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் ஸ்ரோப் ரல்போட் அவர்களுடன் இந்திய உதவி வெளியுறவுச் செயலர் ஜஸ்வந்சிங் ஜேர்மனியில் பிராங்பேட்டில் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். இவ்விருவரும் என்ன பேசிக்கொண்டனர் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. இவ் இருவரும் கடந்த மாதம் வாஷிங்டனிலும் சந்தித்துக்கொண்டனர்.

அமெரிக்க அரசு அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடவேண்டும் எனக் கோரிவருகின்றது. அதே போல் மற்றைய நாடுகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஆனால் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தற்போது அணு ஆயுதங்களை வைத்திருக்கும் பெரும் நாடுகள் தமது அணுப்பலத்தை இல்லாது செய்ததன் பின்னரே தாம் இத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது சாத்தியமாகும் எனக் கூறியுள்ளார்.

## ஜப்பான்

# ஜப்பானிய பிரதமர் இராஜினாமா

## தேர்தல் தோல்வியின் எதிரொலி

ஜப்பானில் கடந்தவாரம் நடைபெற்ற மேல் சபைக்கான தேர்தலில் ஆளும் (LDP) கட்சியி னர் படுதோல்வியை தழுவி னர். இந்தத் தேர்தல் தோல்வி யைத் தொடர்ந்து பிரதமர் ருயி டாரோ ஹஷிமோட்டோ தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஜப்பான் இரண்டாம் உலக யுத்தத்தில் சந்தித்த நெருக்கடி க ளுக்கு அடுத்ததாக தற்போது பெரும் நிதி நெருக்கடி களைச் சந்தித்துள்ளது. LDP கட்சி அர சின் பொருளாதாரக் கொள் கைகளின் தோல்வியினாலேயே இந்தப் பொருளாதாரச் சிக்கல் கள் தோன்றியுள்ளன என்ற குற் றச்சாட்டு பரவலாக வைக்கப் பட்டது.

கடந்த ஐம்பது வருடங்க ளாக LDP கட்சியினர் ஜப்பா னின் மேல் சபையில் பெரும் பான்மையைக் கொண்டிருந்த னர்.

நடந்து முடிந்த தேர்தலில் மேல் சபையில் 17 இடங்களை அது இழந்துள்ளது. ஆனாலும் சக்திமிக்க கீழ்ச்சபையில் LDP தொடர்ந்தும் பெரும்பான்மை யினைக் கொண்டுள்ளது. ஆகை யால் உடனடியாக ஆபத்துக் கள் எதுவும் கட்சிக்கு இல்லை எனச் சொல்லப்படுகிறது.

ஆனாலும் LDP யின் தோல் விக்குத் தானே காரணம் என்ப தனை பிரதமர் ஹஷிமோட்டோ ஏற்றுக்கொண்டே தனது பத வியை இராஜினாமா செய்தார். அடுத்த பிரதமராக ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை ஹஷிமோட்டோவே தொடர்ந் தும் பிரதமராக நிலைத்திருப் பார்.



ஜப்பானிய புதிய பிரதம ராக தற்போதைய வெளியுறவு அமைச்சர் கேய்சோ ஒபுச் சியோ அல்லது முன்னாள் அமைச்சரவை தலைமைச் செய லர் சிரேக்கு கஜியாமாவோ நிய மிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிய வருகிறது.

## தென்னாபிரிக்கா

# அரசியல் வன்முறைக்கு பொலிசாரும் துணை கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - மண்டேலா

தென்னாபிரிக்காவில் இடம் பெறும் அரசியல் சார்புடைய கலவரங்களுக்கு சில துரோகத் தனமான பொலிஸ் அதிகாரிக ளும் காரணம். அவர்கள் அரச இயந்திரத்தை செயலிழக்கச் செய் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விரைவில் அவர்கள் பதவி களைப்பட்டு விசாரணைக ளின் முன் நிறுத்தப்படுவார்கள் என தென்னாபிரிக்க ஜனாதி பதி நெல்சன் மண்டேலா கூறி யுள்ளார்.

ரிச்மண்ட் நகரப் பகுதியில் கடந்தவாரம் இரு கட்சி அங் கத்தவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களில் இருபது பேர் வரை கொல்லப்பட்டனர். இங்கு இறந் தவர்களின் மரணச் சடங்கின் போது பேசும் போதே நெல் சன் மண்டேலா மேற்கண்ட வாறு தெரிவித்தார். ரிச்மண்ட் பகுதியில் ஆபிரிக்க தேசிய காங் கிரஸ் அங்கத்தவர்களும் எதிர்க் கட்சியின் ஐக்கிய ஜனநாயக முன் னணியின் அங்கத்தவருக்கும் இடையே தொடரும் மோதல்க ளில் கடந்தவாரம் பட்டுக் குழந் தைகள் உட்பட ஐந்து பேர்கள் கொல்லப்பட்டனர்.

குவாசூலூ நட்டால் பிராந் தியத்தில் சூலூ இனப்பிரிவின ரின் இன்காட்டா விடுதலைக் கட்சியின் ஆதரவாளர்களும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆத



ரவாளர்களும் கடந்த காலத் தில் ஏற்பட்ட மோதல்களில் 20,000-க்கும் அதிகமாக கொல் லப்பட்டனர்.

அண்மைக் காலத்தில் நெல் சன் மண்டேலா மேற்கொண்ட அரசியல் சீர்திருத்த நடவடிக் கைகளால் இனப் படுகொலை கள் அண்மைக்காலமாக குறைந் திருந்தது குறிப்பிடத்தக்கது.

## எதியோப்பியா

# செஞ்சிலுவைச் சங்க உத்தியோகஸ்தர்கள் விடுதலை!

எத்தியோப்பியாவின் தெண் கிழக்கு நகரான கோடே பகுதி யில் உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் ஆறு உத் தியோகஸ்தர்கள் கடந்த 25ம் திகதி துப்பாக்கி ஏந்திய குழு வினர்களால் கடத்தப்பட்டனர். கடத்தப்பட்ட இவ் ஆறு பேர்க ளும் கடந்த வெள்ளிக்கிழமை சந்த வித ஆபத்துமின்றி விடுவிக்கப் பட்டுள்ளனர் என செஞ்சிலு வைச் சங்கத்தினர் அறிவித்துள் ளனர்.

இவ்விதம் விடுவிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்க உத்தி யோகஸ்தர்களில் கனிஸ்நாட் டைச் சேர்ந்த ஒருவரும், மற்றை யோர் எதியோப்பியர்களுமா வார்கள். முதலில் எவ்வ கார ணத்துக்காக இவர்கள் கடத்தப் பட்டனர் என்று தெரியாத நிலை யில் சோமாலியாவில் இருந்து இயங்கும் அல் - இத்திஹாட் அல் - இஸ்லாம் எனப்படும் ஆயுதக் குழுவினர் தாமே அவர்களை கடத்தியதாக அறிவித்தனர்.

எதியோப்பியாவில் தென் கிழக்கு ஒகாடென் பிராந்தி யத்தை சோமாலியாவுடன் இணைக்க வேண்டும் எனக் கோரிப் போராட்டம் நடாத்தும் இவ் அமைப்பு, தாம் இரண்டு வாரங்களாக கைது செய்யப் பட்டவர்களை விசாரணை செய்த பின், விடுதலை செய் துள்ளதாக அறிவித்துள்ளது.

தம்மால் கைது செய்யப் பட்ட ஆறு உத்தியோகஸ்தர்க ளும் தங்களது கடமைகளுக்கு அப்பாற்பட்ட செய்கையை மேற் கொண்டதாக எழுந்த சந்தேகத் தினாலேயே விசாரணைக்குட் படுத்தப்பட்டார்கள்.

இப்பிராந்தியத்திற்குள் நுழை யும் எந்த உத்தியோகஸ்தர்களும் இனிமேல் முன்கூட்டியே இவ் அமைப்பு அறிவித்துவிட வேண் டும் என்றும் அல்-இத்திஹாட் அமைப்பின் பேச்சாளர் ஓமார் தெரிவித்தார்.

## லிபியா

# யாசீர் அரபாத் லிபியா சென்றார்

பாலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் அவர்கள் கடந்த சனி யன்று லிபியா செல்லும் வழி யில் துனிசியாவில் மேற்குப் பகுதி விமான நிலையத்தில் வந்திறங்கினார். லிபியாவிற்கு விமானமூலம் செல்ல முடியாத




நிலையில் துனிசியாவில் இருந்து அவர் தரைப்பாதை வழியாக லிபியா செல்வார் என பாலஸ் தீன செய்தி ஸ்தாபனம் அறிவித் துள்ளது. கடந்த திங்களன்று சத் திர சிகிச்சைக்குள்ளான லிபியத் தலைவர் திருமுகமட் கடாபி யின் உடல்நிலை பற்றி அரபாத் அறிந்துகொள்வார்.

கடந்த திங்களன்று லிபியத் தலைநகர் திரிப்போலியிலிருந்து 800 கிலோ மீற்றர் கிழக்கிலுள்ள பெங்டாஸியில் புனித முகமதுவின் பிறந்தநாள் நினைவுவிழாவில் கலந்துகொள்ள வந்த பல ஆபி ரிக்க முஸ்லீம் நாடுகளின் தலை வர்களை வரவேற்றுக் கொண் டிருந்த போது அவர் இடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார்.

அரபாத்திற்கும் கடாபிக்கும் இடையிலான உறவுகள் 1991ம் ஆண்டு ஸ்பெயினில் நடந்த மத் தியகிழக்கு அமைதி மாநாட் டுக்கு லிபியத் தலைவர் பகிஸ் கரித்ததன் பின் முறிவு நிலையை அடைந்திருந்தன.

பின்னர் 1995ம் ஆண்டு பாலஸ்தீனத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட சுயாட்சியை யும் இடைக்கால அமைதி ஒப் பந்தத்தையும் கடாபி எதிர்த்தி ருந்தார். இதன்பின் 1996ம் ஆண்டு கெய்ரோவில் நடந்த மாநாட்டின்போது இரு தலை வர்களும் சந்தித்துக்கொண்ட னர். அதன்பின் அரபாத் மேற் கொண்டும் முதலாவது லிபிய விஜயம் இதுவாகும்.


சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு
24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்



றெக்லிங்கன் கவுசன் மாநகரில்
T.S.K. Asien Shop
மங்கையர் —மழலைகள், ஆடவர் மனங்கவர் வண்ண வண்ண ஆடைகள் பழைய, புதிய வீடியோ, ஓடியோ நாடாக்கள், மளிகை, எவர்சில்வர், அலங்காரப்பொருட்கள் தரம்! மலிவு!! மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்



T.S.K. Asian Shop
Nord Str -7, 45661 Recklinghausen

# ஆரம்பமாகிவிட்டது

## பிரித்தானியாவில்

# GNANAM

# Telecom Centers




பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| *சிறீலங்கா | - 1min | - 0.35p |
| *இந்தியா | - 1min | - 0.30p |
| கனடா | - 1min | - 0.05p |
| அமெரிக்கா | - 1min | - 0.05p |
| ஜேர்மனி | - 1min | - 6p |
| பிரான்ஸ் | - 1min | - 0.06p |

| | | |
|---|---|---|
| லண்டன் Mobile | - 1min | - 0.15p |
| லண்டன் National | - 1min | - 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min | - 0.08p |
| சிங்கப்பூர் | - 1min | - 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min | - 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

# GNANAM Telecom Centers

180 High Street North
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# புலம்பெயர்ந்தோரின் கடமை

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வாரப்பத்திரிகையான 'யுக்திய' யாழ்ப்பாணம் செம்மணியில் 300 முதல் 400 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இரகசியப் புதைகுழிகள் உள்ள இடங்களை வரைபடத்தில் குறிப்பிட்டுக்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

தங்களது சொந்தப் புலனாய்வின் பேரில் இந்தப் புதைகுழிகள் இருக்கும் இடத்தை தாங்கள் தெரிந்து கொண்டதாக கூறியுள்ள இந்தப் பத்திரிகை, இந்தப் புதைகுழிகளில் ஏற்கனவே குடாநாட்டின் பல்வேறு இராணுவ முகாம்களில் கொலை செய்யப்பட்ட பிணமாகக் கொண்டு வரப்பட்டவர்களும் உயிருடன் அனுப்பப்பட்டு அந்தப் புதைகுழிகளுக்கு அருகில் வைத்து கொலை செய்யப்பட்டவர்களும் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும் இந்தக் கொலைகள் பல முக்கிய இராணுவ உயர் அதிகாரிகளின் அனுசரணையுடனேயே நடை பெற்றதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தப் பத்திரிகைச் செய்தி சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கு கோபத்தையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்கு அதிர்ச்சியை கொடுத்திருந்த போதிலும் தமிழ்மக்களைப் பொறுத்தவரை ஏற்கனவே தெரிந்த ஒன்றாகத்தான் இருந்தது. செம்மணியில் மட்டுமல்ல குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான பல புதைகுழிகள் இருப்பதாகவே தமிழ் மக்கள் நம்புகின்றார்கள்.

ஆயினும், கிருசாந்தி வழக்கினூடாக செம்மணிப் புதைகுழிகள் பற்றிய செய்தி வெளிவந்தது சமாதானத்துக்கான யுத்தம் என்கிற சிறீலங்கா அரசின், உள்நோக்கத்தை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

அதாவது இந்தப் புதைகுழிகளை தோண்டி அங்கு புதைக்கப்பட்டவர்கள் பற்றி உண்மை விபரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதன் மூலம் சிறீலங்கா அரசு இனச் சுத்திகரிப்பு நோக்கத்தின் அடிப்படையில் திட்டமிட்டு இனப்படுகொலை புரிந்திருக்கின்றது என்பதை நாம் சர்வதேச சமூகத்திற்கு ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும்.

நவாலிப் படுகொலைகள், நாகர்கோவில் படுகொலைகள் கொக்கட்டிச்சோலை படுகொலைகள் முதலானவை ஏற்கனவே சர்வதேச அளவில் சிறீலங்கா அரசின் முகமூடியைக் கிழித்திருந்தாலும் இந்தச் செம்மணிப் புதைக்குழிகளுக்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் உண்டு.

அதாவது சிறீலங்கா அரசு தனது யாழ்ப்பாண ஆக்கிரமிப்பை, தமிழ் மக்களை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கை, என்று பிரச்சாரப்படுத்திக்கொண்டு பொஸ்னிய செர்பியப்படைகள் எவ்வாறு பொஸ்னியாவில், பொஸ்னிய முஸ்லிம் இளைஞர்களையும் யுவதிகளையும் மற்றும் வயது வந்த ஆண்களையும் கைது செய்து கொண்டு சென்று கொலைசெய்து இரகசியமாக புதைத்ததோ அதே மாதிரியான வேலையைத் திட்டமிட்டுச் செய்தது.

ஒரு இராணுவ நடவடிக்கையின்போது இனரீதியாக அப்பாவிகளைக் கைதுசெய்தபின்; திட்டமிட்ட அடிப்படையில் கொலை செய்து இரகசியமாகப் புதைப்பது சர்வதேசச் சட்டப்படி யுத்தக் குற்ற நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கைகளுக்காகவே நாசிப் படைகளுக்கு உதவியாக இருந்த பலரும் பொஸ்னிய செர்பியத் தலைவர்களும் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால் சிறீலங்காவில் இந்தக் குற்றத்தைச் செய்தவர்களுக்கு பதவி உயர்வுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டு மேலும் மேலும் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சர்வதேச அழுத்தத்தின் மூலம் செம்மணி உட்பட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள புதைகுழிகளைத் தோண்டுவதற்கும் சிறீலங்காப் படைகளால் கைது செய்யப்பட்டபின் கொன்று புதைக்கப்பட்ட அப்பாவிகள் பற்றிய விபரங்களை வெளிக்கொணருவதற்கும், அதன் மூலம் இந்தப் பாதகச் செயல்களுக்கு, பொறுப்பான சிறீலங்கா அரசின் முக்கிய பிரமுகர்களையும் மற்றும் இராணுவத் தளபதிகளையும் யுத்தக் குற்ற விசாரணைக்கு உட்படுத்துமாறு கோருவதற்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒன்றுபட்டு செயலில் இறங்க வேண்டும். இங்கே மேற்குலக நாடுகளில் உள்ள தமிழர்கள் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஒன்றுபட்டு இந்தப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு உதவுமாறு ஐ.நா உட்பட மேற்குலக நாட்டு அரசுகளையும் மனித உரிமை அமைப்புக்களையும் கோர வேண்டும்.

# புதைகுழி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

பார்வை

'நீதி உண்மையில் செயற்படுகின்றது என்பதை இது மக்களுக்கு காட்டும். நீதி வழங்கப்பட்டது என்பது வெளியே தெரியும்படி நீதி வழங்கப்பட வேண்டும்.'

- ருவண்டாவில் இனப் படுகொலை புரிந்த 22 போர்க் குற்றவாளிகளை பகிரங்கமாகச் சுட்டுக்கொல்லமுன் ருவண்டா நீதி அமைச்சர் -

இன்று உலகம் இரு பெரும் இனப்படுகொலைகள் தொடர்பான பகிரங்க விசாரணைகளை நடாத்தி வருகின்றது. ருவண்டாவில் முன்னைய ஆட்சியாளர்கள் ருட்சி (Tutsi) இன மக்கள் மேல் புரிந்த இனப்படுகொலைகளையும், பொஸ்னியாவில் முஸ்லீம்கள் மேல் சேர்பியர்கள் புரிந்த இனப்படுகொலைகளையும் சர்வதேச நீதிமன்றம் விசாரணை செய்து வருகின்றது.

திட்டமிட்ட முறையில் இனத்தின் அடிப்படையில் படுகொலைகளைப் புரிதல்; கொல்லப்பட்டவர்களின் சடலங்களைக் காடுகளிலும் வயல்வெளிகளிலும் புதைத்தல்; அல்லது அழித்தல்; என்பன மேற்கூறிய இரு விசாரணைகளிலும் வெளிப்படும் ஒற்றுமைகளாகும்.

பொஸ்னியாவில் பிகக் (Bihac) என்ற நகருக்கு அருகேயுள்ள காட்டுப் பகுதியொன்றில் தேடுதல் நடாத்திய பொதுமக்கள், இரகசியப் புதைகுழி ஒன்றைக் கண்டுபிடித்தனர். அப் பகுதியை ஆக்கிரமித்திருந்த சேர்பியர்கள் இரகசியமாக தோண்டிய புதைகுழிகள் அவை. 1992-ம் ஆண்டு காணாமல் போன 70 இலிருந்து 300 வரையான பொதுமக்கள் வரையிலானோரின் சடலங்கள் அங்கு இரகசியமாகப் புதைக்கப்பட்டிருந்ததை உலக சமூகம் கண்டு கொண்டது. தற்போது உலக சமூகத்தின் ஆதரவில் நெதர்லாந்தில் அமைந்துள்ள உலக நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றச்சாட்டின் கீழ் பல சேர்பியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நேட்டோ நாடுகள் இவ் விசாரணைக்குத் தேவையான இராணுவ உதவிகளை வழங்குகின்றன. பொஸ்னியாவின் வட பகுதி நகரான செர்பேனியாவில் நேட்டோவின் ஆதரவுடன் புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதேவேளை ருவண்டாவில் இனப்படுகொலையில் ஈடுபட்ட 125,000 எதிர்ப்படைகளையும் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களையும் இன்றைய TUTSI அரசு கைதுசெய்து விசாரணை செய்து வருகின்றது. இனப்படுகொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் பகிரங்க மைதானத்தில் வைத்து ருவண்டாவின் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படுகின்றனர்.

* * *

செம்மணி இன்று சந்திரிகா அரசின் இனப் படுகொலை வெறியாட்டத்தின் புதைகுழிகளில் ஒன்று என பகிரங்கமான இனங்காட்டப்பட்டுள்ளது. நாவற்குழி பாலத்திற்கு அண்மையாக நல்லூர்வீதி முத்திரைச் சந்தியில் இணையும் பகுதிகளுக்கு அப்பால் உள்ள சதுப்பு நிலப் பகுதியில் சுமார் 400 தமிழர்கள் உயிருடனோ, குற்றுயிருடனோ, இரகசியமாக படுகொலை செய்யப்பட்டபின்னரோ புதைக்கப்பட்டுள்ள இடம் என அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

இது இன்று பொஸ்னிய அல்லது ருவண்டா செய்திகள் போன்று அதிர்ச்சியூட்டும் இனப்படுகொலை யதார்த்தத்தைச் சொல்லுகின்றது.

சுமார் 30,000 சிங்களத் துருப்புகளை ஏவி யாழ்குடாவைக் கைப்பற்றிய எதிரி, அங்கு செய்தித் தணிக்கையைப் பேணி சாட்சியங்களற்ற பெரும் இனப் படுகொலை ஒன்றை நடாத்தி வருவதை வெளிப்படும் புதைகுழி விவகாரம் நிரூபிக்கத் தொடங்கியுள்ளது.

செம்மணி மட்டுமல்ல தென்மராட்சிப் பகுதியில் ஏராளமான மலசலகூட குழிகளும் பாழடைந்த கிணறுகளும் சந்திரிகா அரசின் புதைகுழிகளாக திகழ்கின்றன. சர்வதேச மன்னிப்புச்சபை பதிவு செய்த சாட்சியமொன்றில், குற்றுயிராக்கப்பட்டு மலசலகூடக் குழியில் வீசப்பட்ட இளைஞர் ஒருவர் இவைகளை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

இன்று சந்திரிகாவின் 'புதைகுழி' விவகாரம் உலகம் பூராவும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. சர்வதேச மன்னிப்புச்சபையும், பல்வேறு சர்வதேச அமைப்புக்களும் புதைகுழிகளைத் தோண்டிப் பார்க்கவேண்டுமெனக் கோரிக்கை விடுகின்றனர். ஆனால் தன் இரு பிள்ளைகளுடன் பெயர் குறிப்பிடப்படாத நாடொன்றுக்கு ஓய்வெடுப்பதற்கு சந்திரிகா சென்றுள்ளார். அவரது நீதி அமைச்சர் பீரிஸ் நாட்டில் இல்லை. பதில் நீதியமைச்சர் புதைகுழிகள் பற்றி கூறப்பட்டவை பொய்யாக இருக்கலாம் எனவும் கூறுகிறார். போர்க்குற்றவாளி ஜெனரல் ரத்வத்தை கருத்து கூறவேயில்லை. இராணுவத் தளபதி தலுவத்தை தாம் இதுவரை அந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை எனப் பேட்டியளித்தார்.

யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல புதைகுழி பற்றிய செய்திகளைதான் அவதானித்ததாக கூறினார். தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் சிறீலங்கா மனித உரிமைகள் கமிசனுக்கு எழுதுவது பற்றி தான் ஆலோசிப்பதாக தெரிவிக்கின்றார். சந்திரிகா அரசின் கூட்டணி கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி. ரெலோ என்பன வழமையான அறிக்கைகளை (திகதிகளை மட்டும் மாற்றி) விடுக்கின்றனர்.

சிங்கள இனவாத அரசு அம்பலமாகிவிட்ட தனது இனப்படுகொலை ஒன்றிற்கான ஆதாரத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக வெளியிடமுன் வராது.

இனவெறியின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட அரசும், இராணுவமும் இனப் படுகொலையை ஒரு புனிதக் கடமையாகவே செய்கின்றன. திருமலை மட்டக்களப்பு அம்பாறை பிராந்தியங்களில் அப்பட்டமான இனப் படுகொலைகளை நடாத்திய அரசு அதனை மூடி மறைக்க நீதி விசாரணைகளையும், விசாரணை கமிசன்களையும் அமைத்தது. அதனால் எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை, யாழ்.குடாவை ஆக்கிரமித்த படையினர் மிகக் குறுகிய காலத்தில் மிகப்பெரிய இனப்படுகொலையை நடாத்தியபோது அக் கொடுமையின் தாக்கம் உக்கிரமாய் இருந்ததால், செய்திகள் மெதுவாக வெளியேறத் தொடங்கியுள்ளன. புதைகுழிவிவகாரம், யாழ்குடா நாட்டில் காணாமல்போனோர் விவகாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதால் விவகாரம் சர்வதேச பரிமாணம் எடுக்கின்றது.

இது தண்டிக்கப்பட வேண்டிய கொடிய போர்க் குற்றங்களாகும். பொஸ்னியாவில் இனப் படுகொலைகளை புரிந்தவர்கள் சர்வதேச போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுகின்றனர். ருவண்டாவில் போர் குற்றங்களை புரிந்தவர்கள் பகிரங்கமாக புதிய அரசினால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.


யாழ்குடாவிலும், மட்டக்களப்பிலும், திருமலையிலும் போர் குற்றங்களை புரியும் சிறீலங்கா அரசும் அதனது இராணுவ தலைமையும் பொஸ்னியா அல்லது ருவண்டா முறையில் தண்டிக்கப்படவேண்டும். திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க, ஜெனரல் ரத்வத்தை, குற்றம்சாட்டப்படும் யாழ். நகர தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட செம்மணி விவகாரத்து குற்றவாளிகளைத் தண்டிப்பது மனித குலத்தின் 'நாகரீக' கடமையாகும்.

- ராஜா

## உங்கள் கைவண்ணம்



செல்வி ற. லடிஸ்க்கா
வயது: 11 (02.06.1988)
இடம்: 77500 Chelles, France.



எங்கள் தமிழ் ஈழத்திலே புலிக்கொடி. புலிக்கொடி அன்னியநாட்டை விட்டு எங்கள் சொந்தமண்ணில் காலடி எடுத்து வைக்கும் வேளை விரைவில் வருக!

## கவிதை முற்றம்

### ஒற்றைப் பனை மரம்!

ஒற்றைப் பனை மரமும் ஓயாத கடலலையும்
வானத்தின் வர்ண ஜாலங்களும்
பூங்குயிலின் சோக கீதங்களும்
இதயத்தில் கேக்கலையா? உன் இதயத்தில் கேக்கலையா?


முற்றத்து மாதுளையில் தாவி ஓடும் அணில் பிள்ளை...
கல்பட்ட கால் ஒன்றை நொண்டி ஓடும் என் செல்ல
நாய்க்குட்டி...

நான் நட்டு வைத்த நந்தியாவட்டை மழைத்துளிதான்
பட்டதோ என் கண்ணீர்த் துளிபட்டதோ
எல்லாமே துறந்து எல்லாமே மறந்ததென்ன?

காலத்தின் கோலங்கள் கவிஞரும் கற்பனைகள்
இதயத்தில் கேக்கலையா உன் இதயத்தில் கேக்கலையா

இயந்திரத்தில் இயந்திரமாய் நானும் இங்கு வாழ்வதினால்
கடந்தகால வாழ்க்கையும்
கற்பனையாய்ப் போய் முடியுமோ?

ஆக்கம்: தி.தேவமதுரா
Basel, Swiss.




## குட்டிக் கதை படிப்போம்

# தாய் நாடு

உலகின் செல்வந்த நாடுகளில் அதுவும் ஒன்று. அங்கு கல்வியறிவு வீதம் நூற்றுக்கு நூறு. புலம் பெயர்ந்து வாழும் மக்களும் அதிகம் அவர்களையும் தன்நாட்டு மக்களைப் போல் கவனிக்கிறது. அந்த நாட்டின் தலை நகரத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கண்டிப்பு மிக்க பாடசாலை யுண்டு. அது தான் அந்த நாட்டின் சிறந்த பாடசாலை. அங்கு எளிதில் அனுமதி பெறமுடியாது. சிபாரிசுகள் செல்லாது. ஐந்து தொடக்கம் பத்தாம் வகுப்பு வரையே உண்டு. பிள்ளைகளை அனுமதிப்பரீட்சை வைத்தே எடுப்பர். அத்துடன் ஒழுக்கம் தாமதமாக வந்தால் அபராதமும் உண்டு. சுகாதாரம், விளையாட்டு, பொது அறிவு என்பனவும் பார்க்கப்படும். இப்பாடசாலையில் இருந்துதான் சர்வதேச விளையாட்டுக்குப் பலபேர் தெரிவாவர். பாடசாலைப் பிள்ளைகள் எங்கு சென்றாலும் வெற்றிதான். எனவே அந்தப்பாடசாலைக்கு வெற்றிப்பாடசாலை என்றும் பெயருண்டு. போட்டிகளில் இவர்கள் வந்தால் மற்றவர்கள் பயப்படுவார்கள். வருடந்தோறும் பாடசாலையில் பரிசளிப்புக்குப் பதிலாக விருது வழங்கும் விழாதான் நடக்கும். எல்லாத்துறைக்கும் விருதுதான் வழங்கப்படும். அது ஒரு உயர் விருதாகும். ஏனெனில் அதனைப் பெறுவது கடினம்.

அந்தவருடம் விருது விழாவில் புதியதொரு திட்டம் புகுத்த அதிபர் நினைத்து ஏழு, எட்டு, ஒன்பது, பத்தாம் வகுப்பிலிருந்து பிள்ளைகளைத் தெரிந்து தரும்படி ஆசிரியரிடம் கூறினார். ஏழாம் வகுப்பில் தமிழ்வாணியும், எட்டு, ஒன்பதில் அந்நாட்டுப் பிள்ளைகளும், பத்தில் கலைவாணியும் தெரிவாகி அதிபர் முன்நின்றனர்.

அவர் இம்முறை உங்களுக்கிடையே ஒரு போட்டி வைக்கப்போகின்றேன். உங்களிடையே சமூக உணர்வு எப்படியுள்ளது என அறியவுள்ளேன். எனவே உங்களுக்கு இந்த உண்டியல் தருகிறேன். இதில் பணம் சேர்த்து சமூக அமைப்பிடம் கொடுக்க வேண்டும் என்றும், இதோ இந்த நிபந்தனையும் உண்டு என்றார். அதாவது, இத்தொகை வருடாந்த விருது வழங்கும் விழாவில் மேடையில் கொடுக்க வேண்டும். அத்துடன் எந்தத் துறைக்கு என்றும் அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட வேண்டும். அதுவரை எனக்கோ வகுப்பாசிரியருக்கோ, உங்கள் பெற்றோருக்கோ யாருக்கும் தெரியக் கூடாது. தெரிந்தால் போட்டியிலிருந்து விலக்கப்படுவீர்கள் என்றார்.

போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு தலா இரண்டாயிரமும், முதலாமிடம் பெறுபவருக்கு பத்தாயிரம் ரூபாயும் கொடுக்க பல அமைப்புகள் முன்வந்தன.

விருது வழங்கும் விழாவும்வந்தது. மக்கள் திரண்டனர். பிரதமவிருந்தினராக மாநில முதல்வரும், நடுவர்களாகக் கல்விமான்களும், சமூக சேவை அமைப்பு பிரதிநிதிகளும் மேடையில் இருந்தனர். விழா தொடங்கியது. ஏழாம் வகுப்பில் தமிழ்வாணி கல்வி, ஒழுக்கம், விளையாட்டுத்துறைக்கு விருது பெற்றாள். எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்த சமூக உணர்வுப் போட்டி தொடங்கியது. தமிழ்வாணி தனது உண்டியலை சமூக அமைப்பிடம் கொடுத்து கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கொடுக்கச் சொல்லி விளக்கமும் கொடுத்தாள். எட்டாம் வகுப்பு மாணவி 'எயிட்ஸ்' ஆல் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு எனக்கூறி விளக்கமும் கொடுத்தாள். ஒன்பதாம் வகுப்பு மாணவி போதைப் பொருள் சிறுவயதில் பாவித்து பாதிப்படைந்தவர்களுக்கெனக் கூறி விளக்கமும் கூறினாள். விளக்கமெல்லாம் நடுவர்களால் துல்லியமாக செவிமடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கடைசியாக வந்த கலைவாணி தன் உண்டியலை தன் தாய் நாட்டில் பசியால் வாடும். சிறுவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கும்படி கூறினாள். அவள் கூறியது பலபேருக்கு வியப்பாகவும் சிலபேருக்கு ஏளனமாகவும் இருந்தபோது, அதிபர் விளக்கம் கொடுக்கச் சொன்னார்.

கலைவாணி, சபையோரே! நான் அண்மையில் படம் பார்க்கச் சென்றேன். இடைவேளையின்போது எனது தாய்நாட்டு மக்கள் படும் உண்மையான துயரங்கள் வீடியோவில் போட்டுக்காட்டப்பட்டது. என்போன்றோர் சிறுவர் சாப்பாட்டுத் தட்டுடன் அலைவதும், திரிவதும் காட்டப்பட்டது. என்னால் தாங்க முடியவில்லை. உடனே பெற்றோருடன் வீடு வந்தேன். துயர்படும் மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என நினைத்தேன். ஆனால் நான் சிறுமி என்ன செய்ய முடியும் என்றிருந்த போது அதிபர் அழைப்பு சந்தோசம் தந்தது. நான் இந் நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவள். எனது தாய்நாட்டிற்குப் போனதில்லை, எனினும் தாய் நாட்டைப் பற்றி எனது பெற்றோர் அடிக்கடி கதைப்பார்கள், அத்துடன் சிறுவர்களாகிய எமது பெற்றோர் எந்த நாட்டவரோ அது தான் எமது தாய்நாடு. எனவே புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது பெற்றோர் நாடே எமது தாய் நாடாகும். எனினும் இந்த நாடும் எனது நாடுதான் என்றுகூறி தாய் நாட்டுக்கு பின்னேதான், எந்த நாட்டுக்கும் உதவி என்றாள்.


கலைவாணியின் நாட்டுப்பற்றும், கொடுத்த விளக்கமும், முதலாமிடத்தைப் பெறமுடிந்ததுடன் உயர்விருதும், பத்தாயிரம் ரூபாய் காசோலையும் வழங்கப்பட்டது. கலைவாணி மேடையில் இருந்தவாறே தனது பெற்றோரைப் பார்த்தாள். பெற்றோருக்கு பார்வை புரிந்தது. விடைகொடுத்தனர். கலைவாணி தனது காசோலை இரண்டையும் தாய்நாட்டில் சிறுவர்களின் உணவுக்கு கொடுத்தபோது மண்டபமே அதிர்ந்தது போல் கரவொலி எழும்பியது. கலைவாணியின் பெற்றோர் பிள்ளையின் நாட்டுப்பற்றை எண்ணி மகிழ்வால் அழுதனர். திரண்ட மக்களும் ஆனந்தக் கூத்தாடினர். சிலர் அழுதனர். அப்போது பிரதமவிருந்தினர் எழுந்து கலைவாணியை அணைத்தபடி, 'நான் இந்த நாட்டுக் குடிமகன். ஆனால் இவ்வளவு நாட்டுப் பற்றுக் கிடையாது. வீடியோவிலும், பெற்றோரின் கதையிலும் ஏற்பட்ட பாதிப்பால் நாட்டின் மீது இவ்வளவு பற்றுக் கொண்ட, இங்கு பிறந்து வளர்ந்த கலைவாணியின் முன் நான் தலைகுனிந்து வெட்கப்படுகிறேன். இப்பிள்ளையின் பெற்றோரையும் வணங்குகிறேன்' என்று தழுதழுத்த குரலில் கூறி அமர்ந்தபோது, மேடைக்கு வந்த தமிழ்வாணி, தனது காசோலையை கலைவாணியிடம் கொடுத்த போது அரங்கு மீண்டும் கரவொலியால் அதிர்ந்தது.

அங்கு திரண்ட மக்கள் இரு பிள்ளைகளின் பெற்றோரையும் காணத் துடித்தனர். எனவே நாடுவிட்டு நாடு வந்தாலும் தாய் நாட்டுப் பற்று வளர்க்க வேண்டியது சிறுவர்களாகிய எமது கடமையாகும். வாருங்கள் கலைவாணி, தமிழ்வாணி வழியில் நாமும் செல்வோம்!

தயிலை 'நாகேந்திரா'
பிரான்ஸ்

## அறிந்துகொள்ளுங்கள்

## கரும்புலிகள் நாள்



கடந்த 05.06.98 அன்ற கரும்புலிகள் நாளாகும். தமிழீழத்தில் வாழுகின்ற மக்களும் உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்களும் இந்த புனிதமான நாளை மிகவும் மரியாதையோடு நினைவு கூர்ந்தார்கள்.

தமது தாய்நாட்டை எதிரிப் படைகளிடம் இருந்து மீட்பதற்காகவும், எதிர்கால சந்ததியினராகிய குழந்தைகள் மகிழ்வுடன் சுதந்திரமாக தமது சொந்த நாட்டில் வாழவேண்டும் என்பதற்காகவும், தமது இன்னுயிரைத் தியாகம் செய்பவர்களே கரும்புலிகள் ஆவர். தாம் உயிர் துறக்கப் போகின்ற நாளை முன்னரே தெரிந்து கொண்டு தமது உடம்போடு வெடி குண்டைக் கட்டிக்கொண்டு, எதிரிப்படைகள் மீது பாய்ந்து எதிரிகளை அழித்து தமது உயிரையும் தியாகம் செய்து கொள்வார்கள் கரும்புலிகள்.

முதலாவது கரும்புலி மில்லர் என்பவர் கடந்த 05.06.87 அன்று தமிழீழ நாட்டில் இருந்த எதிரிப் படைகளின் பெரிய முகாம் ஒன்றை தனியாகச் சென்று தாக்கி அழித்து தன் உயிரையும் தியாகம் செய்து கொண்டார். அவர் கரும்புலியாக உயிர்த்தியாகம் செய்த நாள் தான் கரும்புலிகள் நாளாக தமிழீழ மக்களால் நினைவுகூரப்படுகின்றது. தாய்நாட்டை எதிரிகளிடம் இருந்து மீட்பதற்காக இதுவரை நூறுக்கும் மேற்பட்ட கரும்புலிகள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். சிறுவர்களாகிய நாங்களும் எமது தாய்நாட்டின் ஈடிணையில்லாத மாவீரர்களை, தியாகத்தின் உச்சத்தைக் கொண்டவர்களை மரியாதையோடு நினைவு கொள்வோம்.

# உதைபந்தாட்ட வெற்றி



தொலைக்காட்சிப் போட்டிகள் அணைக்கப்பட்டுவிட்டன. பிரான்சில் உலகக் கிண்ணத்திற்காக உருண்டு கொண்டிருந்த உதைபந்து ஓய்ந்துவிட்டது. கடந்த சில வாரங்களாக தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுகின்ற வேளைகளில் உலகக்கிண்ண உதைபந்தாட்டங்கள் நடந்து கொண்டிருந்ததால் எம்மை அறியாமலே எமது உணர்வு எந்த அணி வெல்ல வேண்டும் என்ற நியாயத்தினை தேட முனைந்துவிடும். விளையாட்டின் தரத்தினை ஆராய்ந்து ஆதரவு செய்வோர் பலர் எம்மிடையே இருந்தாலும் எமது அடையாளம் பற்றிய சார்பு நிலை சார்ந்தே இந்த ஆதரவு இருந்திருக்கிறது. இந்த சார்பு நிலை மூன்றாம் உலக நாடுகள் என்றோ கறுப்பினத்தவர் விளையாடுகின்றனர் என்றோ பரவலாக இருந்துவருகிறது.

பரவலான அனைத்து சமூகத்தவர்களிடமும் குடிபுகுந்துள்ளவர்களின் பங்குபற்றுதல் இந்த சார்பு நிலையினை ஏற்படுத்த அவ்வவ் நாடுகளில் ஓரளவிற்காவது உதவுகிறது. தவிரவும் பூர்வீகமாக வாழ்ந்துவருகிற மக்களின் ஏற்றுக் கொள்ளவைக்கும் இது ஒருபுறம் பங்களிக்கிறது.

பல்லின, பல் கலாச்சாரப் பின்னணியினை கொண்ட விளையாட்டு வீரர்களை உள்ளடக்கிய பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியும் அதன் வெற்றியை தொடர்ந்து தேசிய ரீதியில் ஏற்பட்டுள்ள வெற்றிப் புளாங்கிதமும் 'பல் கலாச்சார பிரான்சு ' (multi cultural France) என்ற சொற்பதத்திற்கு ஒரு அர்த்த புஷ்டியைக் கொடுத்துள்ளது.

வெறுமனே விளையாட்டு ரீதியில் தனது நாட்டில் வைத்து வெற்றிக்கிண்ணத்தை முதல் தடவையாக பிரான்சு தட்டிக்கொண்டது வரலாற்றின் ஒரு முக்கிய பதிவு. இதனிலும் மேலாக அரசியல், சமூக ஒருங்கிணைப்பாடு என்ற வகையில் இந்த உதைபந்தாட்ட வெற்றி வேறுபல முக்கியத்துவங்களையும் பெறுகின்றது.

பல விதமான பூர்வீகங்களையும் கொண்ட பிரான்ஸ் மக்களும் வெள்ளை, சிவப்பு, நீல வர்ணங்களை கொண்ட கொடியுடன் ஆடிப் பாடி மகிழ்ந்தது பிரான்சின் வீதிகளில் நிகழ்ந்தது.

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியினர் பிரான்சு நாட்டின் நாசிச மற்றும் அதி தீவிர தேசிய வாதிகளை 1 - 0 என்ற ரீதியில் தோற்கடித்துள்ளதாக ஒரு முக்கிய பத்திரிகை கட்டுரை வரைந்துள்ளது.

பிரான்சு அணியின் முதல் இரண்டு கோல்களையும் இட்டு வெற்றிக்கு வழிவகுத்த Zidane இன் பெற்றோர்கள் 60 களில் அல்ஜீரிய நாட்டிலிருந்து வந்தவர்கள். Marseilles நகரின் Castellane எனப்படும் அதிகம் விரும்பப்படாத புறநகர்ப் பகுதியில் பிறந்து வளர்ந்தவர் இந்த Zidane. இந்த அல்ஜீரிய பூர்வீகத்தினை கொண்ட மக்கள் மொத்தத்தில் பிரச்சினைக்கு உரியவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள். 30 வீதத்திற்கு மேலானவர்கள் வேலை வாய்ப்பற்ற பிரான்சு நாட்டின் தலைவலி என வர்ணிக்கப்படுபவர்கள்.

இந்த 26 வயது Zidane இன் வெற்றி இந் நிலைக்கு உள்ளாக்கப்படுகின்ற பிரான்சின் அல்ஜீரிய மக்களுக்கு தெம்பூட்டியிருக்கிறது.

அடுத்தவர் Lilian Thuram. கறுப்பினத்தை சேர்ந்த ஏழ்மைக் குடும்பத்திலிருந்து வந்த இவர் பிரான்சின் முன்னைய காலனித்துவ தீவுகளில் ஒன்றாகிய குவாடுலூப்பின் பூர்வீகத்தைக் கொண்டவர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தின் போது இவர் இட்ட இரண்டு கோல்களையும் தொடர்ந்து மகிழ்ச்சிப் பரவசத்தில் பாரிசின் CHAMPS ELYSE இல் கூடிய மக்கள் இவரை பிரான்சின் ஜனாதிபதி ஆக்குங்கள் என்று பரவசப்பட்டு கோஷமிட்டனர்.



பிரான்சு மக்கள் அனைவருக்குமே இந்த வெற்றிப் புளாங்கிதத்தினை வழங்கிய உதைபந்தாட்டக் குழுவில் இருந்த 22 பேரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வெளிநாட்டு பின்னணியைகொண்டோரே.

Marcel Desailey கானாவில் பிறந்தவர். ChrisstianKaramby நியூ கலிடோனியாவின் கனாக் இனக் குழுவினை சேர்ந்தவர். Pattrick Viera செனகல் நாட்டிலிருந்து வந்தவர், David Trezeguet தனது ஆர்ஜன்டீனா தந்தையுடன் புவனஸ் அயர்ஸ் இல் வளர்ந்தவர்.

ஆட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர், பிரான்சிய அணியில் அனேகம் வெளிநாட்டு பின்னணியினை கொண்ட வீரர்களை அணியின் நடத்துனர் Aime Jacquet அறிமுகப்படுத்தி உள்ளார் என சில பத்திரிகைகள் தமது பத்திகளில் விமர்சித்திருந்தன.

உலகக் கிண்ண ஆட்டத்தில் தனக்கு இரண்டு இலக்குகள் இருந்ததாக இந்த நடத்துனர் கூறுகின்றார்.

முதலாவது போட்டிகளில் வெற்றிபெறுவது. இரண்டாவது பல்கலாசாரப் பின்னணி

## விமர்சனத்துக்கு பதில்



பிரெஞ்சு அணியின் பயிற்சியாளர் திரு. Aime Jacquet உலக கிண்ணப்போட்டியில் விளையாடத் தெரிவு செய்த அணியினர் அதிகமாக வெளிநாட்டவர்களையும் வெவ்வேறு இன அடையாளமுடையவர்களையும் சேர்த்துக் கொண்டுள்ளதாகவும், இதனால் பிரான்ஸ் வரலாற்றுத்தோல்வி ஒன்றை தழுவப்போவதாக பிரான்சின் முன்னணி விளையாட்டுப் பத்திரிகைகளும் பல விளையாட்டு விமர்சகர்களும் முன்பு கடுமையான விமர்சனம் வைத்திருந்தனர்.

பிரான்ஸ் அணியின் மகத்தான வெற்றியை அடுத்து கடந்த திங்கள் அன்று பிரான்ஸ் தொலைக்காட்சியின் ஒரு நிகழ்ச்சி ஒன்றில் அவ்வாறு விமர்சனம் வைத்தவர்களுக்கு அவர் பதிலளித்தார். 'பிரான்ஸ் பங்கு கொண்ட ஒரு போட்டியிலும் தோற்கவில்லை. பிரான்ஸ் அணி மோசமான பாதையில் செல்லப்போவதாக சொன்னீர்களே எது அந்த மோசமான பாதை இன்று நாங்கள் உலகக் கிண்ணத்தைப் பெற்றிருப்பதா?' என்று திருப்பிக்கேட்டார்.

திரு. எயிமே ஜக்கே மீது விமர்சனம் வைத்த பத்திரிகைகளும் விளையாட்டு விமர்சகர்களும் பிரான்ஸ் அணியின் வெற்றியை அடுத்து அவரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## உலக உதைபந்தாட்ட இறுதிப் போட்டி விபரம்


| ஆண்டு | நகரம் | பார்வையாளர் | நாடுகள் | முடிவு |
|---|---|---|---|---|
| 1930 | மொன்ரவிடியோ | 90,000 | உருகுவே-ஆர்ஜென்டீனா | 4-2 |
| 1934 | ரோம | 50,000 | இத்தாலி-செக்கோஸ்லாவாக்கியா | 2-1 |
| 1938 | பாரிஸ் | 45,000 | இத்தாலி-ஹங்கேரி | 4-2 |
| 1950 | றியோ டி ஜனரியோ | 1,99,854 | உருகுவே-பிரேசில் | 2-1 |
| 1954 | பேர்ன் | 60,000 | ஜேர்மனி-ஹங்கேரி | 3-2 |
| 1958 | ஸ்ரொக்ஹோம் | 49,737 | பிரேசில்-சுவீடன் | 5-2 |
| 1962 | சந்தியாகோ | 68,679 | பிரேசில்-செக்கோஸ்லாவாக்கியா | 3-1 |
| 1966 | வெம்பிளி | 93,802 | இங்கிலாந்து-ஜேர்மனி | 4-2 |
| 1970 | மெக்சிக்கோ | 1,07,412 | பிரேசில்-இத்தாலி | 4-1 |
| 1974 | முனிச் | 77,833 | ஜேர்மனி-நெதர்லாந்து | 2-1 |
| 1978 | புவனோஸ் அயர்ஸ் | 77,000 | ஆர்ஜென்டீனா-நெதர்லாந்து | 3-1 |
| 1982 | மட்ரிட் | 90,080 | இத்தாலி-ஜேர்மனி | 3-1 |
| 1986 | மெக்சிக்கோ | 1,14,580 | ஆர்ஜென்டீனா-ஜேர்மனி | |
| 1990 | ரோம் | 73,603 | ஜேர்மனி-ஆர்ஜென்டீனா | 3-2 |
| 1994 | லொஸ் ஏஞ்சல்ஸ் | 94,194 | பிரேசில்-இத்தாலி | 3-2 |
| 1998 | செயின்ட் டெனிஸ் | 80,000 | பிரான்ஸ்-பிரேசில் | 3-0 |

## 16-வது உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளின் புள்ளி விபரம்

| | |
|---|---|
| நடைபெற்ற போட்டிகள் | -64 |
| கலந்துகொண்ட நாடுகள் | -32 |
| அடிக்கப்பட்ட கோல்கள் | -171 |
| கோணர்கள் | -667 |
| ஓப்சைடுக்கள் (Offsides) | -379 |
| மஞ்சள் அட்டைகள் | -250 |
| சிவப்பு அட்டைகள் | - 22 |
| மாற்றப்பட்ட வீரர்கள் | -330 |
| தோல்வியே காணாத அணி | -பிரான்ஸ் |
| அதிகூடிய கோல்போட்ட ஆட்டம் | -ஸ்பெயின் -பல்கேரியா ஆட்டம் (6:1) |
| கூடிய கோல்கள் போட்டவர் | -சுக்கர் (குரோசியா) |

தொகுப்பு: பொன் தாமோதரம்

# பிரான்சிய அகவாழ்வில் பல் கலாச்சாரத்திற்கான வெற்றி



யினை கொண்ட வீரர்களை வைத்தே அதனைச் சாதிப்பது. இரண்டிலுமே அவர் வெற்றி பெற்றுள்ளனர்.

முன்னர் ஒருமுறை பிரான்சு நாட்டின் முக்கிய பத்திரிகையாகிய LE MONDE பிரான்சு, பெல்ஜியம் இரண்டுமே ஐரோப்பாவின் இனத் தூய்மையும் கூடிய நாடுகள் என வர்ணித்திருந்தது. LE MONDE இன் இந்த வர்ணிப்பு எந்த அளவிற்கு நியாயமானது என்ற வாதம் ஒருபுறம் இருக்க நிறவாதத்தின் அடிப்படையிலான இனத்துவவாதி LE PEN இன் கட்சி கடந்த தேர்தலில் 15% இற்கும் அதிகமான ஆதரவினை பெற்றிருந்தது மட்டும் உண்மை.

பல கலாச்சார, பல் இன பிரான்சு நாட்டை முன் நிறுத்தும் அரசியல்வாதிகளுக்கு இந்த LE PEN ஒரு தலையிடியாகவே இருந்துவருகிறார்.

அரசியல் வாதிகளால் சாதிக்க முடியாததை சிலவேளை இந்த உதைபந்து சாதிக்கின்றதா? என வினாவுகின்றன பிரான்சின் பத்திரிகைகள்.

ஆக்கிரமித்த பட்சம் நிறங்களின் ரீதியில் மனிதர்களைப் பிரிக்கின்ற LE PEN போன்றவர்களை கேலிக்கிடமாக்கி பல நிறங்களை கொண்டோரையும் ஒருவகை கூட்டு கொண்டாட்டத்திற்கு அழைத்துள்ளது இந்த உதைபந்தாட்ட வெற்றி.

இந்த உதைபந்தாட்ட வெற்றியினைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள ஒருமைப்பாடு ஒருவித மாயையா என்று கேள்வி எழுப்பி அதற்கான பதிலையும் வழங்குகிறது LIBERATION எனும் பிறிதொரு பிரான்சு பத்திரிகை 'பிரான்சு உடனடியாக மாறுகின்றதோ இல்லையோ ஏற்பட்டுள்ள இந்த மாயை ஒரு புதுசிந்தனையை உருவாக்கும்'. இது அப் பத்திரிகையின் கருத்து.

புதிய சிந்தனைகள் புதிய செயற்பாடுகளையும் உருவாக்கலாம்.

பிரான்ஸ் நாட்டின் பிறிதொரு பத்திரிகையாகிய LE FIGARO வட ஆபிரிக்க பூர்வீகத்தினை கொண்ட ஒரு மதுபானக்கடை உரிமையாளர் தனது கடையின் வாடிக்கையாளர்கள் இனிமேல ஜென்மத்தில் LE PEN இன் நிறவாதக் கட்சிக்கு வாக்களிக்கப் போவதில்லை என்று தெரிவித்ததாக எழுதுகிறது.

அதுபானக்கடை பிரஸ்தாபிப்புக்கள் போதையில் வந்ததாக கருத இடமுண்டு. இருந்தாலும் லீ பென் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற ஐரோப்பியக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத்தின் போதும் அண்மைய இறுதி ஆட்டத்திற்கு முன்னர் கூறிய வார்த்தைகளைப் பாருங்கள்.



முன்னர் கூறியது இப்படி. 'இந்த வெளிநாட்டவர் கூட்டம் ஒரு பிரான்சு அணியில் இடம் பெற தகுதி அற்றவர்கள்'

கடந்த சனியோ ஏமெ ஜாக்கே வின் வார்த்தைகள் இப்படி இருந்தது. 'நாம் எப்போதும் பிரான்ஸ் பிரஜைகள், பல இனங்களையும், சமயங்களையும் சார்ந்திருக்கலாம் என்று கூறி வந்திருக்கிறோம். எந்த இனத்தவராக இருந்தாலும் நமது நாட்டிற்காக உழைத்தால் அதுவே போதும்.'

இந்த வெற்றியும் அதனைத் தொடர்ந்த மகிழ்ச்சிப் பிரவாகமும், பரசவக் கொண்டாட்டமும் வரலாற்றின் தொடர்கின்ற பக்கங்களில், சம அந்தஸ்துடனும் தகுதியுடனும் பிரான்சிய சக வாழ்வில் சகல இனத்தவரும் இணைக்கப்பட வேண்டும் என்ற வாதத்திற்கு நிச்சயம் உரம் சேர்க்கும்.

- ராஜன்

## 1944-க்கு பின் நிகழ்ந்த மாபெரும் எழுச்சி




கடந்தவாரம் உலக கிண்ண இறுதிப் போட்டியில் பிரான்ஸ் வென்றதும்நாடு தழுவிய ரீதியில் பிரான்ஸ் மக்கள் வீதிகளில் இறங்கி பட்டாசுகளைக் கொழுத்தியும் பல்வேறு இசைக் கருவிகள், ஒலிக் கருவிகளை இசைத்தும் ஒலித்தும் கோசங்களை எழுப்பியும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

1944 ல் நாசிப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து பிரான்ஸ் விடுதலை அடைந்தபோது ஏற்பட்ட எழுச்சிக்கு அடுத்தபடியாக தேசிய அளவில் வயது வித்தியாசமின்றி மக்களிடையே ஏற்பட்ட மிகப்பெரிய எழுச்சி இதுவென்று சொல்லப்படுகிறது.

## பயிற்சியாளருக்கு பாராட்டு

பிரான்சின் வெற்றியை அடுத்து அந்த அணியின் பயிற்சியாளர் ஏமெ ஜாக்கே க்கு நாடு தழுவிய அளவில் பாராட்டுகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

இன்னும் சில வாரங்களில் ஓய்வு பெறப்போகும் இவருக்கு பிரெஞ்சு அரசாங்கம் பல பதக்கங்களும் பட்டங்களும் கொடுக்கவுள்ளது. பிரான்சிற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைத் தேடித் தந்ததற்காக பிரான்சில் புதிதாக உருவாக்கப்படும் விளையாட்டு மைதானங்களுக்கு இவரது பெயரைச் சூட்டுவது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.




## இந்த நூற்றாண்டின் இறுதி வெற்றி

பிரான்ஸ் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அடைந்த வெற்றி இந்த நூற்றாண்டின் இறுதியில் அந்த நாட்டுக்குக்கிடைத்த மிகப்பெரிய வரலாற்று சிறப்புமிக்க வெற்றியாகும் என்று சொல்லப்படுகின்றது. பிரான்சுக்கு இந்த நூற்றாண்டில் இது ஒரு எடுத்துக்காட்டான முன்மாதிரியான நிகழ்வாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## களைகட்டிய குடியரசு தினம்

ஜூலை மாதம் 14ம் திகதி பிரான்சில் குடியரசு தினமாகும். வழக்கமாக அணிவகுப்புகள் ஆடல் பாடல் கொண்டாட்டங்கள் என்று அமர்க்களப்படும் இந்த நாள் இம்முறை பிரான்ஸ் பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்ட வெற்றியை அடுத்த 2வது நாளில் வந்ததால் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு களை கட்டியிருந்தது.

## றொனோல்டோவுக்கு காலில் வலி



பிரேசில் அணியினதும் பெரும்பாலான உலக உதைபந்தாட்ட ரசிகர்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய றொனால்டோ இடது குதிக்காலில் ஏற்பட்ட நோய்க்காக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்ற பின்பே மைதானத்திற்கு விளையாட வந்திருந்தார். அதுவும் போட்டி ஆரம்பிப்பதற்கு 45 நிமிடங்கள் இருக்கும்போதே அவர் மைதானத்துக்கு வந்திருந்தார். இது ரசிகர்களுக்கு போட்டி முடியும் வரை தெரியாது.

## உலக உதைபந்தாட்டம் - கூடிய கோல் அடித்தவர்கள்

| ஆண்டு | கோல் அடித்தவர் | நாடு | கோல்கள் |
|---|---|---|---|
| 1930 | குய்லோமோஸ்ராபில் | ஆர்ஜென்டினா | 8 |
| 1934 | ஆஞ்சலோஷியாவியோ | இத்தாலி | 4 |
| | ஓல்ட்ரிச் நெஜெட்லி | செக்கோஸ்லாவாக்கியா | 4 |
| | எட்மண்ட் கோஹென் | ஜேர்மனி | 4 |
| 1938 | லியோனிடாஸ் டி சில்வா | பிரேசில் | 8 |
| 1950 | அடெமிர் | பிரேசில் | 9 |
| 1954 | சாண்டோர் கோசிஸ் | ஹங்கேரி | 11 |
| 1958 | ஜுஸ்ற் ஃபொன்டைன் | பிரான்ஸ் | 13 |
| 1962 | டார்ஜன் ஜேர்கோவிக் | யூகோஸ்லாவியா | 5 |
| 1966 | ஊஸெபியோ | போத்துக்கல் | 9 |
| 1970 | ஜேர்ட் முல்லர் | ஜேர்மனி | 10 |
| 1974 | கிரெஸ்கோர்ஸ் லாரோ | போலந்து | 7 |
| 1978 | மரியோ கெம்பஸ் | ஆர்ஜென்டினா | 6 |
| 1982 | பாலோலோ றோசி | இத்தாலி | 6 |
| 1986 | கரே லினெகர் | இங்கிலாந்து | 6 |
| 1990 | சல்வரோர் ஷில்லாசி | இத்தாலி | 6 |
| 1994 | கிறிஸ்ரோ ஸ்ரொய்ச்கொவ் | பல்கேரியா | 6 |
| | ஓலெக் சலென்கோ | ரஷ்யா | 6 |
| 1998 | சுகர் | குரோசியா | 6 |

## மூன்றாவது இடத்தை தட்டிச் சென்ற குரோஷியா

அரையிறுதிப் போட்டிகளில் தோல்வியைக் கண்ட நெதர்லாந்து, குரோஷியா அணிகளுக்கிடையில் மூன்றாவது இடத்திற்கான போட்டி 11/7/98 பாரிஸில் நடைபெற்றது. ஆட்டம் ஆரம்பித்து 13 வது நிமிடத்தில் குரோஷியாவின் பிரோசினெக்கி (Prosinecki) தனது அணிக்கான முதலாவது கோலை [illegible] 22 வது நிமிடத்தில் நெதர்லாந்தின் (Zenden) தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார். ஆனாலும் 35 வது நிமிடத்தில் குரோஷியாவின் [illegible] சுக்கர் (Suker) தனது அணிக்கான [illegible] கோலைப் போட்டார். தொடர்ந்து இரு அணியினரும் [illegible] கோல் போட முயன்றும் [illegible] குரோஷியா மூன்றாம் இடத்தைப் பெற்றது.

## சினிமா

# பிரியமுடன்

**யமுனா ராஜேந்திரன்**

'பிரியமுடன்' விஜய் கௌசல்யா நடித்த, வின்சென்ட் செல்வா இயக்கிய படம். இன்றைய திகதிக்கு தமிழ்நாட்டில் நன்றாக ஓடும் படம். பிரியமுடன் படத்தின் காட்சிகளை துவைா, சிவப்பு ரோஜாக்கள், மூடுபனி, காதல்கோட்டை பாடல்களில் நீங்கள் பார்க்கலாம். சில காட்சி அமைப்புக்கள்: சிற்றூர் வாசிப்பது, காதலியும் அருகில் அமர்ந்திருப்பது (மூடுபனி), கடைசிக் காட்சியில் காதலிக்கும் வைக்கோ மாதிரி பாழடைந்த கட்டடங்களுக்கு மத்தியில் கத்துவது (குணா), கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு கண்களைத் தாழ்த்திப் பார்ப்பது (சிவப்பு ரோஜாக்கள்), கைகளை மேலே தூக்கி அதே அரண்மனைகளுக்கிடையில் பாட்டுப் பாடுவது (காதல் கோட்டை) என பழைய படங்களின் காட்சிகளையும் கதைய மைப்புக்களையும் சரியான விகிதத்தில் தர்க்கபூர்வமாக உங்களால் கலந்து தர முடியுமானால், அதுதான் பிரியமுடன் படம்.

சமீபத்திய காதல் படங்கள் காதலை வேறுவேறு கோணங்களில் — வேறுவேறு முடிவுகள் திருப்பங்களுடன் சொல்லிப் பார்த்தது. உலகத்து சகத் தொகையிளவு திருப்பங்கள் முடிவுகள் காதலுக்கு உள்ளது. இன்னும் வருங்காலத்தில் அதைத்



தமிழ் சினிமாக்காரர்கள் சொல்லியே தீருவார்கள். இப்படம் இன்னும் கொஞ்சம் வித்தியாசம்: பின் திரும்பிப்போய் சிவப்பு ரோஜாக்கள். அப்புறம் மோகன் நடித்த சில காதல் கொலைப் படங்களின் படிப்பினையுடன் இன்றை நவீனரகக் காதலையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறது.

படம் பிய்த்துக்கொண்டோடுகிறது.

படத்தில் நாயகன் ஒரு மிகப் பச்சையான அயோக்கியன் தனது நலத்துக்காக எதையும் செய்யும் அயோக்கியன். பணம் இருப்பதால் அவனால நட்பை 'வாங்க' முடியும். அது இருப்பதால் காதலிக்கும் பெண்ணையும் 'உடமை' கொள்ள முடியும். கண்டவுடன் அந்தப் பெண்ணை 'அடைவதுதான்' அவன் நோக்கம். அவனது தோற்றம் மட்டுமே காதலுக்கான அடிப்படை. 'தான் இரத்தம் கொடுத்துக் காப்பாற்றியதாக' பொய் சொல்கிறான். நேர்மையாகக் கொதிக்கும் தகப்பனைக் கொல்கிறான். பிற்பாடு நண்பனைக் கொல்கிறான். கொலைகள் காதலால் புனிதப் படுகிறது.

டைரக்டர் சொல்கிறார்: விஜயை வில்லனாகக் காட்டவில்லை. தன்னுடைய இலட்சியம் நிறைவேற எதையும் செய்யத் தயாராயிருக்கும் ஒரு உணர்ச்சி பூர்வமான இளைஞனாகத் தான் காட்டியிருக்கிறேன் (தமிழன் எக்ஸ்பிரஸ்: வின்சன்ட் செல்வா: ...ஜூலை 1998)

என்னப்பா இலட்சியம்? பத்துப்பேரை கொல்லவெனத் தீர்மானித்துக்கொண்டு எதையும் செய்யத் தயாரிருப்பவனெல்லாம் இனிமேல் தமிழ் சினிமாவில் இலட்சியவாதியாகிவிடுவான்.

படத்தில் விஜய்யின் அப்பா சந்திரசேகர், இளைமாக்களில் வருகிறார். விஜய் நடிப்புக்கு புரோமொசன் கிடைத்துவிட்டது என்கிறார்கள். ரஜினிகாந்த் கமலுக்கு அடுத்து விஜய் என்பது சரிதான். ரஜினி கமல் தாண்டி வந்த அதே நடிப்புள்ள படங்கள் செக்குமாடு மாதிரி சுற்றிச் சுற்றி, கடந்த காலத்து அயோக்கியத்தனங்களை புதுப்புதுத் திறமையுடன் அரங்கேற்றும் முயற்சிகள் விஜய் 'நடிப்பதாக' சொல்லும் காட்சிகளில், தவிர்க்க முடியாமல் 'ரகுவரன்' என்கிற அற்புதமான நடிகனின் ஞாபகம் வந்து போகிறது. விஜய் சொந்தமாக நடிக்கக்கற்றுக்கொள்வது நல்லது.

கொலைகாரப் படத்தைக் கூட தர்க்கபூர்வமாகச் சினிமாவாக்கி மக்களை சடுபடச் செய்ய முடியும். சினிமாக் கலையின் சக்திக்கும் அதே கலையின் ஆபத்துக்கும் சாட்சியம், பிரியமுடன் திரைப்படம்.

இந்தப் படத்தில் கதாநாயகனின் மனோநிலை திரிபு என்பது காட்டப்படாமல் இலட்சியம் நிறைவேற எதையும் செய்யும் சாதாரண மனிதனாகக் காட்டியிருக்கிறார்.

தமிழ் சினிமாக்காரர்களுக்கு உளவியல் என்பது 'சமூகவிஞ்ஞான ஆய்வுத்துறை' என்கிற அடிப்படை கூடத் தெரியாது. அப்பெண்ணை விரும்புகிற காரணம்தான் கொலைக்கான காரணம் என்றால், குறைந்தபட்சம் அந்தப் பெண்ணை கதாநாயகன் மூர்க்கமாக விரும்புவதற்கான உளவியல் காரணங்களை அழுத்தமாக நிறுவியிருக்க வேண்டும்.

அப்படி எந்தப் பிரச்சினையுமே படத்தில் இல்லை. அவ்வகையில் பிரியமுடன் படம், காதலை வேறு ஒரு கோணத்தில் சொல்லப் பார்த்த படம் தவிர வேறில்லை.

ஏன் தமிழ் சினிமாக் காரர்களுக்குத் 'திரில்லர்' என்றாலே பெண்களைக் கொலை செய்வது மட்டும்தான் 'திரில்லர்' என்றாகிறது? அல்லது கொலைக்கு பெண்களே காரணமாகிறார்கள்?

சிவப்பு ரோஜாக்கள் படத்தில் பெண்களால் வஞ்சிக்கப்பட்ட தகப்பனுக்காக மகன் இனம் பெண்களை கொலை செய்து கொண்டே இருப்பான். இருபத்துநாலு மணிநேரம் படத்தில் பெண்களைக் கொலை செய்து அவரோடு சேர்த்துப் புதைத்து பூசி மெழுகி இருப்பான். தமிழ்ப் படங்களில் பூனை, நாய் போன்றவற்றின் கொடூரத்திற்குப் பின்னிருக்கும் பழக்கப் படுத்தப்பட்ட காரணங்கள் கூட தெளிவாக இருக்கிறது. பூனையின் கொடூரம் காரணம் இல்லாது காமெராவால் பயங்கரப் படுத்தப்பட்டிருக்கும்.

மனிதர்களைப் பாவிப்பதிலிருந்து வீட்டுப் பிராணிகளைப்

> அப்பெண்ணை விரும்புகிற காரணம்தான் கொலைக்கான காரணம் என்றால், குறைந்தபட்சம் அந்தப் பெண்ணை கதாநாயகன் மூர்க்கமாக விரும்புவதற்கான உளவியல் காரணங்களை அழுத்தமாக நிறுவியிருக்க வேண்டும்.

பாவிப்பது வரை அவரவர் மனோநிலைகளின் வளர்ச்சிக்கான சமூக உளவியல் காரணங்கள் என்றுமே தமிழ் படங்களில் சித்தரிக்கப்படுவதில்லை.

தமிழ் சினிமாக்காரனுக்கு 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்கிற பழைய கண்ணே போதும். சகலத்தையும் இதன் மூலமே சரிக்கட்டி விடுவான்.

இந்தப்போக்கு எதனுடைய பாதிப்பு? அப்பட்டமாக ஹொலிவூட் சினிமாவின் பாதிப்பின்றி வேறில்லை. 'ஹிட்ச்காக்' படங்களின் கொச்சையான பிரதிபலிப்புத்தான் அமெரிக்கப் பெண் கொலைப்படங்கள்.



ஹிட்ச்காக்கின் சைக்கோ படம் மட்டும்தான். அதன் நீர்த்தனத்தில் இவர்களைப் பாதித்திருக்க அதுவும் ஒரேயொரு காட்சி: குளியலறை தொட்டியில் நீண்ட கத்தியால் குத்திக் கொல்லும் காட்சி.

மற்றப்படி அக்கதாநாயகனின் தாயின் மரணமும், அதற்கு ஏற்படும் மன பிறழ்வும், உளவியல் சிக்கலும் இந்த இயக்குநர்களில் எவருக்குமே பிரச்சினையாக இருந்ததில்லை.

ஹிட்ச்காக் இயற்கையின் மனித ஜீவராசிகள் அனைத்திற்குமான அனர்த்தங்களின் பின்னிருக்கும் உளவியல் மற்றும் இயற்கை சார்ந்த காரணங்களை தனது படங்களில் ஆய்வுக்கு உட்படுத்தினார்.

*The Birds* (பறவைகள்) படத்தில், ஒரு குறிப்பிட்ட மாதங்களில் பறவைகள் கூட்டமாக வந்து அந்நகரத்து மக்களைக் கொடூரமாகக் கொல்லுவதைச் சொல்லியிருந்தார் ஹிட்ச்காக். குறிப்பிட்ட மாதங்களில் மாறும் சீதோஷ்ண நிலைக்கும் அப்பறவைகளின் அனர்த்தமான செய்கைகளுக்கும் உறவைக்காண முயன்றிருந்தார் ஹிட்ச்காக் அப்படத்தில்.

ஹிட்ச்காக்கின் படங்களில் காரணம் காணப்படாமலே மனிதனின் உணர்வுகளை ஆய்வு செய்யும் 'கலைமனம்' ஒன்று எப்போதுமே உண்டு.

அப்போ சங்கர் கொலை நடந்த காலகட்டத்தில் ஒரு



மலையாளப் படம் வந்தது. அது தமிழிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டது. பிரமினா அப்படத்தில் நடித்திருந்தார். (பலனிக்கவும் இப்போது பெயர் மறந்துபோனது) அப்படத்தில் குடும்பத்தையே கொலைசெய்து கிணற்றில் போடுவான் கதாநாயகன். காரணம் என்ன? அண்ணனில்லாத நேரத்தில் அண்ணி கதாநாயகனை பாலுறவுக்கு அழைக்கிறாள். தொடர்ந்து அண்ணி, அம்மா, தம்பி, குழந்தைகள் என எல்லோரையும் ஒருவர் பின் ஒருவராக கொலை செய்வான். மலையாளப்படத்தில் மட்டுமல்ல, தமிழ் படங்களில் மட்டுமல்ல, துளசி ராம்சே சகோதரர்கள் எடுக்கும் இந்திப் படங்களிலும், இந்தியாவில் வரும் பெரும்பாலான தொலைக் காட்சி படங்களிலும் கொலைக்கான காரணங்களாக அனைத்திலுமே பெண் பாலுறவு மீறலையே காண்பித்திருப்பார்கள். அதுவும் மேற்போக்கான வெளிப்படையான காட்சிகளாக இருக்கும். பெண்ணின் பாலியல் மீறலுக்கான காரணங்கள் எதுவுமே இங்கு அவசப்பட்டிருக்காது.

> மனிதர்களைப் பாவிப்பதிலிருந்து வீட்டுப் பிராணிகளைப் பாவிப்பது வரை அவரவர் மனோநிலைகளின் வளர்ச்சிக்கான சமூக உளவியல் காரணங்கள் என்றுமே தமிழ் படங்களில் சித்தரிக்கப் படுவதில்லை.

ஆக, இந்தியாவில் படங்கள் முழுக்கவுமே பெண்ணையும் பாலுறவையும் இந்திய வைதீக நம்பிக்கைகளின் அடிப்படையில் தொடர்பு படுத்தி கொலைக்கான காரணங்களை ஆண்வழி நோக்கில் ஆண் இலட்சியவாதி எனும் நோக்கில் சித்தரித்திருப்பார்கள்.

இதற்கு மிகச்சிறந்த உதாரணங்கள் தான் தமிழ்ச்சினிமாக்களில் பாரதிராஜாவின் சிவப்பு ரோஜாக்களும் இப்போது வின்சென்ட் செல்வாவின் பிரியமுடன் திரைப்படமும். இரண்டுமே உளவியலின் அடிப்படைகள் அல்லது தெரியாத இதாற்றிக் கவலைப்படாத பழைப்படங்கள்.

## மாதம் ஒரு மனிதர்

# அணுவியல் பேராசிரியர் வே.இலகுப்பிள்ளை

## அவர்களுடனான சிறப்புப் பேட்டி

'அணு சக்தி' என்றவுடன் ஐயையோ! பயங்கரமானது! ஆபத்தானது! மனித இனத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது! உலகத்தையே ஒட்டுமொத்தமாக அழிக்கக் கூடியது! என்கின்ற எண்ணந்தான் நம்மிடம் இருக்கிறது.

இல்லை அணுசக்தி- மனித இனத்துக்கு பயன்தரக் கூடியது, மனிதர்களை அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியது. மனித இனத்தினுடைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய உதவக் கூடியது, என்று யாராவது சொன்னால் நம்மால் நம்ப முடியாமல் தான் இருக்கும்.

ஆனால் எந்தவொரு அழிவு சக்தியும், எந்தவொரு கொடூரமான உபயோகத்திலும் மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய சாதகமான ஒரு உபயோகம் இருக்கும். அதேபோல் தான் அணு சக்தியும். அழிவை விட ஆக்கபூர்வமான தேவைகளுக்கு அதிகளவு பயன்படுத்தலாம் என்று அடித்துச் சொல்கின்றார், அணுசக்தித்துறை விஞ்ஞானியும், அணுசக்தியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதில் பல புதிய கண்டு பிடிப்புக்களை செய்தவருமான பேராசிரியர் இலகுப்பிள்ளை அவர்கள்.

கனேடிய அணுசக்தி கமிசனில் 22 வருடங்கள் சிரேஷ்ட விஞ்ஞானி ஆலோசகராகவும், கனேடிய ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் MSC PHD மாணவர்களுக்கு விரிவுரை நடத்துகின்ற பேராசிரியராகவும், மலேசியா, சம்பியா, பல்கலைக்கழகங்களின் பேராசிரியராகவும் இருந்து, தற்போது கனடாவின் ஒட்டாவா நகரத்தில் இருக்கும் (உலகின் ஒரே ஒரு) கதிரியக்கம் சம்பந்தமான சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின், இயக்குனராகவும் இருந்து வரும் பேராசிரியர் வே. இலகுப்பிள்ளை அவர்கள் ஒரு ஈழத்தமிழர் என்பதும், யாழ் குடாநாட்டிலுள்ள புத்தூரில் பிறந்து அங்குள்ள சோமாஸ்கந்தா கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியைக் கற்றார் என்பது மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அண்மையில் பாரிசுக்கு வந்திருந்த நேரத்தில், ஈழமுரசு அலுவலகத்துக்கு வந்து, எமக்கு வழங்கிய செவ்வியை, 'மாதம் ஒரு மனிதர்' என்று நாம் புதிதாக ஆரம்பித்திருக்கும் பகுதியில் முதலாவது மனிதராக அவரைக் கௌரவப்படுத்தி வெளியிடுகின்றோம்.

**கேள்வி:** அணு என்றால் என்ன? அணு சக்தி எவ்வாறு பெறப்படுகின்றது? அது பற்றி எங்களது வாசகர்களுக்கு கொஞ்சம் சொல்லுங்களேன்!

**பதில்:** ஒரு பொருளுடைய அல்லது மூலகத்தினுடைய ஆகக் குறைந்த மூலக்கூறு, அல்லது துணிக்கை தான் அணு. அந்த அணுவை ஏதாவதொரு சக்தியை பாவித்து நாங்கள் உடைப்பதால் அல்லது பிரிப்பதால், சக்தி வெளிவருகிறது. உதாரணமாக யூரேனியம் என்கிற ஒரு அணுவை எடுத்து உடைத்தால் அது உடைந்து போகும் போது சக்தி வெளியாகிறது.

இருக்கிறது. இங்கே பாரிசில் உள்ள ஒரு மண்ணைத் தோண்டி எடுத்தீர்கள் என்றால் 1000த்தில் ஒரு பங்கு அல்லது 500ல் ஒரு பங்கு தான் அதில் யுரேனியம் இருக்கும்.

முதலில் மண்ணைக் கிண்டி எடுத்து அதை உடைத்து தூளாக்கி பின்பு இரசாயனத்தாக்கத்துக்கு உட்படுத்தி அதில் இருந்து யுரேனியத்தை இரசாயன முறையில் பிரித்தெடுத்து அதைத் தூளாக்கி பின்னர் அதைப் படிகமாக்கி பின்பு அதை (Clinder) உருளையாக்கி பின்பு அதை பிரித்துத்தான் அணுசக்தி எடுக்கப்படுகிறது.

மிக அதிக வேகமாகச் செல்லும். அப்போது பக்கத்தில் இருந்த யுரேனியத்தில் மோதி அது வெடித்தாலும் பிரயோசனமில்லை. ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டுமெனில், நியூட்ரோன்களின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அதுவும், விரைவாக ஒன்றையும் அது தாக்குவதற்கு முன் அதன் வேகத்தைக்

களில் எங்களுடைய உயிரணுக்கள் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறும் உண்டு. அணுசக்தியின் வலிமையை நாங்கள் அறிந்து, அதற்கேற்றபடி நாங்கள் பாவித்தால் நாங்கள் எங்களுக்குத் தேவையான நல்ல பலன்களைப் பெறலாம்.

என்னுடைய சொந்த அபிப்பிராயம், அணுசக்தியால் பல நாடுகளுக்கு பல விதத்திலும் ஆக்க முறையில் அணு சக்தியைப் பாவிக்கலாம். அணுக்குண்டு செய்து அதைப் பாவிக்கத் தேவையில்லை. ஆனால் குறுகிய அளவில் - அணு சக்தியை பாவித்து வருத்தங்களை கண்டுபிடிக்கலாம், வருத்தங்களை மாற்றலாம். உதாரணமாக கான்சர். அணுசக்தியை பாவித்து

# அணுவைக் கண்டு அஞ்சவேண்டாம் அதை ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தலாம்

அந்த சக்தி அநேகமாக வெப்ப சக்தியாகவே இருக்கிறது. இந்த வெப்பசக்தியை பல விதத்தில் பாவிக்கலாம். ஆட்களை எரிப்பதற்கும் பாவிக்கலாம். ஆனால் அதே நேரத்தில் தண்ணீரைச் சூடாக்கி நீராவியாக்கி அந்த நீராவி மூலம் இயந்திரத்தை இயக்கி, மின்சாரத்தை எடுக்கவும் பாவிக்கலாம். ஆகையால் அதிகப்படியான சக்தியை சுலபமான முறையில் அணுவைப் பிளந்து எடுக்க முடியும் என்றால் அது யுரேனியம், புளூட்டோனியம் என்ற இரண்டு உயரச் சமதானிகளைக் கொண்டுதான் அதைச்செய்ய முடியும்.

அணு ஆலைகளில் என்ன நடக்கிறது என்றால், யுரேனியம் என்ற பொருளை வைத்து அதை படிப்படியாக உடைத்து, அதில் இருந்து வருகின்ற வெப்பத்தைத் தண்ணீருக்குச் செலுத்தித் தண்ணீரைச் சூடாக்கி, நீராவியை எடுத்து அதன் மூலம் மின்சாரப் பிறப்பாக்கி இயந்திரங்களை இயக்கி மின்சாரம் பெறப்படுகிறது.

**கேள்வி:** யுரேனியம் எங்கே இருக்கிறது?

**பதில்:** யுரேனியம் எல்லா இடத்திலும் இருக்கிறது. மண்ணில் இருக்கிறது, தண்ணீரில் இருக்கிறது, கட்டடங்களாக இருக்கிறது. உலகத்தில் யுரேனியம் இல்லாத இடமே இல்லை. சில இடங்களில் அது கூடிய அளவில் இருக்கிறது. இந்த இடங்களைச் சொல்கின்றது, யுரேனியச் சுரங்கங்கள் என்று! யுரேனியம் நிலத்துக்குக் கீழே இருந்தால் சுரங்கம், நிலத்துக்கு மேலே இருந்தால் - படிப்படியாக அதை வழித்து எடுக்கலாம். கூடியளவு விகிதாசார அடிப்படையிலான யுரேனியம் கனடாவில் இருக்கிறது.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட பொருளை எடுத்தால் சில இடங்களில் அதில் 40 வீதம் யுரேனியம்

**கேள்வி:** அணுசக்தியை பிரிப்பதற்கு 'ஹெவி வோட்டர்' (Heavy Water) பாவிப்பதாக சொல்கிறார்களே, அதைப்பற்றி விளக்குவீர்களா?

**பதில்:** சாதாரணமாக நாங்கள் குடிக்கும் தண்ணீரில் ஒவ்வொரு துணிக்கைகளிலும் $H_2O$ என்ற மூலக்கூறு இருக்கிறது.

6000 துணிக்கைகளை எடுத்தால் ஒரு துணிக்கை வித்தியாசமான துணிக்கையாக இருக்கும் $H_2O$ க்கு பதிலாக $V_2O$ இருக்கும் இதுவும் ஐதரசன்தான். ஒரு ஐதரசன் அணுக்கை ஒரு குறிப்பிட்ட நிறையென்றால் இது அதைவிட இரண்டு மடங்கு நிறையுடன் இருக்கும். சாதாரண தண்ணீரில் புரோட்டோன் மட்டும் இருக்கும். ஆனால் இந்த 'ஹெவி வோட்டரில்' ஒரு புரோட்டோனுக்குப் பக்கத்தில் நியூட்ரோனும் இருக்கும். இதனாலேயே இது 'ஹெவி வோட்டர்' என அழைக்கப்படுகின்றது. சாதாரண தண்ணீரை இரசாயன சுத்திகரிப்புக்கு உள்ளாக்குவதன் மூலம் இது பெறப்படுகிறது.

ஹெவி வோட்டரில் உள்ள ஒரு நன்மை என்னவென்றால், அதில் ஏற்கனவே நியூட்ரோன் இருக்கிறபடியால் நியூட்ரோனை உறிஞ்சாது. சாதாரண தண்ணீர், நியூட்ரோனை உறிஞ்சும் தன்மை கொண்டது. நியூட்ரோன் வந்து யுரேனியத்துடன் வேகமாக மோதினால் அது உடையாது. அதனால் நியூட்ரோனுடைய வேகத்தை தடை செய்ய வேண்டும். நியூட்ரோன் வேகமாகப் போய் யுரேனியத்தை உடைத்தாலும் எங்களுக்கேற்ற சக்தி அதில் கிடைக்காது. அது மெதுவாகப் போய்த்தான் யுரேனியத்தை தட்டவேண்டும். அப்போது, யுரேனியம் அணு வெடித்து சிதறும்போது பல இலட்சக்கணக்கான நியூட்ரோன்கள்

குறைக்க வேண்டும். அப்படிக் குறைத்துக் கொண்டு போக அது இன்னொரு யுரேனியம் அணுவைச் சந்தித்தவுடனேயே அதை உடைக்கும் அதற்கு சுலபமான வழி 'ஹெவிவோட்டரை'ப் பயன்படுத்துவது. ஒரு பொருள் ஒரே அளவு நிறையுள்ள மூலமாக இருந்தால்தான் அந்த சக்தி உடனடியாக வேகம் குறைக்கப்படும். அதற்காகத்தான் அணு ஆலைகளில் ஹெவிவோட்டர் பயன்படுத்தப்படுகிறது.



**கேள்வி:** அணுசக்தியை ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு பாவிக்கலாம் என்று சொல்லுகின்றீர்களே. அது எந்த வகையில் என்று சொல்ல முடியுமா?

**பதில்:** அணுசக்தி மூலம் உலகளாவிய பயனை நாங்கள் அனுபவிக்கலாம். உதாரணமாக அணுசக்தியை மருத்துவத் துறையில் பாவிக்கலாம். அதை பல பல விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தலாம். அதனுடைய பிரயோகம் கணக்கில் அடங்காது. உடலில் உள்ள எந்தவொரு நோயையும் அணு சமதானிகளைப் பாவித்துக் கண்டுபிடிக்கலாம். அது மாத்திரமன்றி, சில நோய்களை மாற்றவும் செய்யலாம். அந்த வல்லமை அணுசக்திக்கு இருக்கின்றது.

அணுசக்தியால் சில சமயங்

நன்மைகள் இருக்கின்றன. மக்கள் தானாகவே அறிய வேண்டும். உணவு நஞ்சாவதால் இலட்சக்கணக்கான மக்கள் உலகத்தில் இறக்கின்றார்கள். அணுசக்தியை பாவித்து அந்த நஞ்சாதலைத் தடுக்கலாம்.

**கேள்வி:** உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்...?

**பதில்:** 1966 செப்டம்பரில் பொதுநல நாடுகளிற் புலமைப் பரிசு பெற்று நான் கனடாவுக்குச் சென்றேன். புலமைப் பரிசுக்கு, முதல் வகுப்பில் முதல் மாணவனாக சித்தியடைந்திருக்க வேண்டும். அந்த வருடம் நான்தான் முதல் மாணவன். அதனால் எனக்கு சுலபமாக கனடாவுக்கு உயர் கல்விக்கு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

பயன்தரக்கூடிய புதுவிதமான பயிர்களை உற்பத்தி செய்யலாம். தகவல் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளலாம். அந்தத் துறைகளில் அணு சக்தியின் தேவை பற்றி நான் பல புத்தகங்களில் வாசித்து அறிந்த பிறகு பேராசிரியர் மயில்வாகனம் அவர்களுடன் இது பற்றி ஆலோசித்தபோது அவர் சொன்னார், 'இன்னும் 20 அல்லது 30 வருடங்களுக்குப் பிறகு இது ஒரு உபயோகமான துறையாக வரும். இந்தத் துறையில் நீ ஆராய்ச்சி செய், இந்தத் துறையில் இலங்கையிலே அணு ஆட்கள் இல்லை' என்று சொன்னார்.

கனடாவில் ரொரன்டோ பல்கலைக் கழகத்தில் முதலில் என்னுடைய MSC பட்டத்தை முடித்துவிட்டு பின்னர் படிப்புக்

**நியூட்ரோன் வேகமாகப் போய் யுரேனியத்தை உடைத்தாலும் எங்களுக்கேற்ற சக்தி அதில் கிடைக்காது. அது மெதுவாகப் போய்த்தான் யுரேனியத்தை தட்டவேண்டும். அப்போது, யுரேனியம் அணு வெடித்து சிதறும்போது பல இலட்சக்கணக்கான நியூட்ரோன்கள் மிக அதிக வேகமாகச் செல்லும்.**

அப்போது பேராசிரியர் மயில்வாகனம் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றும்- அணு சக்தித் துறையில் அணுசக்தியினுடைய பிரயோகங்கள் தொடர்பாக நான் என்னுடைய உயர் கல்வியைத் தொடர்ந்தேன்.

**கேள்வி:** ஏன் அணு சக்தி துறையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

**பதில்:** அணுசக்தி ஒரு புதிதான துறை. வசதி குறைந்த நாடுகளுக்கு, வளர்ச்சி குறைந்த

காக ஆய்வில் ஈடுபட்டேன். PHD பட்டத்தை முடித்தேன். 18 மாதத்தில் கலாநிதி பட்டம் பெற்றேன். கொஞ்சநாள் அங்கு இருந்துவிட்டு பின்பு மேற்குலக வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. வெகு சுலபமாக இருக்கிறதே! இப்படியான வாழ்க்கை எனக்குத் தேவையில்லை என்று நினைத்தேன். 1977-ல் கனடாவில் எனக்கு நல்ல வேலை கிடைத்தது. அதை நான் ஏற்க மறுத்து

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Tamileelam Archive

எமது புதிய வெளியீடு:

G.T.V

தமிழ் திரை உலகின் புதியதோர் நிறுவனம்
வீடியோ துறையில் நீண்ட அனுபவம்
கொண்டவர்களின் புதிய அறிமுகம்

# குளோபல் தமிழ் விஷன்

# GLOBAL TAMIL VISION

வர்த்தகத் தொடர்புகட்கு:

**GLOBAL TAMIL VISION**
95, Avenue Jean Jaures, 93300 Aubervilliers.
Tel: 00-33-(0)1 42 09 02 57 Fax: 00-33-(0)1 42 09 06 38

## இசை மழை Vol - 2
## G.T.V.

1. காசு மேலே காசு வந்து - காதலா காதலா
2. காதல் கதை - பூச்சூடவா
3. பொன்னு வெருப்புச்ச - வேலை
4. தில்லாலே தில்லாலே - துள்ளித் திரிந்த காலம்
5. செல்போனில் சுந்தரி - இது தான் காதல்
6. லைலா லைலா - காதலா காதலா
7. கொம்பியூட்டர் - பூச்சூடவா
8. கன்னிப்பொண்ணு - வேலை
9. மண்ணில் என்ன - துள்ளித் திரிந்த காலம்
10. கண்ணாமணிக் கனவுகள் - இதுதான் காதல்
11. முதல் முதல் பார் - ஆஹா
12. மடோனா பாடலா - காதலா காதலா
13. நீயில்லை நிழல் - பூச்சூடவா
14. அர்ஜுனா அர்ஜுனா - வேலை
15. சலக்கு சலக்கு - உதவிக்கு வரலாமா
16. சேவல் கூவும் - துள்ளித் திரிந்த காலம்
17. என்னோட உலகம் - கிழக்கும் மேற்கும்
18. காடு வந்தது - காதலா காதலா
19. வாலிப வயசும் - பூச்சூடவா
20. ஒரு காலத்தில் - வேலை
21. கௌசல்யா - துள்ளித் திரிந்த காலம்
22. சரவணபவனை - காதலா காதலா
23. என்னோட ஏதோ - உதவிக்கு வரலாமா
24. ஸ்வீட் டிரீம்ஸ் - இது தான் காதல்
25. பூங்காற்றே - கிழக்கும் மேற்கும்
26. வாழ்க்கை என்ன - துள்ளித் திரிந்த காலம்
27. திருச்சூருகதேர் - பெரிய மனுஷன்
28. சிறு சிறு காற்றில் - பூச்சூடவா
29. நீ தான் - நீ தான் - உதவிக்கு வரலாமா
30. அன்னை முகம் - இது தான் காதல்
31. கோழி வந்த - ஆஹா
32. மன்மதன் சடுகுடு - இது தான் காதல்
33. துளித் துளி மழைத் - பெரிய மனுஷன்
34. காசு மேலே காசு - காதலா காதலா



# வெளிவந்துவிட்டன

# ரமி யின்



# சுக் மாநிலத்தின் தமிழ் அமைப்புகள் இணைந்து நடாத்திய கலைமாலை

சென்ற 28.06.98 அன்று சுக் மாநிலத்திலுள்ள சிவாதயா அச்சகம், நிகே வீடியோ, குமார் வீடியோ, பூப்பந்து விளையாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகள் இணைந்து கலைமாலை விழா ஒன்றை நடாத்தினார்கள். இவ்விழா மூலம் பெறப்பட்ட நிதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து தமிழ்த்தாய்க்கு வாழ்த்துத் தெரிவித்து நிப வணக்க நடனமொன்றை மிக அழகாக செய்தார்கள் சுக் கலைக்கோவில் நாட்டியாலய மாணவிகள். அத்தோடு சுக் பாரதி கல்விநிலைய மாணவ மாணவியரும் எழுச்சி நடனமொன்றுக்கு அபிநயமிட்டு பாராட்டையும் பெற்றுக்கொண்டனர். சுவிசுக்கு வந்திருக்கும் இந்திய கலைஞர்களான மிருதங்க வித்துவான் நெய்வேலி வெங்கடேசன், வயலின் புகழ் ராஜாகிருஷ்ணன் சிறுவயதிலேயே மண்டலின் இசையில் கொடிகட்டிப்பறக்கும் வி.கே. ராஜுவுடன் சுவிஸ் கலைஞரான சஞ்சேயும் இணைந்து நடத்திய இசைக்கச்சேரி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது. சுக் தமிழ் வித்தியாலய மாணவ மாணவியர்கள் பங்கெடுத்துக் கொண்ட 'தம்புங்கள் தமிழீழம்' என்னும் கருவைத் தாங்கிய நாளையும் நிகழ்வும் இடம் பெற்றது. நடனப்பிரிவில் ஒன்றான கீர்த்தனை நடனமும் மேடையேறியது.

தாயகம் சென்று வந்த ஆறுமுகம் பாலசிங்கம் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்புக்களையும் தெட்டத்தெளிவான 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் எடுத்துரைத்தார். பாட்டுக்குப்பாட்டு, அறிவிப்பாளருடன் ஒரு நிமிட உரையாடல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெற்று வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. இவ்விரு நிகழ்விலும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுக்குரிய பரிசில்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். சொலத்தூன் நவுன் ரீச்சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பரத நாட்டிய நடனப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் பங்குபற்றியவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் இவ்விழாவில் வழங்கப்பட்டது. எம்மினத்தின் துயர் துடைப்புக்காக இவ்விழாவை ஏற்பாடு செய்த அமைப்புக்களைப் போன்று மற்றமற்ற மாநிலங்களிலும் உள்ள அமைப்புகள் முன்வருவதற்கு வழிகாட்டிய இவ்விழா இனிதே நிறைவு பெற்றது.

சங்கானையூர் குமார்
சுக் 2

# புகலிட நிகழ்வுகள்

## உலகத் தமிழ் சிறுகதைத் தொகுப்பு

தற்போது அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான மாத்தளை சோமு அவர்கள் உலகத் தமிழ் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடவுள்ளார்.

இந்த முயற்சி தொடர்பாக தற்போது தமிழ் நாட்டில் இலக்கியச் சுற்றுப்பயணம் ஒன்றினை மேற்கொள்ளும் அவர் எதிர் வரும் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் ஐரோப்பாவிற்கும் வருகை தரவுள்ளார்.

தனது இந்த இலக்கியப்பயணம் உலகத் தமிழ் நூலகம் நடாத்திவரும் சிட்னி தமிழ் அறிவகம் மற்றும் சிட்னி பல்கலைக் கழகத்தின் தமிழ் சங்க இதழான கலப்பை என்பதோடு மேற்குலகிற்கு புலம் பெயர்ந்த இலக்கிய நண்பர்களுக்கு உறவை ஏற்படுத்தல், உலகத் தமிழ் சிறுகதை வெளியீட்டு விழாவோடு நடைபெறவிருக்கும் எழுத்தாளர் இலக்கிய நண்பர்களின் ஒன்றுகூடல் பற்றிய விபரம் ஆலோசனைகள் பெறல் சம்பந்தமாக இருக்கும் என்று தெரிவித்துள்ள திருமாத்தளை சோமு தற்போது தன்னோடு தொடர்பு கொள்ள விரும்புபவர்கள்,

M.Somusundram
p15, 5th Main Road
Rumalingamagar
Trichy-620003
S.India.

என்ற தமிழ் நாட்டு முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## எசனில் நடந்த ஈழமுரசு நாடகப் போட்டி

ஜேர்மனியில் எசன் நகரில் ஈழமுரசு வழங்கிய நாடகப் போட்டியில் நான்கு நாடகங்கள் கலந்து கொண்டன. இதில் சிறந்த நாடகம்: சுமைகள், இரண்டாம் இடத்தைப் பெற்ற நாடகம்: சலனம், மூன்றாம் இடத்தைப் பெற்ற நாடகம்: விடிவை நோக்கி, சிறந்த இயக்கம்: நாச்சிமார் கோயிலடி ராஜன் (சுமைகள்), சிறந்த நடிகர்: சிவபாலு ராகம் (சலனம்), சிறந்த நடிகை: பேபிடிக்கா ஞானசெல்வம் (சுமைகள்), சிறந்த குழந்தை நட்சத்திரம்: தீபிகா ஜெயராஜா (சுமைகள்), சிறந்த நகைச்சுவை நடிகர்: நடா (விடிவை நோக்கி) எனத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நாடகப் போட்டிக்கு நடுவர்களாக பிரபல எழுத்தாளர் பாலமனோகரன், இலங்கை வானொலி முன்னாள் நாடகத் தயாரிப்பாளர் ஜெயச்சந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் பணியக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் செல்லத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.

டென்மார்க்கில் 5வது ஆண்டாக கரும்புலிகள் ஞாபகார்த்த

ஐரோப்பா கிண்ணம் – 1998

7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

காலம்: 29.08.1998

இடம்: Ikast Kfumbold Bane
Thriges vej. Ikast
Denmark

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளை, கரும்புலிகள் ஞாபகார்த்தமாக நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி Ikast நகரில் எதிர்வரும் 29.08.98 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15.08.98 இற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை

M. Rangarajan
Sonderparken -12-1-TV
7430 Ikast
Denmark

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நுழைவுக் கட்டணம்:
[illegible]

Bank: Den Danske Bank
Reg: 3406 Konto: 3406815749


மேலதிக தொடர்புகட்கு:
ரங்கன்: 4597154801 / ராஜன்: 4597155290 (Tel/Fax)

**7 பேர் கொண்ட ஐரோப்பாக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி விதிகள்**

1. Off Side விதி கடைப்பிடிக்கப்படமாட்டாது.
2. மைதானத்தின் அளவு - டென்மார்க்கில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறும் மைதானத்தின் அளவு.
3. மஞ்சள் அட்டை காட்டப்பட்டால் 5 நிமிடங்கள் வெளியேற்றப்படுவர். (ஏனெனில்: மைதானம் சிறியது. ஆகையால்)
4. Group-இல் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையிலும் கால் இறுதி, அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் நொக் அவுட் முறையிலும் நடைபெறும்.
5. நேர அளவு -Group இல் கழகங்களுக்கிடையிலான போட்டிகளும், கால் இறுதி, மூன்றாம் இடத்திற்கான போட்டியும் 15+5+15 நிமிடங்களும், அரை இறுதி, இறுதிப்போட்டிகள் 20 + 5 +15 நிமிடங்களும், அரை இறுதி, இறுதிப் போட்டிகள் 20+5+20 நிமிடங்களும் நடைபெறும், கால் இறுதி, அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தால் 5+5 நிமிடங்கள் மேலதிகமாக விளையாட அனுமதிக்கப்படுவர்
6. புள்ளிகள் - வெற்றிபெறும் கழகத்திற்கு 3 புள்ளிகளும், வெற்றி தோல்வியின்றி போட்டி முடிவடைந்தால் தலா 1 புள்ளியும் வழங்கப்படும்.
7. இச் சுற்றுப்போட்டியானது TBU (Tamilsk Boldspil Union) வின் சட்ட விதிகளுக்கமைய நடைபெறும்.

பிராங்போர்ட் மாநகரில்

ஆதவா ஆசியா சென்ரர்



தங்க மாளிகை

- ஜவுளியகம், நூலகம்
- விமானப் பயணச் சீட்டுக்கள்
- வீடியோ ஓடியோ விஷன்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- தொலைபேசி அட்டைகள்
- அன்பளிப்பு -அலங்காரப் பொருட்கள்

உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் பூர்த்தி செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

**Adavaa Asiya Centar**

Taunusstr. 19, 60329 Frankfurt/Main
Tel: 069/250361 + 250362 / Fax: 069/234045
Travels - 069/92919139

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்

# தமிழர் புனர்வாழ்வு கழகம் பிரான்சில் எழுச்சி விழா

பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துயர் துடைப்பு நாட்கள் கரும்புலிகள் நாளான 05.07.98-ல் ஆரம்பித்து 19.07.98 நாட்கள் வரை நடைபெறுகின்றன. இதன் ஆரம்ப நாள் கரும்புலிகள் தினத்தன்று பாரிசில் எழுச்சிவிழாவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைதி வணக்கத்துடன ஆரம்பிக்கப்பட்ட இவ் விழாவை ஆரம்பித்து வைத்து பேசிய தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரெஞ் சுக்கிளையின் உறுப்பினர் திரு. பாலசுந்தரம் அவர்கள் 'மக்களையும் இத் துயர்துடைப்பு நாட்களின் திட்டங்களில் இணைந்து செயற்படுத்தவே' இவ் எழுச்சிவிழா நடாத்தப்படுவதாக கூறினார். தொடர்ந்து பேசிய அவர், தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் திட்டமிடப்பட்டுள்ள 800-க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு போதிய நிதி வசதி இல்லாமையினாலே அதனை நிறைவுபட செயற்படுத்த முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய த.பு.க உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள், இங்குள்ள மக்கள் வழங்குகின்ற நிதி அம் மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கின்றது. அதற்காக பெருமைப்படலாம்தான், ஆனாலும் இங்குள்ளவர்கள் பங்களிப்போடு மட்டும் நின்றுவிடாது த.பு.கழகத்துடன் இணைந்து செயற்பட்டு த.பு.கழகம் கொண்டுள்ள திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து பேசிய திருமதி. சுந்தரலிங்கம் அவர்கள் பு.வா.க செயற்பாடுகளினால்தான் தமிழீழத்தில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. அதனை மேலும் வலுப்படுத்தும் சக்தி இங்குள்ள மக்களின் கைகளில்தான் உள்ளது எனவும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து சிறப்பு பேச்சாளரான மலேசிய டாக்டர் திரு. அருள்மொழி பாரி அவர்கள் உரையாற்றும் போது இங்கு வசதியுள்ள நாம் வந்து சேர்ந்துவிட்டோம். வசதி யற்றவர்கள்தான் அங்குள்ளார்கள் அவர்களுக்கு உறவுகளாகிய நாங்கள்தான் உதவ முன்வரவேண்டும் என்று கூறியதோடு, சாவின் விளிம்பில் நிற்கும் மிகவும் வயதானவர் கூட மரணத்தைக் கண்டு பயப்படும்போது, மக்களின் சுதந்திரத்துக்காகவும், விடுதலைக்காகவும் தமது உயிரை ஈகம் செய்யும் கரும்புலிகளின் புனித இலக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இத் துயர் துடைப்பு நாட்களில் அனைத்து தமிழ் மக்களும் கலந்து தமது பங்களிப்பை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து மற்றொரு சிறப்புப் பேச்சாளரான தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவ்வை நடராஜன் அவர்கள், இக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை என்பார்கள் ஆனால் தமிழீழத்தில் உள்ள மக்களுக்கு த.பு.வா. கழகம்தான் துணை என தெரிவித்தார். பு.வா.க. ஒரு அரசாங்கத்தைப் போல் ஏராளமான திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முனைகின்றார்கள் என்றால் அது உங்களது பங்களிப்பினால்தான் முடியும் எனவும் தெரிவித்து பல கருத்துக்களை எடுத்துக்கூறினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எழுச்சி விழாவில் கலந்து கொண்ட மக்கள் பலர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வளர்ச்சி பற்றியும், மக்களுடைய பங்களிப்புகள் பற்றியும் தமது கருத்துக்களை வழங்கினர். அவர்களில் ஒரு சகோதரி 'தாய் மண்ணிலே தமிழருவு வாழ்கின்றதே மரத்துப்போயிட்ட உணர்வின்றி நோயுடன் வாழுமந்த.' என்று இயற்றி பாடிய பாடல் வந்திருந்தவர்களின் மனதை வருடிச்சென்றது.

நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இவ் எழுச்சி விழாவில் வந்திருந்தவர்கள் பலர் தமது பங்களிப்பினை மனமுவந்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# லுசேர்ன் நகரில் நடைபெற்ற இசைக்கச்சேரி

தாயகத்தில் அல்லலுறும் வம்மினத்தவரின் துயர் துடைப்புக்கு உதவும் முகமாக 21.06.98 லுசேர்ன் நகரில் இசைக்கச்சேரி ஒன்று நடைபெற்றது.

திரு திருமதி. சரவணமுத்து வசந்தன் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க, ஈழமலர்வுக்காக தம் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்குமான அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு விழா ஆரம்பமானது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அளப்பரிய பணிகளை பாடல் வடிவில் மக்களுக்கு எடுத்து வைத்தனர் லுசேர்ன் மாணவ மாணவிகள். அத்தோடு இவ் இசைக்கச்சேரியை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மாணவ மாணவியருக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பேச்சுக்களும் மேடையில் ஒலிப்பரப்புக் காணமுடிந்தது. கர்நாடக சங்கீதம் நிரம்பி முழங்கிய மேடையில் வாத்தியங்களில் இருந்து பல வகையான இசைகளை வெளிக் கொண்டுவந்து மக்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றனர் இந்திய கலைஞர்கள். இந்த இந்திய கலைஞர்களில் மிருதங்கத்தைக் கையாண்டு பல சாதனைகள் படைத்த தெல்லி வெங்கடேசன், வயலினின் புகழ்பெற்ற ராதாகிருஷ்ணன், மண்டலின் இசையெடுத்து பாராட்டுப் பெற்ற வி.பி. ராஜு இவர்கள் அனைவரும் அகில இந்தியாவின் புகழ் படைத்த கலைஞர்கள். இவர்களுடன் சுவிஸ்நாட்டு கலைஞரான சஞ்சேயும் இணைந்து மிருதங்கம் வாசித்தார். இந்த சுவிஸ் கலைஞன் கர்நாடக இசையை 7 வருடங்களாக வெங்கடேசனிடம் முறைப்படி பயின்றவர். தனது நாட்டில் தன் குருவானவருடன் இசைக்கச்சேரியில் பங்கெடுத்தார். தொடர்ந்த நிகழ்விலே அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த சங்கீத பூஷணம் இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரி ஆரம்பமானது. செந்தமிழ் தாயிற்கு வாழ்த்துக் கூறி பக்திப்பாடல்களும் பாடப்பட்டன. 'என்னினமே என் சனமே' என்ற பாடலின் வரி ஆரம்பமானதும் மக்களின் கரகோஷம் வானை எட்டி நின்றது. சங்கீத கானமழையில் குளித்த மக்களின் மனங்களைக் கொள்ளைகொண்ட இந்தக் கச்சேரிக்கு இந்திய கலைஞர்களும் உடனிருந்து இசையூட்டியிருந்தார்கள். இதனைத் தொடர்ந்து கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளரின் 'புனர்வாழ்வுக் கழகப் பணிகளும் மக்கள் பங்களிப்பும்' என்ற தொனிப்பொருளில் சிற்றுரையும் இடம் பெற்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சுவிஸ் ஒருங்கிணைப்பாளர் வழங்க இசைக்கச்சேரி உள்ளிட்ட இவ் விழா இனிதே நிறைவடைந்தது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளும் பல்வேறு வகையான மறுவாழ்வுத் திட்டங்கள் அடங்கிய வீடியோ ஒளியிழைநாடா எமது மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

— சங்கைகளூர் குமார்

# இந்து ஒருமைப்பாட்டு மாநாடு ஏற்பாட்டாளருக்கு பாராட்டு

கடந்த மாதம் 27, 28-ம் திகதிகளில் பாரிசில் நடைபெற்ற சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டின் பிரதம ஒழுங்கமைப்பாளராக இருந்து அதை சிறப்புற நடத்திக்கொடுத்த திரு. சிவசண்முகம் அவர்களை பாராட்டும் முகமாக கடந்த 05.07.98 அன்று பாரிஸ் தமிழ் சோலை மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் ஔவை நடராஜன், அருள்மொழி பாரி திரு. ஞானப்பிள்ளை உட்பட பலர் திரு. சிவசண்முகத்தின் பணியை பாராட்டிப் பேசியதோடு அவருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.



## உலகக்கிண்ண உதைபந்தாட்ட நூல் தொகுப்பு



உலகக்கிண்ண கால்பந்து போட்டிகள் பற்றிய விபரங்கள் மற்றும் கால்பந்து போட்டிகள் பற்றிய சுவையான அம்சங்கள் அடங்கிய தமிழ் நூல் திரட்டு ஒன்றினை பிரான்ஸ் ஸ்ரீபாரதி அச்சகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

1998ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளை முன்னிட்டு வெளியிடப்பட்ட இந்த நூலை இராஜேந்திரன் அவர்கள் நிழற்படங்களுடன் விரிவாக் தொகுத்தளித்துள்ளார். கால்பந்து விளையாட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இது ஒரு நல்ல நூல் என்பதில் சந்தேகமேயில்லை.


## டென்காக் மாநகரில் பாராளுமன்ற முன்றலில் '83 ஜூலைப் படுகொலை' நினைவாக மாபெரும் ஒன்றுகூடல்

**23.07.98 வியாழக்கிழமை**

**காலை 11 மணி முதல் 3 மணி வரை**

Tweede Kamer (பாராளுமன்றம்),
Den Haag (Tram தரிப்பிடமான 'Centrum' இற்கு முன்பு)

சிறிலங்கா ஆட்சியாளர்களின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளின் உச்சக்கட்டமான 83 ஜூலைப் படுகொலையை நினைவு கூர்ந்தும், தொடரும் தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அரசின் தாக்குதல்களை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தியும், தமிழ் மண்ணில் அகலக் கால் பதித்திருக்கும் சிங்கள அரச படைகளை வெளியேற்ற சிறிலங்கா அரசிற்கு நெதர்லாந்து அரசை அழுத்தம் கொடுக்கக் கோரியும், தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக்கோரியும் எம் மண்ணில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழும் நிலைமை ஏற்படும் வரை நெதர்லாந்தில் அரசியல் அடைக்கலம் கோரிய தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புதலை நிறுத்தக் கோரியும் ஒருமித்துக் குரல் கொடுக்க அலைகடலெனத் திரண்டு வாரீர்!!!

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு — நெதர்லாந்து**

மேலதிக தொடர்புகட்கு - பணியகம் - 070 3461963

போக்குவரத்து தொடர்புக்கு

பரம் Leiden - 071 5323031
குமார் Schiedam - 010 273 1582
சிவன் Zeist 030 6953436
ஜெயா Denbosch - 041 8562362
ஜெயகரன் Schagen - 0224 578527
குமார் Den helder - 0223 637216
மோகன் Alkmaar - 072 5644442
விக்கம் Breda - 076 5425804
நடேசன் Breda - 0654357359
கேமால் Tiel - 0344610885
சற்குணம் Borcale - 0545271253
ரவி Zwolle - 0653633249 / 038 4235693
செல்வம் Stadskanaal - 0599 621634
தவராசா Roermond - 0475319159
செல்வா Sittard - 046 4592198
புலேந்திரன் Landgraaf - 045 5322641
கமல் Rozenburg - 0181219828

# சிட்னியிலிருந்து - வன்னிக்கு

அவுஸ்திரேலியாவில் தற்போது இருக்கும் திரு. ஸ்ரீபான்ஸி வேந்தன் அவர்கள், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.

அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார்.

இக் கட்டுரை தொடராக ஈழமுரசில் வெளிவரும்.

— ஆர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 28ம் திகதி அவுஸ்திரேலியாவில் இருந்து கொழும்பு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் கொழும்பில் கால் வைத்த மறுகணமே அங்கு எனக்குப் பணிக்கப்பட்ட கடமையைப் பின் போட்டுவிட்டு, என் பிறந்த மண்ணான வன்னிக்குப் போக வேண்டும்; அங்குள்ள நிலைமைகளை அறியவேண்டும்; என் உடன் பிறப்புக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற உணர்வே மேலோங்கியது. உறவினர்களும், நண்பர்களும் அங்கு போவதிலுள்ள ஆபத்தைக் கூறித் தடுத்தார்கள். பிறந்த மண்ணில் இருந்து தங்களை எது விதச் சக்தியாலும் பிரிக்க முடியாது என்று, வவுனியா தொட்டு கிளிநொச்சி வரை யாழ்ப்பாண பிரதான வீதியை உள்ளடக்கிய பகுதிகளை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டு மண்ணை நேசித்து, மண்ணை . நம்பி, மரத்தை நம்பி வாழ்ந்த, அந்த மக்கள், என் இனத்தவர்கள், ஆட்சியாளரின் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைக்குப் பலியாகி அகதிகளாக, நடைப்பிணங்களாக துணுக்காய், மல்லாவி, வவுனிக்குளம் நோக்கியும் சென்று, அகதிகளாக அல்லலுறும் அவல நிலையைப் பார்க்க வேண்டும் என்று மனம் துடித்தது.

29ம் திகதி பல்வேறு படிவங்களை நிரப்பி மணிக்கணக்காக காவல் நின்று கொழும்பிலுள்ள எனது உறவினர்களின் பகுதியிலுள்ள காவல் நிலையத்தில் நான் அங்கு நிற்பதற்கான பதிவு செய்துவிட்டு, மாலை வீடு போய் அன்றிரவை ஒருவாறு கழித்துக்கொண்டேன். மறுநாள் காலை ஒரு பாரிய பொறுப்பு என் உணர்வுகளுக்குத் தடை போட்டது. வழமையானதுதான். என்மேல் என் பிரயாணத்தின் போது எம்மவர் கமத்திய சிறிய, பெரிய பொதிகளைக் கொழும்பில் உள்ளவர்களின் வீடுகளுக்குச் சென்று வழங்க வேண்டாமே! 30ம் திகதி இதில் ஓடி மறைந்துவிட்டது. என் பொன்னான நேரம், பணம்!! எம்மவரை நினைத்து சற்று வேதனைப் பட்டுக்கொண்டேன். நிச்சயம் நம்மவர் இதுபோன்ற அநியாயங்களை திருத்தப் பழகிக் கொள்ள வேண்டும் என்று மனதுக்குள்ளே நினைக்கின்றேன். ஆனாலும்! கொழும்பு வழமைபோல் இருந்தது. அடிக்கடி போர் வருவதனால் பெரிதாக மாற்றம் தெரியவில்லை போலும். இராணுவ வீரர்கள், காவல்காரர்கள் துப்பாக்கியும் கையுமாய் அப்பாவிகளை காவல்காத்து நின்றனர். ஆனால் எதுவித சோதனைகளுக்கும் நான் ஆளாகவில்லை ஆச்சரியமாக இருந்தது. சில வாகனங்கள், தனிநபர்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. கலதாரி ஹோட்டலைப் பார்த்து கூட சிரிப்பு வந்தது எனக்கு. ஆனால் ஒன்றுமே பேசவில்லை. கடந்த இரண்டு நாட்களாக எதுவித தடங்கலும் இன்றி போனதுமாதிரி செய்து, அங்கும் இங்கும் 'பாஸ்களுடன்' திரிந்த எனக்கு ஒரு தடையும், சோதனையும் இருக்கவில்லையே! இது மேலும் எனக்கு வன்னிப் பயணத்திற்கு ஊக்கம் அளித்தது. அன்று இரவு தூங்கும் பொழுதே வன்னிக்குப் போவதாக முடிவுசெய்து விட்டேன். சற்று குழப்பமாக இருந்தது பின் விதியை போட்டபடி நித்திரையாகிவிட்டேன். துணிவு . சத்தம் கேட்கிறது. ஆனால் விதியின் வேகத்தை தாண்டி அவற்றால் என்னை அணுக முடியவில்லைப்போலும்.

மறுநாள் காலை எழுந்து கொழும்பு குளோரின் தண்ணீரில் குளித்துவிட்டு, காலை உணவாக, நல்ல தேங்காய் சம்பல், ஆப்பிட்டு, கருவாட்டுச் சொதி ஒரு பிடிபிடிக்க வேண்டும் போல் இருந்தது ஆனால்! பின்னர் கோட்டை புகையிரத நிலையம் சென்று, பயணச்சீட்டை அன்று இரவு மெயில் வண்டியில் போவதற்காகப் பெற்றுக்கொண்டு பின்னர் வீடு திரும்பிவிட்டேன்.

வீட்டில் அமைதியாக இருந்தபடி எனது நண்பர்களுக்கும் பெரிதாக உறவினர்கள் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை, எனது பல்கலைக் கழக சகாக்களுக்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு பல விடயங்கள் பற்றி பேசி நிலைமைகளை ஓரளவு அறிந்து கொண்டேன். மாலை நேரம், சில நண்பர்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

பலமணி நேரம் அவர்களுடன் கதைக்கும் வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தது. இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, இரு மிகச்சிறிய கைப்பை, அதனுள் ஒரு சாரம், ஒரு சேட்டு, ஒரு துவாய், என்பவற்றை வைத்துக்கொண்டேன். இரவு 9 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு ஒரு ஓட்டோறிக்சோவில் புகையிரத நிலையத்தை அடைந்தேன். 10 மணியளவில் புகையிரதம் தவத்தில் வந்து நின்றது. சிறிய வைப்பை எனது பிரயாணத்தை இலகுபடுத்த, புகைவண்டியில் ஏறி அமைதியாக ஒரு பக்கத்தில் அமர்ந்துகொண்டேன். தொடர்ச்சியான பிரயாண அலுப்பும், நேரமாற்றமும், காலநிலை மாற்றமும் உடல் உளைச்சலைத் தொடர்ந்து தந்தவண்ணம் இருந்தன. இருந்தும் இடையிடையே ஆழ்ந்த தூக்கமும் கொள்ளாமல் இல்லை. 1ம் திகதி காலை 5.30 மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்தை சென்று அடைய முடிந்தது. பிரயாணத்தில் எதுவித தடையும் இல்லையே! ஏன் என்னை போகாமல் தடுத்தார்கள் என்ற கேள்வியை எனக்குள்ளேயே கேட்டபடி புகையிரதத்தைவிட்டு கீழே இறங்கினேன். என் கேள்விகளுக்கான பதில்கள் தாராளமாக காத்திருப்பதாக உணர முடிந்தது.

இராணுவத்தின் பொலிஸ் தலையாட்டிகள், கப்பக்காரர்கள், துப்பறிபவர்கள் இன்னும் யார் யாரோ நிற்பதுபோல் அறிய முடிகிறது. ஒன்றுமே பேசாது, இறங்கிவந்து வரிசையில் ஆட்களோடு ஆட்களாக நானும் நிற்கின்றேன். தமிழ் தள்ளாடுகிறது என்பதை உணர முடிந்தது. அரைகுறை கொச்சைத் தமிழ், அதற்கேற்றவாறு எம்மவரும் அரைகுறை கொச்சைத் தமிழில் பதில்கள்! அவர்களை குறை கூறி என்ன பயன். யாரோ எப்போதோ விட்டுவிட்ட தவறுகள்! தப்புகள்!!

கண் இமை வெட்டாது ஒவ்வொரு நிகழ்வுகளையும் உன்னிப்பாக ஆவலோடு பார்க்கின்றேன். என்னை சோதனையிடும் நேரம் வந்தது. உடம்பு முழுவதையும் கையாலும் இயந்திரங்களாலும் சோதனை போட்டார்கள். நான் ஒன்றுமே பேசவில்லை. பையைக் காட்டும்படி கூறினார்கள். 'இவ்வளவுதானா சாமான்' என்று கேட்டார்கள். தலை அசைத்தேன். ஒரு பெண் இராணுவ அதிகாரி என்னைப் பார்த்து, 'வாய்பேச உனக்கு இல்லை?' என்றாள். அடங்கி நடப்பவராச்சே! மெல்ல.., என்றேன். மேலும் அடையாள அட்டைகளைக் காட்டச் சொன்னார்கள். காட்டினேன். பின்னர் அங்குள்ள புத்தகத்தில் கையொப்பமிடச் சொன்னார்கள். அதையும் செய்தேன். ஒரு சிவப்புத் துண்டு தந்தார்கள். அத்துண்டுடன் வவுனியாவில் ஒருநாள் மட்டுமே நிற்கலாம் என்றார்கள். மேலும் நிற்க விரும்பினால் கண்டி வீதியிலுள்ள பிரவுண் கம்பனியில் உள்ள இராணுவ அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும் என்றார்கள். மேலும் தலை ஆட்டிவிட்டு பெருமூச்சு விட்டவாறு வெளியே வந்தேன். எமது மண்ணில், எமது நாட்டில் நான் வருவதற்கும் நிற்பதற்கும் செல்வதற்கும் இத்தனை தடைகளா? கட்டுப்பாடுகளா? பிரித்தானிய சாம்ராச்சிய ஆட்சியில், ஆபிரிக்க அடிமைகளை சங்கிலியால் பிணைத்து, நிர்வாணமாக, மாதக்கணக்காக, வருடக் கணக்காக சித்திரவதை செய்து, கப்பலில் ஏற்றி மேலைத்தேசநாடுகளில் வேலை செய்வதற்கு கொடூரமான முறையில், மனிதாபிமானம் அற்ற முறையில் கொண்டுசென்றதைப் பற்றி படித்திருக்கிறேன். யூதர்கள் எவ்வாறு ஜேர்மனியர்களாலும், ஏனையவர்களாலும் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்று படித்திருக்கிறேன். எம்மவர்க்கு எம்நாட்டில் எப்படி எப்படி எல்லாமோ நடந்திருக்கிறது. நடந்துகொண்டிருக்கிறது. அறிந்தும் தெரிந்தும், அறியாதவன் போல உணர்வற்றவராக, பெரிதாக ஒன்றும் செய்யாமல், மௌனியாக இருந்திருக்கின்றேன். அப்பொழுது அதைப் பற்றி உணர முடியவில்லை. இப்போ அதை நினைத்து வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். மனிதன் எவ்வளவு சுயநலக்காரன், கேவலமானவன் என்று நாணிக் கோறுகின்றேன். அன்று அவர்களின் வேதனைகளையும், அவமரியாதையும் பற்றி உணர முடியவில்லை. இந்த சிறிய அவமதிப்புகளையும் அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் என்னால் தாங்க முடியவில்லையெனில் . அப்போது, அந்த ஆபிரிக்கர்களும், யூதர்களும், இப்போது எம்மவர்களும் எப்படி துடிப்பார்கள்? அப்போது நான் படித்தவை வெறும் பரீட்சைக்காக, பட்டத்திற்காக என்பதை நினைத்து வெட்கப்பட்டவாறு வரலாற்று நிகழ்வுகள், சம்பவங்கள் பற்றிய அறிவு, நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் அங்கு நடக்க இருப்பவைகளையும் தெளிவுறக் காட்டும்காலக் கண்ணாடிகள் என்று சிந்தித்தவாறு, கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் போல இதுவும் காலம் கடந்துவிட்ட ஞானமாச்சே! என்ற வேதனையோடு ஓட்டோறிக்சோ ஒன்றில் எனது நண்பர் ஒருவருடன் ஏறி வவுனியா பஸ்தரிப்பு நிலையத்தை நோக்கி புறப்பட்டேன்.

(தொடரும்)

> இந்த சிறிய அவமதிப்புகளையும் அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் என்னால் தாங்க முடியவில்லை எனில் அப்போது, அந்த ஆபிரிக்கர்களும், யூதர்களும், இப்போது எம்மவர்களும் எப்படி துடிப்பார்கள்?

> ஒன்றுமே பேசாது, இறங்கிவந்து வரிசையில் ஆட்களோடு ஆட்களாக நானும் நிற்கின்றேன். தமிழ் தள்ளாடுகிறது என்பதை உணர முடிந்தது. அரைகுறை கொச்சைத் தமிழ், அதற்கேற்றவாறு எம்மவரும் அரைகுறை கொச்சைத் தமிழில் பதில்கள்! அவர்களைகுறை கூறி என்ன பயன். யாரோ எப்போதோ விட்டுவிட்ட தவறுகள்! தப்புகள்!!

## நெல்லியும் உதிரும் கனிகளும்

— கி.பி.அரவிந்தன்

வேப்பமர நிழலில்
கொப்பெல்லாம்
காய்க்கொத்தாய்
சாய்ந்து நிற்குமே
பாரமதைத் தாங்காமல்
நெல்லி மரம்
நினைவுண்டா?

கனி உதிர்த்து நிற்குமந்த
சிறு நெல்லி மரத்தில்தான்
கயம் சுவைத்தோம்
சாட்சியமாய்
வாய் சுவைத்தோம்
காய்த்திருந்தது பார்
தேனடையில் தேனீக்கள்போல்
கலையாத சுற்றம்போல்
குலைகள்
அப்போது
உன் வயிற்றிலும் நம்கனி.

இரும்புச் சிறகசைத்து
சாவரக்கள்
வானேறி வருகையிலும்
சின்ன விரலைப் பற்றிப்
புறந்தள்ளி
அதனடியிலதானே
வெயில் காய்ந்திருக்க
வேப்பங்காற்றினில் நாம்
தோய்ந்திருந்தோம்
மனச் சிறகசைய அவிழ்ந்தன
நம் கனவுகள்


நெல்லி
இலைக் கிளைகளை
ஒன்றொன்றாய் நீ பொறுக்கி
மடக்கிதன்று மொக்கொடிக்கும்
மெல்லொலியிலும்
கேட்டது பார்
நம் சுற்றமெல்லாம்
உயிரோடிரும் ஓசை
அறியாய்!

அறிந்தோம்மா நாம்
வாழ்வோடிந்து
வாரோடிணைந்த
உறவொடிந்து
உறவின் வாற்றான
நுரைய அலைசுழிந்து
உதிர்ந்த கனிகளாய்
வேற்றார் வேற்றாணர்
அந்நியமாதும் கதை

கடலெல்லிதனில் கரைந்ததுவோ
ஒரு பத்தாண்டாகிலும்
நெல்லி உன்ற அவ்வயவின்
பழங்கனத்தைப்
சிதறி சுற்றிவிடும்
நம் வயிற்றுக் கனிகளுக்குத்
தெரியவரும் போதினிலே
உயிர் பின்னிக் கிடக்குமோ
கிழங்கதன்று. இசைக்கின்றது
கண் நிறைத்து விறகுக்கும்
நெல்லி

# உருளும் பந்தின் உலக சரித்திரம் வெற்றிக்களிப்பில் பிரான்ஸ்

*பிரான்ஸ் நாட்டின்*
*வரலாற்றில் புதிய சரித்திரம்*
*அதிசயம் மிக அதிசயம்*
*வரலாற்றில் இது அதிசயம்*
*பார்க்குமிடமெங்கும்*
*மூவர்ணக்கொடி*
*நோக்குமிடமெங்கும்*
*வெற்றிக்களிப்பின் பெருமிதம்*
*சுதந்திர தினத்தை ஒட்டிவந்த பெருவெற்றி*
*இந்த நூற்றாண்டின் இறுதி வெற்றி*



ஜூலை பதினான்கு குடியரசுதினம் ஜூலை பன்னிரண்டு உதைபந்தாட்டத்தில் உலக சாதனை படைத்த நாள். 'பேர்னாட் சார்னின்' கனவு நனவாகியநாள்

சரித்திரம் பல படைத்த பிரான்சின் மணிமகுடத்தில் இன்னுமொரு வைரக்கல்.

1983ம் ஆண்டு இந்த நாட்டின் உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவராக இருந்த 'பேர்னாட் சார்னின்' அயராத உழைப்பினால் பதினாறாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி நடாத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கடந்த ஜூன் 10ம் திகதி தொடக்கம் இம்மாதம் 12ம் திகதிவரையிலான முப்பத்திமூன்று நாட்களில் நடைபெற்ற 64 போட்டிகளுடன் இந்த நூற்றாண்டின் இறுதியும் கடைசியுமான உலகக்கிண்ண உதைபந்தாட்ட வெற்றியாளர்களாக பிரான்ஸ் அணியினர் தெரிவானார்கள்.

1930ம் ஆண்டு முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி நடைபெறுவதற்கு வித்திட்ட 'ஜூல்ஸ் ரிமேயின்' மண்ணின் மைந்தர்கள் இன்று பதினாறாவது உலகக்கிண்ண வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டார்கள்.

உலகக்கிண்ண வரலாற்றில் சரித்திரம் பல படைத்த பிரான்சின் மைந்தர்கள் வழிவந்தவர்கள் இன்று அந்தக் கிண்ணத்தையே தம் வசமாக்கிக்கொண்டனர்.

*கொட்டும் சூரொளி*
*கோடைகால வெய்யிலின் கதகதப்பு*
*மூவர்ணக்கொடியேந்திய கையினர்*
*முகத்தில் தம்நாட்டின் வர்ணத்தை பதித்த நங்கையர்*
*அகல விரிந்த கண்களுடன் ஆர்வலர்கள்*
*இத்தனையையும் படம் பிடித்தவண்ணம் புகைப்படக் கலைஞர்கள்*
*இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஒளிபரப்ப 170 நாடுகளின் தொலைக்காட்சியினர்*
*மங்கிய மாலைப்பொழுது மணி ஒன்பது...*

பதினாறாவது உலகக் கிண்ணத்திற்கான போட்டி ஆரம்பித்துவிட்டது.

மூன்றாவது நிமிடம் பிரான்ஸ் நாட்டின் ஆட்ட நாயகன் 'சிடானி'னால் பிரேசில் அணியின் பாதுகாப்பு வலயத்தினுள் அடிக்கப்பட்ட பந்தை தாக்குதல் வீரர் 'கிவாஸ்' (கோல்) எல்லையை நோக்கி அடிக்க முற்படுகையில் பிரேசில் அணியின் பாதுகாப்பு வீரர் 'பபலோ'வினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பதினொன்றாவது நிமிடம் 'ஜோர்கேவ்பீயினால்' மீண்டும் பாதுகாப்பு எல்லைக்குள் அடிக்கப்பட்ட பந்தை பிரேசில் அணியின் கோல் காப்பாளர் 'தபாரெல்' தவிர வேறு எவரும் இல்லாத நிலையில் 'கிவார்ஸ்' கோல் அடிக்கத்தவறியது மிகவும் வருத்தத்திற்குரியது. இறுதி ஆட்டத்தில் இத்தவறுகள் மன்னிக்கமுடியாதவையுமாகும்.

27வது நிமிடம் கோர்ணர் (கோனர்) சென்று பந்தை இடது புறமிருந்து 'மனுவல் பெற்றி'




அடிக்க பிரேசிலின் பாதுகாப்பு வலையத்தினுள் முற்றுகையிட்டிருந்த இரு நாட்டின் அணியினரையும் ஊடறுத்துச்சென்று தலையால் இடித்து முதலாவது கோலைப்போட்டதுடன் வெற்றிக்கிண்ணத்திற்கான அடிக்கல்லையும் நாட்டினார்.

வீறுகொண்ட பிரேசில் அணியினர் பல தடவை கோல் அடிப்பதற்கு முயற்சி செய்தும் பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு அரணை ஊடறுத்துச் செல்ல முடியாமையினால் சீற்றம் கொண்ட நிலையில் விளையாடினர்.

45 வது நிமிடம் மீண்டும் ஒரு 'கோர்ணர்' வாய்ப்பு பிரான்ஸ் அணியினருக்குக் கிடைத்தது. அதனை இடதுபுறமிருந்து இடைநிலை தாக்குதல் வீரர் 'ஜோர்கேவ்' அடிக்க மீண்டும் 'சிடான்' தலையால் இடித்து இரண்டாவது கோலைப் போட்டதுடன் வெற்றிக் களிப்பிற்கு தமது நாட்டினை இட்டுச் சென்றார்.

58 வது நிமிடம் பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வலையத்தினுள் 'ரொபேர்டோ கார்லோஸினால்' அடிக்கப்பட்ட பந்து கோல் காப்பாளர் 'பார்த்தேஸ்' சிற்கு 5 மீற்றர் தூரத்தில் விழுந்தது. அதனைத் தனது பலம் கொண்டவரைக்கும் கோல் எல்லையை நோக்கி உலக நட்சத்திரம் என அழைக்கப்படும் 'றொனால்டோ' உதைக்க அதனை மிகுந்த சிரமத்தின் மத்தியில் தன் வசப்படுத்திய 'பார்த்தேஸ்' சுருண்டு வீழ்ந்தார்.

இவ்வாறாக இரண்டாவது பாதி ஆட்டத்தில் முக்கால் பகுதி நேரத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் பிரேசில் அணியினர் வைத்திருந்தபோதும் கோல் எதுவும் போடமுடியவில்லை.

68வது நிமிடம் பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வீரர் 'மார்செல் டிசெலி' இரண்டாவது மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்கு உட்பட்டதால் மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் 10 வீரர்கள் கொண்ட பிரான்ஸ் அணி 11 வீரர்களை உள்ளடக்கிய பிரேசில் அணிக்கு எதிராக விளையாடவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. இதனைத் தமக்குச் சாதகமாக்க முற்பட்ட பிரேசில் அணியினரின் முயற்சி பலனளிக்கவில்லை.

90-வது நிமிடம் பிரான்ஸ் அணியின் தலைவர் 'டெசொம்' முன்னெடுத்துச்சென்ற பந்தை இடைநிலைப்பாதுகாப்பு வீரர் 'வியரா'விடம் தட்டிக்கொடுக்க இடது புறத்தே வந்துகொண்டிருந்த 'மனுவல் பிற்றி'யினை நோக்கி 'வியரா' நகர்த்தினார். அதனைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து 'மனுவல் பிற்றி' கோல் எல்லைக் கோட்டை நோக்கி இலாவகமாகத் தட்டிவிட்டார். அது பிரான்ஸ் அணியினருக்கு மூன்றாவது கோலாக மாறியது.

இவ்வாறு இந்தக் கோல் 1904ம் ஆண்டு தொடக்கம் இவ் இறுதிப்போட்டிவரையான 569 ஆட்டங்களில் பெற்ற ஆயிரமாவது கோலாகும்.

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சரித்திரத்தில் மூன்று கோல்கள் வித்தியாசத்தில் இதற்கு முன்னர் இரு தடவைகள் பிரேசில் அணியினர் வெற்றி பெற்றுள்ளனர். 1958ம் ஆண்டு சுவீடனுக்கெதிராக 5:2 எனவும் 1970ம் ஆண்டு இத்தாலிக்கு எதிராக 4:1 என்ற கோல் நிலையிலும் வெற்றிபெற்றுள்ளனர். அதே சமயம் இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்தவர்கள் வரிசையில் எழுவர் அடங்குகிறார்கள்.

விபரம் பின்வருமாறு:

1938ம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த கொலோமி, பியோலா

1954ம் ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த ரான்

1958ம் ஆண்டு பிரேசிலைச் சேர்ந்த பெலே, வாவா

1978ம் ஆண்டு ஆர்ஜன்டீனாவைச் சேர்ந்த கெம்பஸ்

1998ம் ஆண்டு பிரான்சைச் சேர்ந்த சிடான்

பிரான்சின் வெற்றிக் களிப்பில் ஆயிரக்கணக்கில் தமிழீழத்தைச் சேர்ந்த நம்மவர்கள் கலந்துகொண்டது மிகுந்த மகிழ்ச்சியை பிரான்ஸ் நாட்டவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

தமக்குத் தஞ்சம் கொடுத்த நாடு என்கின்ற முறையிலும் உதைபந்தாட்டத்தின் மீது அவர்கள் கொண்ட ஈடுபாடுமே இதற்குக் காரணம் எனலாம்.

இவ் வெற்றி அணியின் சிற்பியான 'எய்மே ஜக்கேயை' இந்த நாடு என்றும் மறவாது என்பதுடன், இவர்தான் சரித்திர நாயகனாக என்றும் திகழ்வார் என்பது திண்ணமே.

நான்கு ஆண்டுகளுக்கு மேலாக தனது அறிவு அனுபவம் இரண்டையும் ஒருங்கிணைத்து கட்டியெழுப்பியதே இவ்வணி.

[illegible] தன் கடமையை செவ்வனே செய்து முடித்த இப்பயிற்றுநரை எப்படி பாராட்டினாலும் தகும்.

'எய்மே ஜக்கேய்'க்கும் அவர் தம் வீரர்களுக்கும் தமிழீழ மக்களின் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

— [illegible]


# உலக சாதனையுடன் சுதந்திரக்கிண்ணத்தை கைப்பற்றிய இந்திய அணி

சிறீலங்கா தனது 50வது சுதந்திரதின கொண்டாட்டங்களை மிகவும் பயத்துடனும் பீதியுடனும் வருட ஆரம்பத்தில் கொண்டாடியதை ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். பின்பு இப்போது 50வது ஆண்டை நினைவுபடுத்தி ஒருநாள் கிரிக்கட் போட்டிகளை ஒழுங்குசெய்திருந்தது. இப்போட்டிகளைக் கூட சிறப்பாக நடத்த முடியாத அளவிற்கு இயற்கை சீற்றம் கொண்டிருந்தது. பல



போட்டிகள் மழையினால் பாதிக்கப்பட்ட நிலையில், நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளில் இந்தியா, சிறீலங்கா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகள் கலந்துகொண்டன. இந்தியாவும், சிறீலங்காவும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

07.07.98 கொழும்பு மாநகரில் இறுதியாட்டம் ஆரம்பமானது. இந்திய அணி முதலில் துடுப்பாட களம் புகுந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகச் சென்றவர்கள் இந்திய இளம் புயல் நட்சத்திரமான வலதுகை ஆட்டக்காரர் டெண்டுல்காரும், வங்காளத்துச் சிங்கம் இடதுகை மட்டையாளர் கங்குலியும், வைது, இடதுகை ஆட்டக்காரர்கள் களத்தில் இருப்பதே தடுப்பாளர்களுக்கு பொதுவாக சங்கடம். அதிலும் விளாசி அடித்து ஓட்டங்களைக் குவித்தால் எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். இருவருமே மிகவும் நிதானமாகவும், திறமையாகவும் ஆட்டத்தை நகர்த்திக் கொண்டிருக்க ஓட்டங்கள் விரைவாக ஏறிக்கொண்டிருந்தது. சிறீலங்கா வீரர்களின் சகல விதமான திட்டங்களுக்கும் தண்ணிகாட்டிவிட்டு முதலாவது விக்கட் இணைப்பாட்டத்திற்கு உலக சாதனையும் படைத்துவிட்டனர். 252 ஓட்டங்களை முதல் விக்கட்டுக்காக எடுத்து, 07.06.86 ஜெய்ப்பூரில் அவுஸ்திரேலியாவின் மார்ஸ்,



பூன் சோடி பெற்ற 212 ஓட்டங்களை செயலிழக்கச் செய்துவிட்டனர். கங்குலி 109 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 128 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இதுவரை ஒருநாள் பந்தயங்களில் பெறப்பட்ட கூடிய சதமாக 17 சதங்களைக் குவித்த மேற்கிந்தியாவின் கெயின்சின் சாதனையையும் சமப்படுத்திவிட்டார் டெண்டுல்கர். முடிவில் 50 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றது இந்தியா.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறீலங்காவும் சளைக்காமல் ஆடி வெற்றியை தனதாக்க முயற்சித்தது. அதிரடி வித்தகர் அரவிந்த டி சில்வா தனது 11வது சதமாக 105 ஓட்டங்களைப் பெற்றார். ஆனாலும் முடிவில் 49.3 ஓவர்களில் 301 ஓட்டங்களுக்குள் சிறீலங்கா ஆட்டமிழந்தது. இறுதி 5 விக்கட்டுக்களை 29 ஓட்டங்களுக்குள் இழந்துவிட்டதால், இந்திய அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்று சுதந்திரதின கிண்ணத்தை தனதாக்கியது. இந்திய சுதந்திரக் கிண்ணத்தை சிறீலங்கா வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

- பொன். தாமோதரம்

# லூ மான்ஸ் 1955:

பிரான்சில் உள்ள (Le Mans) லூமான்ஸ் நகரம் மோட்டார் வண்டி பந்தய ஓட்டத்திற்கு உலகப் பிரசித்தி பெற்ற இடமாகும். இன்றும் மோட்டார் பந்தய ஓட்டம் என்று கூறினால் லூமான்ஸ் என்ற இடந்தான் எல்லோருடைய நினைவிற்கும் வரும்.

1955ம் ஆண்டு, ஜூன் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை லூமன்ஸ்ஸில் மோட்டார் வண்டி பந்தய ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மெர்சிடஸ் பென்ஸ் கார் ஒன்று தவறு கட்டுப்பாட்டை இழந்து சுமார் இரண்டரை இலட்சம் பார்வையாளர்கள் இருந்த இடத்தில் மோதி, புரண்டு சுக்கு நூறாக உடைந்தது. இச் சம்பவத்தில் நூறுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் படுகாயமடைந்ததுடன், 82 பார்வையாளர்கள் உயிரிழந்தனர். இத்தனை பேர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தபோதிலும் மோட்டார்வண்டி பந்தய ஓட்ட ஏற்பாட்டாளர்கள் போட்டியை நிறுத்தாது தொடர்ந்து நடத்தினர். இது பற்றிய விபரம் வருமாறு.

பல வண்டிகள் இந்தப் பந்தயத்தில் பங்குகொண்டன. இதில் மைக்கோதோன் (MIKE HAWTHORN) என்பவர் புதிய D-TYPE JAGUAR வண்டியை மிக வேகமாக ஓட்டி முதலாவதாகப் போய்க் கொண்டிருந்தார். உலக சம்பியன் பான்கியோ (FANGIO) தனது சில்வர் மெர்சிடெஸ் பென்ஸில் இரண்டாம் ஸ்தானத்தில் ஓடிக்கொண்டிருந்தார். பியர் லெவெக் (PIERRE LEVEGH) என்ற பிரெஞ்சுக்காரர் தனது மெர்சிடஸ் பென்ஸில் மூன்றாம் இடத்தில் போய்க்கொண்டிருந்தார்.

பிரிட்டிஷ் ஒஸ்டின் ஹீலி (BRITISH AUSTIN HEALEY) என்ற வண்டியை ஓட்டிய லான்ஸ் மக்லின் (Lance macklin) தனது வண்டியை ஒரு மணித்தியாலத்துக்கு 100 மைல் வேகத்தில், மூன்றாவதாக போய்க் கொண்டிருந்த வண்டிக்கு சமமாக போகும்படி செய்தார்.

மூன்றாவதாக போய்க்கொண்டிருந்த பிரான்ஸ் நாட்டு பியர் லெவெக், தனக்கு சமமாக ஓடிக்கொண்டிருந்த லான்ஸ் மக்லினின் வண்டியுடன் மோதியதால் அவரது வண்டி 100 யார் தூரத்திற்கு வளைந்து சென்று அதிர்ஷ்டவசமாக விபத்துக்குள்ளாகாமல் ஒரு இடத்தில் நின்றுவிட்டது. பார்வையாளர்கள் மூன்றாவதாக ஓடிக்கொண்டிருந்த பியர் லெவெக்கின் வண்டியின் வேகத்தை நோக்கி அதிசயப்பட்டார்களே தவிர, லான்ஸ் மக்லினின் வண்டியை பார்க்கவேயில்லை. அதே நேரத்தில் பியர் லெவெக் ஓட்டிச் சென்ற வண்டி அதிகவேகம் காரணமாக உருண்டு, புரண்டு பார்வையாளர்கள் கூட்டத்தை நோக்கிச் சென்று மோதியதில் அவர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அத்துடன் கிட்டத்தட்ட 100 பார்வையாளர்களும் கொடூரமாக இறந்தனர். இருந்தும், பந்தயஓட்டம் தொடர்ந்து நடந்தது. பார்வையாளர்களிடையே அமர்ந்திருந்த இரு பிரித்தானிய வைத்தியர்கள் பிரான்ஸ் நாட்டுக்காரருடன் இணைந்து மக்களுக்கு முதலுதவி செய்தனர். முதலாவதாகவும், இரண்டாவதாகவும் சென்ற வண்டிகளின் சாரதிகளும், லான்ஸ் மக்லினும் சேர்ந்து விபத்தை ஏற்படுத்த ஒரு திட்டமிட்டபோதிலும் இன்னொரு வண்டிச் சாரதியான மைக்கோதோன் என்பவரே ஏதோ திட்டமிட்டு விபத்தை ஏற்படுத்தினார் என ஒரு வதந்தி பரவியது. உண்மை எதுவென ஆராய்ந்தவர்கள் மைக்கோதோன்தான் திட்டமிட்டு இச் செயலை செய்ததாக கணித்தார்களே தவிர உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை.

4 வருடங்களின் பின்பு அந்த மைக்கோதான் மோட்டார் வண்டி விபத்தில் கொல்லப்பட்டார். இதன் பின்பு பிரான்ஸ் அரசாங்கத்தினால் புதிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரும்வரை மோட்டார் பந்தய ஓட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

போட்டியில் பங்குபற்றும் வண்டிகள் சமமான சக்தியைக் (Power) கொண்டதாக இருக்க வேண்டும்.

- பார்வையாளர்கள் உட்காரும் இடம் மைதானத்திலிருந்து போதுமான அளவு தூரத்தில் அமைக்கப்படவேண்டும்
- வண்டிகள் பழுதுபார்க்கும், பெற்றோல் எண்ணெய் ஆகியன கொடுக்கும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடங்கள் பார்வையாளர்கள் இருக்கும் இடத்திலிருந்து அதிக தூரத்தில் அமைக்கப்படவேண்டும்.

ஆகிய மூன்று முக்கிய சட்டங்கள் உலக நாடுகளில் சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. பின்னரே போட்டிகள் ஆரம்பமாயின.

* * *

- கவிதா -

## வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்

## அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள சில தவறான மூடச்சட்டங்கள்:-

அமெரிக்காவில் உள்ள சில மூடத்தனமான சட்டங்கள் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இச்சட்டங்கள் மூடத்தனமானவை என்று தெரிந்தும் அமெரிக்கா அந்த சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. ஆனால் கட்டாயப்படுத்தவில்லை.

★ நியூயோர்க்கில் உள்ள கிறீன் என்ற இடத்தில் யாராவது ஏதாவது காட்சியை நோக்கிக்கொண்டு அதே சமயம் கச்சான் கடலை சாப்பிட்டுக் கொண்டு பின் பக்கமாக நடந்தால் (வழக்கத்திற்கு மாறாக) அது பெரிய குற்றமாக கருதப்பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்படும்.

★ இந்தியானாவிலுள்ள முன்சி என்னுமிடத்தில் மீன் பிடிக்கும் கருவியை மயானத்திற்குக் கொண்டுசென்றால் அதுவும் குற்றமாகும்.

★ நியூஜேர்சியில் உள்ள உணவகத்தில் 'சூப்' குடிக்கும்போது சத்தமிட்டு உறிஞ்சினால் அது குற்றமாகும்.

★ டெனிசியில் உள்ள மெம்பிஸ் என்ற இடத்தில் பெண்கள் வண்டியோட்டக் கூடாது. அப்படி வண்டி ஓட்டுவதாயின் வண்டியின் முன் ஒரு ஆண் சிவப்புக்கொடியுடன் நடக்க வேண்டும். மிஸ்சோரியில் என்ற இடத்தில் தங்கள் வீட்டில் வளர்க்கும் யானைகளை வெளியில் நடத்திக்கொண்டு போவதென்றால் கழுத்தில் சங்கிலி கட்டிக்கொண்டு போகவேண்டும். இல்லையேல் குற்றமாகும்.

★ ஒக்லஹோமா என்ற இடத்தில் மீனுக்கு குடிபானம் பருக்கக்கூடாது. அத்துடன் அங்கு கடற்கரைக்கு அப்பால் உள்ள உள்நாட்டு நீர் அருவியில் (Inland Water) திமிங்கிலம் (Whales) பிடிக்கக்கூடாது பிடித்தால் குற்றமாகும்.

★ இல்லினோய்ஸில் உள்ள கிர்க்லாண்ட் என்னுமிடத்தில் நகரத்திற்கூடாக தேனீக்கள் பறக்கக்கூடாது.

★ பென்சில்வானியா என்னுமிடத்தில் சிறிய தொப்பிக் கடைகளில் டோனற் என்னும் இனிப்புள்ள பிஸ்கட் விற்கக்கூடாது.

★ கென்ரக்கியில் லெக்ஸிங்ரன் என்னுமிடத்தில் ஐஸ்கிறீம் கோர்னை சட்டைப் பையினுள் வைத்துக்கொண்டு போகக்கூடாது.

★ ஒறிகொன் என்ற இடத்தில் உள்ள கோர்வாலிஸ் நகரத்தில் இளம் பெண்கள் மாலை ஆறு மணிக்குப் பின் கடையில் கோப்பி வாங்கக்கூடாது.

★ மசாசுசெற்ஸ் என்ற இடத்தில் உள்ள சலேம் என்னும் நகரத்தில் சிறிய குழந்தைக்கு கோப்பி கொடுக்கக்கூடாது.

★ நெப்ரஸ்காவில் உள்ள வாட்டாலூ என்னுமிடத்தில் தலைமயிர் வெட்டுபவர் (Barbers) காலை 7 மணியிலிருந்து மாலை 7 மணிவரை வெங்காயம் சாப்பிடக் கூடாது.

★ வாஷிங்டனில் பொலிஸ், தீயணைப்புப்படை உத்தியோகஸ்தர்கள் எந்தவித சம்பளமும் இல்லாது ஞாயிற்றுக் கிழமைகளில் வேலைக்குச் செல்லவேண்டும். ஆனால் அங்குள்ள சில முற்போக்குவாதிகளினால் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்பவர்களுக்கு சம்பளம் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

இவையாவும் அமெரிக்காவில் ஒரு காலத்தில் இயற்றப்பட்ட விசித்திரமான விதிகளாகும்.

5 யூலை-19 யூலை




துயர் துடைப்பு நாட்கள் 98

தொடரும் இடப்பெயர்வுகளால்
வீடுவாசல் இழந்து மரநிழலில்
பசியுடனும் பட்டினியுடனும் நோயுடனும்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது
உறவுகளின் துயர் துடைக்க உங்கள்
வீடு தேடி வருகின்றோம்...
எம் உறவுகளின் துயர் போக்க
உங்களால் இயன்ற அதி உச்ச
பங்களிப்பை வழங்குங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்
26, Rue du Departement, 75018 Paris.
Tel: 01 40 38 30 74

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது

தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

(அடுத்த பக்கத் தொடர்ச்சி)

# அணுவைக்...

யான மின்சாரம் அணு சக்தியில் இருந்துதான் பெறப்படுகின்றது. உலகத்திலேயே ஆகக்கூடிய அணு ஆலைகளை நிறுவி அணுசக்தியைப் பாவித்து மின்சாரத்தை எடுக்கின்றது பிரான்ஸ். கனடாவை எடுத்துக் கொண்டால் 30 வீதமான மின்சாரம் தான் அணுசக்தியில் இருந்து கிடைக்கிறது.

லித்துவேனியா பிரான்சுக்கு அடுத்தபடியாக 75% மின்சாரத்தை அணுசக்தியில் இருந்து பெற்றுக்கொள்கின்றது. ஆகையால் அணுஆலைகள் எல்லாம் ஆபத்து என்று சொல்ல முடியாது. சிலவேளை பராமரிப்புகள் அதிகாரிகளின் கவனயீனத்தால் ஏற்படுகிற விளைவுகள் தான் பாதிப்பிற்கு காரணமாகின்றன.

ஆபத்து என்பது அணு உலைகளால் மட்டுமல்ல. மற்றைய ஆலைகளிலும் இருக்கின்றது. இந்தியாவிலுள்ள போபாலை எடுத்துக்கொண்டால் அது ஒரு இரசாயனத் தொழிற்சாலை. அங்கு நடந்த விபத்தால் இறந்த 2000-க்கும் மேற்பட்ட மக்களினுடைய உயிர், பிற பாதிப்புக்களுக்கும் உள்ளான பல்லாயிரக்கணக்கான மக்களினுடைய எண்ணிக்கையும் எந்த அணு ஆலை விபத்தினாலும் ஏற்படவில்லை.

**சில விபத்துக்கள் மறைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றதா?**

இதன் சரித்திரத்தை நாங்கள் எடுத்துப்பார்க்க வேண்டும். அணுசக்தி பயங்கரமானதும் அந்தரங்கமானதுமாகத் தான் தொடக்க காலத்திலிருந்தே சித்தரித்து வந்திருக்கின்றார்கள். அணுகுண்டைத் தயாரித்தபோது இது இரகசியமானது இது பாதுகாப்புக்கு முக்கியமானது. இது வெளியில் தெரியக் கூடாது. இங்கு வேலை செய்யும் ஆட்கள் எல்லாம் இரகசியம் காப்பவர்களாக இருக்க வேண்டும். இதனை உற்பத்தி செய்யும் இடத்தைச்சுற்றி எல்லைபோட்டு ஆட்கள் உள்ளே போக முடியாத அளவிற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு வரப்படுகின்றது. இது அந்தக் காலத்தில் இருந்தே அப்படித்தான் தொடர்கின்றது. அதனால் மக்களுக்கும் இது ஏதோ பயங்கரமானது, இரகசியமானது, என்ற எண்ணத்தையே ஏற்படுத்தி வந்திருக்கின்றது. நாளடைவில் இது மாறி வருகின்றது. ரஷ்யாவில் 'செர்னோபில்' சம்பவத்தை எடுத்துக்கொண்டால் (கடைசியாக நடந்த சம்பவம் அது) அதை எப்படி மறைப்பது. வெளியில் என்ன சொல்வது என யோசித்து ரஷ்யா ஒரு கிழமையாக அதை மறைத்துக் கொண்டுவந்தது. ஆனால் இப்படியான விடயம் நீண்ட நாட்களுக்கு மறைக்க முடியாது. காற்றில் போகிற அணுசக்தி, தண்ணீரில் கலக்கின்ற அணுசக்தி இவற்றையெல்லாம் வைத்து இவை எங்கே இருந்து வந்தது என்பதைத் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். செர்னோபில் அணு ஆலையில் இருந்து அணுக்கதிர் வீச்சு நடைபெறுவதாக சுவிடனிலுள்ள ஒரு கண்காணிப்பு நிலையத்தில் கண்டுபிடித்து விட்டார்கள். முதல் ஒரு கிழமைக்கு ரஷ்யா ஒன்றும் சொல்லவில்லை. பின்னர் முழு விபரமும் எங்களுக்குத் தெரியக் கூடியதாக இருந்தது. நான் எல்லாம் விபத்து நடந்த பின்னர் அந்த இடத்துக்குப் போய் நிலைமைகளைப் பார்த்திருக்கின்றேன். அந்த ஒரு கிழமைக்குள் இந்த அணு ஆலை பற்றிச் செய்ய வேண்டிய பாதகமான பிரச்சாரம் எல்லாவற்றையும் சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்கள் செய்துவிட்டன. அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இந்த ரேகனுடைய ஆலோசகரே இந்த விபத்து நடந்த இரண்டாம் நாள் இந்த விபத்தில் 25000 பேர் இறந்து போனார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான ஆட்களை வைத்தியசாலைக்குக் கொண்டுபோயிருக்கின்றார்கள் என்று அறிக்கை விட்டார். ஆனால் இப்போது நீங்கள் அதைக் கேட்டீர்களானால் உண்மையில் செர்னோபிலில் நடந்த அணு ஆலை விபத்தில் இறந்தவர்கள் 31 பேர்தான். ஆனால் அமெரிக்க ஜனாதிபதியினுடைய ஆலோசகர் 25000 பேர் இறந்துபோனார்கள் என அறிக்கை விட்டபோது, மக்கள் உண்மை என நினைத்திருப்பார்கள்.

**உங்களுடைய விருப்பம் அல்லது ஆசை என்னவென்று கூற முடியுமா?**

தமிழ் மக்களுடைய நலன்கள், அவர்களுடைய எதிர்காலம், அவர்களுடைய வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். எவ்வளவுதான் அணுவைப் பற்றிப் படித்தாலும் நான் ஒரு தமிழ்மகன், ஈழத்துமகன். ஈழத்து மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழவேண்டும். நாங்கள் மலையிலைபோல் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் கடைசியில் வழுக்கிக் கீழே தான் வரவேண்டும். பிறந்த இடத்திற்கும் வாழ்ந்த சூழலுக்கும்தான் வரவேண்டும். ஆகையால் அடிப்படையில் முக்கியம் எங்களுடைய மக்கள் சுதந்திரத்தோடும் சுய கௌரவத்தோடும் வாழவேண்டும் என்பதே.

**ஏன் நீங்கள் தமிழ்மக்களை நேசிக்கின்றீர்கள்?**

அது மனிதரோடு கூடப்பிறந்தது. நீங்கள் ஐன்ஸ்டைனைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவர் ஒரு பெரிய விஞ்ஞானியாக இருந்தும் கூட யூதமக்களுடைய உரிமைக்காக, யூதமக்களுடைய முன்னேற்றத்துக்காக கடைசிக்காலத்தைச் செலவிட்ட பெரிய அறிஞர். அப்படியாயின் மனித இனத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் இது ஒரு கடமையாகும். எவ்வளவு திறமான கொடிகட்டிப் பறக்கிற விஞ்ஞானியாக இருந்தாலும் தன்னுடைய இனத்திற்கு, தன்னுடைய சமூகத்திற்கு சகமனிதர்களுக்கும் உதவிசெய்து அவனுடைய வாழ்க்கையைச் சீர்படுத்த உதவி செய்யவில்லை என்றால், அந்தப் படிப்பினால் எந்தப்பிரயோசனமும் இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. அதற்கு உதாரணமாக பல விஞ்ஞானிகள் தாங்கள் விஞ்ஞானத் துறையில் உயர்ந்து பறக்கிற காலத்தில கூட மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்திருக்கிறார்கள். அந்த வழியில் நானும் என்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கின்றேன்.

**பேட்டி: ஈழமுரசு**


திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்

ஈழநிலா

தொடர்புகட்கு: இயக்குநர்
S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669


# சொற்சிலம்பம்

## போட்டி எண் – 8

**ம் - வ - ர் - க - ல - ப - டி - த - ச - ப் - ம - ரு - க - ர - ழ - ள - ற்.**

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15 க்கும் மேற்பட்ட சொற்கள் ஆக்கப்பட வேண்டும். சொற்கள் 4 எழுத்துக்களுக்கும், அதற்கு மேற்பட்டதாகவும் இருக்க வேண்டும். எந்த எழுத்தில் முதல் சொல் ஆக்கப்படுகிறதோ. அதே எழுத்தில் சொற்கள் அனைத்தும் ஆக்கப்பட வேண்டும். எந்த எழுத்தில் முதல் சொல் முடிகிறதோ அதே எழுத்தில் ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் முடிய வேண்டும்.

மேலதிகமாக எந்த எழுத்தும் சேர்க்கக்கூடாது.
மேலுள்ள எந்த எழுத்தும் விடுபடக்கூடாது.

1)........................ 11)........................
2)........................ 12)........................
3)........................ 13)........................
4)........................ 14)........................
5)........................ 15)........................
6)........................ 16)........................
7)........................ 17)........................
8)........................ 18)........................
9)........................ 19)........................
10)........................ 20)........................

'சொற்சிலம்பம்' எண்–8 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய
**இறுதி நாள்: 24.07.98**
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ........................
முகவரி: ........................
........................
........................
பிறந்த திகதி: ........................
சந்தாதாரராயின் சந்தா இல: ........................

**சொற்சிலம்பம் போட்டி எண்: 7 இற்கான மாதிரி விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| அரிப்பு | வரிப்பு | மரிப்பு | சிரிப்பு |
| தரிப்பு | திரிப்பு | நரிப்பு | தெரிப்பு |
| பரிப்பு | பிரிப்பு | விரிப்பு | கரிப்பு |
| உரிப்பு | சரிப்பு | பூரிப்பு | நாபரிப்பு |
| உபசரிப்பு | உத்தரிப்பு | இன்னும் பல..... | |

சொற்சிலம்பம் –7 இற்கு சரியான பதில் அனுப்பியவர்களில் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

1) ஞ. கௌரி
3940 Steg, Switzerland.
2) கரிகரன் சந்துரு
59939 Olsberg, Germany.
3) சித்திரா
5621 Zufikon, Switzerland.
4) திருமதி ப. கனேந்திரா
UB1-2RA, London.
5) செல்வி துரைராசா சுமதி
13830 Oriet le Chateau, France.

இவர்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் பாரிஸ் மக்கள் கடை நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ஐவருக்கு பாரிஸ் மக்கள் கடை தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்-8 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்-9 உம், 30 ஜூலை - 05 ஓகஸ்ட் 98 ஈழமுரசில் வெளிவரும்.

ஆக்கம்: சிவேசு சசிந்திரராஜா


# ஏழாவது ஆண்டு
# வீர வணக்கம்

## 2ம் லெப். அன்பன் மாஸ்ரர்

முருகராசா - ஸ்ரீதர்

(வல்வை)

அன்னை மடியில்: 12.06.1971
தாயக மண்ணுக்காக: 22.07.1991



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தமிழ் ஈழ மண்ணுக்கு விதையான எங்கள் மாவீரனே, மூத்த குலக்கொழுந்தே! ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும் உன்நினைவுகள் என்றும் அழியா; வீரமரணம் உன்னைத் தழுவி எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் எங்களுள் உன் முகம் வாழ்கின்றது. ஆனையிறவுப் பெருஞ்சமரிலே தமிழ் மண்ணுக்காக தியாக வேள்வியில் தீபமானாய். தமிழ் மண்ணுக்காக தமிழ் உரிமைக்காக விதையான உன்னை அழுத கண்களோடு தொழுது நிற்கின்றோம்.



ஸ்ரீ அப்பா

**உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**

**இலண்டன்**
பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மருமக்கள், மற்றும் உறவினர்களும் நண்பர்களும்.

**ஈழம்**
அப்பரச்சி, மாமா மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மா, தங்கச்சி, தம்பி.

**இந்தியா**
அப்பா, அம்மாச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், இளையம்மா சகோதரர், சகோதரி.

**கனடா**
மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், இளையப்பா, இளையம்மா சகோதரர், சகோதரிகள், அண்ணாமார், அண்ணிமார், பெரியம்மா, தம்பிமார், தங்கைமார்.

**டென்மார்க்**
செல்லண்ணா, அன்ரி, தம்பிமார்.

**அமெரிக்கா**
மாமா, பேபிமாமி, மைத்துனர்.

*தகவல்: தம்பிமார் (இலண்டன்)*
*மு.ஸ்ரீகார் (0181-2889377)*
*மு.பரந்தாமன் (0956-338819)*

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.55 | 1.64 | 0.16 | 0.65 |
| பிராங்பேட் | 1.80 | – | 2.96 | 0.30 | 1.18 |
| லண்டன் | 0.61 | 0.34 | – | 0.10 | 0.40 |
| பாரிஸ் | 6.05 | 3.35 | 9.92 | – | 3.96 |
| சூரிச் | 1.53 | 0.84 | 2.50 | 0.25 | – |
| பம்பாய் | 42.57 | 23.53 | 69.66 | 7.02 | 27.82 |
| கொழும்பு | 65.42 | 36.16 | 107.06 | 10.79 | 42.75 |

## தொப்பிக்கல காட்டில் கடும் குண்டு வீச்சு – புலிகளின் தளங்களை அழிக்கும் முயற்சி தோல்வி

(14.07.98)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிக்கல காட்டுப் பகுதியிலுள்ள புலிகளின் தளங்களை அழிக்கும் நோக்குடன் சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட விசேட நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

தொப்பிக்கலைக் காட்டுப் பிரதேசத்தின் வான்பரப்பில் தோன்றிய கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களை இன்று மேற்கொண்டன.

இப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டளை நிலையத்தையும், பயிற்சி முகாம்களையும் அழிக்கும் நோக்குடனேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் விமானங்கள் புலிகளின் தளங்களை இனங்கண்டுகொள்ளமுடியாமல் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் குண்டுகளை வீசிவிட்டு திரும்பியுள்ளன.

இந் நடவடிக்கை குறித்து செய்தி வெளியிட்ட சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுதலைப் புலிகளின் தளங்களை அழித்து 11 புலிகளை கொன்று விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அடங்கி நடக்கவும்....

எதாக தெரிவித்துள்ள மாணவ தரப்பு பிரதிநிதி ஒருவர் நீதி கோரி உண்ணாவிரதம் இருந்த தம்மீது மிருகத்தனமான தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஐ.நா.....

களை நேரடியாக கண்ணுற்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்கறை கொண்டிருக்கும் இவர் இராணுவ கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பவற்றால் மக்கள் பலியாவது, படுகாயப் படுத்தப்படுவது குறித்து பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடாத்தவும் திட்டமிட்டுள்ளார்.

குடாநாட்டில் மட்டும் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டுள்ள பத்தாயிரம் மிதிவெடிகள் இருப்பதாகவும் இவற்றால் மாதாந்தம் சராசரி 15 இற்கும் மேற்பட்ட மக்கள் அங்கவீனர்களாகி வருவதும் தொண்டர் நிறுவனங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



தோற்றம்:– 16.02.1950

மறைவு:– 11.07.1998

### திரு.கனகரத்தினம் கணேசன்

தமிழீழம் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரான்ஸ் வல் தார்ஜென்தெய்யை (Val d'Argenteuil) வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. கனகரத்தினம் கணேசன் அவர்கள் 11.07.98 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தனலெட்சுமியின் அன்புக்கணவரும்; காலம்சென்ற இராமலிங்கம், கனகரத்தினம் - மாணிக்கம் தம்பதிகளின் செல்வ மகனும்; ரம்யா, மேனகாவின் ஆசை அப்பாவும்; திரு. மகேந்திரநாதன் (பிரான்ஸ்), சந்தானலட்சுமி அருணாசலம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்; உதயசூரியனின் மாமனாரும்; திரு.நடராஜா-குலமணி தம்பதிகளின் ஆசை மருமகனும், கலைவாணியின் பேரனுமாவார்.

அன்னாரது ஈமைக் கிரியைகள் 20.07.98 திங்கட்கிழமை பிற்பகல் 12.15 தொடக்கம் 13.20 வரை Les Joncherolles, Rue Marcel Sembat, Villetaneuse எனும் முகவரியில் இடம்பெறும் என்பதை மிக ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.


மேலதிக தொடர்புகளுக்கு:

திருமதி கணேசன் குடும்பத்தினர் (தொலைபேசி: 0130300956)

## பிரித்தானியாவில் அகதிகள் தொடர்பான சட்டம் மேலும் இறுகுகிறது

பிரித்தானியாவில் குடிவரவு மற்றும் அகதிகள் அந்தஸ்துக் கோருவது தொடர்பான சட்டங்களில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் பல்வேறாக மேன்முறையீடு செய்வதனால் எழும் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவே புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாக உள்விவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவித்துள்ளார். புதிய நடைமுறையின்படி அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களுக்கு ஒரேயொரு மேன்முறையீடு செய்யவே அனுமதி அளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.



இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெற இருக்கும் சார்க் உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ள வரவிருக்கும் இந்திய பிரதமர் வாஜ்பாயை சந்திக்க தமக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கொழும்பு தமிழ்க் குழுக்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தை கோரியுள்ளன.

## வாஜ்பாயை சந்திக்க தமிழ் குழுக்கள் முயற்சி

இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமருடன் தாம் கலந்துரையாட வேண்டிய அவசியம் இருப்பதால் இச் சந்திப்பு நடைபெறுவது முக்கியமானது எனவும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக் கோரிக்கைக்கு இந்தியத் தூதரகம் இதுவரை எதுவித பதிலும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



### வீடு வாடகைக்கு

Noisy le Grand RER- A நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு பெரிய புதிய அறைகள், சமையலறை, குளியலறை, W.C. எல்லாம் தனித்தனியாக சகல வசதிகளுடனும் உடனடியாக குடியிருக்கும் நிலையில் வாடகைக்கு உண்டு.

குறைந்த வாடகை 2000FFrs

தொடர்புகளுக்கு: 0143052623



## 1ம் ஆண்டு நினைவு



படைப்பு:– 16.04.1980

விதைப்பு:– 09.07.1997

### வீரவேங்கை ஈழத்தேவன்

**மத்தியாஸ் டிக்சன்**

(நாரந்தனை தெற்கு, ஊர்காவற்துறை)

ஆர்ப்பரித்து எழுந்து வந்த
அரக்கன் ஜெயசிக்குறு
ஆறாக ஓடிய எம் வீரர் செங்குருதி
அரக்கனைத் தடுத்த அணையானது.
அணையாக நின்ற உங்கள் வீரம்
என்றும் அணையாது எம் நெஞ்சிலிருந்து

உன் பிரிவால் ஏங்கும்

அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், தங்கைமார் மற்றும் சித்தப்பாமார், சித்திமார், மாமா, அத்தைமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

தகவல்: மத்தியாஸ் டக்ளஸ்



AMV

IMPORT - EXPORT

208, Rue du Fbg. St. Denis, 75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அலுவலகத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# கல்முனையில் முஸ்லிம் காடையர்கள் ஏழு தமிழர்களுக்கு வாள்வெட்டு

அக்கரைப்பற்று கல்முனைப் பகுதியில் இரவு நேரத்தில் பயங்கரமான ஆயுதங்களுடன் நடமாடிவரும் முஸ்லிம் காடையர் குழுவொன்று தமிழ் மக்களை இனம்கண்டு வாளினால் கொடூரமாக வெட்டி வருகின்றது.

கடந்த சில நாட்களில் மட்டும் ஏழுபேர் கொடூரமாக வெட்டப்பட்ட நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரத்தில் இப் பகுதியால் செல்லும் தமிழர்களை வழிமறிக்கும் இச் குழுவினர் அவர்களின் முகங்களுக்கு குழ் ஒளியைப்பாய்ச்சி (ரோச் ஒளி) அவர்கள் தமிழர்கள்தான் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் வாளினால் வெட்டிவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

தமிழிலும் சிங்களத்திலும் உரையாடும் இச் குழுவினரை தம்மால் அடையாளம் காட்ட முடியும் எனவும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முல்லைக் கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பல்?

கடற்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்று தரித்து நின்று ஆயுதங்கள் சிறிய படகுகளில் இறக்கப்படுகின்றன என்றவொரு செய்தி சிறீலங்கா பாதுகாப்பு உயர்பீடத்தினை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது.

கடந்த புதனிரவு சிறீலங்கா கடற்படையின் 'ராடார்' திரையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் கடற்கலங்களின் நடமாட்டங்கள் தென்பட்டதை இத்து பாதுகாப்பு உயர் பீடத்திற்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வான்கலங்களும், கடற்கலங்களும் அப் பகுதியில் கடுமையான தேடுதலை மேற்கொண்ட போது இந்திய இழுவைப் படகு ஒன்றினைத் தவிர வேறு கடற்கலங்கள் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறீலங்கா வான்கலங்களும், கடற்கலங்களும் அப் பகுதிக்கு செல்வதற்கு முன்னர் கப்பல் அங்கிருந்து நகர்ந்திருக்கலாம் என மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

இதேவேளை சிறீலங்கா கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை முல்லைக் கடற்பரப்பில் கடற்சமர் ஒன்று இடம் பெற்றுள்ளது.

## ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு யாழ். விஜயம்

வன்னி, வெலிஓயாவில் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கென சிறீலங்கா வந்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரமுகரான எட்வேட் மரியாவோ யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைமை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## 'ஜெயசிக்குறுய்' சுமையைச் சமாளிக்க 600 கோடி ரூபா திரட்ட அரசு முடிவு

'ஜெயசிக்குறுய்' யுத்த செலவீனத்தை ஈடு செய்யும் முகமாக உள்ளூரில் இருந்து 600 கோடி ரூபாவினை திரட்ட சிறீலங்கா அரசு முடிவுசெய்துள்ளது.

7 அல்லது 8 வருடங்களில் மீளளிக்கக்கூடியதான வகையில் மத்திய வங்கி மூலமாக திரட்டப்படவுள்ள இக் கடனுக்கு வட்டி வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே உள்ளூர் கடனாக 4334 கோடி ரூபாவினைப் பெற்றுள்ள அரசு தொடரும் யுத்த செலவீனங்களை மேலும் ஈடு செய்யும் முகமாகவே தற்போது இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஆனாலும் யுத்த செலவீனத்திற்குத் தான் இந்த நிதி திரட்டப்படுகின்றது என்ற விடயத்தை மறைத்துள்ள அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே இச் செயற்பாடெனவும் பிரச்சாரப்படுத்தியுள்ளது.

## அடங்கி நடக்கவும் அன்றேல் அடக்கப்படுவீர்

### திருமலை மாணவருக்கு படை அதிகாரி மிரட்டல்

திருமலையில் உண்ணாவிரதம் இருந்த தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து திருமலை இராணுவ அதிகாரியான கேணல் விஜயசிங்க மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன், இராணுவ உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாத மாணவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் படையினருக்கு உண்டெனவும் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றிலேயே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரி புலனாய்வுப் பிரிவு அதிகாரி, சகா பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் மாணவர்கள் தாக்கப்பட்டமையை நியாயப்படுத்தியதுடன், மாணவர்களை இவ்வாறான நடவடிக்கைகளுக்குச் செல்ல அனுமதித்த பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் எச்சரித்துள்ளனர்.

மேற்படி தாக்குதலில் பல மாணவர்கள் காயமடைந்துள்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## மன்னாரை நோக்கி சார்ள்ஸ் அன்ரனி ஜெயந்தன் தாக்குதல் அணிகள்

மன்னார் பகுதியில் சிறீலங்கா படையினருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி ஜெயந்தன் படைப்பிரிவுகள் நகர்த்தப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா தெரிவித்துள்ளார்.

கனரக ஆயுத அணி, விநியோக அணி, வைத்தியஅணி, ஆகியவற்றுடன் மன்னார்ப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ள இவ் இரு படையணிகளும் விரைவுத் தாக்குதல் மற்றும் மரபு தாக்குதல்களில் சிறீலங்கா படையினருக்கு எதிராக ஈடுபடுவார்கள் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி படையணிகள் மன்னார் பகுதியை நோக்கி நகர்த்தப்பட்டமையை சிறீலங்கா புலனாய்வுத்துறையினர் உறுதிப்படுத்தியதுடன், மன்னார் பகுதியில் உள்ள சகல படைத் தளங்களையும் அதி எச்சரிக்கை நிலையில் இருக்குமாறும் பணித்துள்ளனர்.

லண்டனில்
புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185
நண்டு £3.99
அறக்குளா (King Fish) } £2.99
இறால் £1.49
விளைமீன் கும்பிளா சீலா } £2.99
மரக்கறி (நம்நாட்டு வகை) .99Pence